தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு—10.

திருப்பெருந்துறை
# சிவயோகநாயகி பிள்ளைத்தமிழ்.

★

தரங்கை
# வீரவேலாயுதசாமி பிள்ளைத்தமிழ்.

★

திருவாரூர்
# சத்தியஞானபண்டாரம் பிள்ளைத்தமிழ்.

★

*பதிப்பாசிரியர்*

ஸ்ரீ பண்டித S. முத்துரத்ன முதலியார் அவர்கள்,

*தமிழ்ப் பண்டிதர்.*

★

தஞ்சாவூர் ஸரஸ்வதிமஹால் நிர்வாகக் கமிட்டியாருக்காக

*கவுர காரியதரிசி*

**ஸ்ரீ S. கோபாலன் B. A., B. L., அவர்களால்**

*வெளியிடப்பெற்றது.*

★

— *தஞ்சை* —

*வெற்றிவேல் பிரஸில் அச்சிடப்பெற்றது.*

விலை ] 1950. [ ரூ 2—8—0.

# PREFACE.

This publication contains three Tamil poems in a form peculiar to Tamil poetry, known as 'Pillai Thamizh' or a poetic account of the life of the hero from babyhood to youth. One of the poems is in praise of the deity at Perundurai or Avudayarkoil as it is popularly called: the second is in praise of Lord Subrahmanya at Tarangampadi, and the third celebrates a great Saivasiddhanta teacher called SATYAGNANA PANDARAM of Tiruvarur.

Tamil poetry recognises ninetysix types of composition, and in each type, scores of works have been produced. Though many of them have disappeared, thanks to ravages of time and foreign invasion, yet some of them produced during the last three or four centuries are still extant, and the works published here are among those that have survived.

In these works, the hero is depicted from his infancy to youth, and each stage of growth lends itself to affectionate protrayal at the hands of the author.

The Saraswathi Mahal Library contains a large number of Tamil manuscripts which deserve to be

published, especially, the medical works produced under Raja Serfoji, works on Saiva and Vaishnava Siddhanta, and Christian songs. Most of these works, have already been classified and catalogued by the well-known Tamil Scholar, the late L. Ulaganatha Pillai. We are now editing and publishing them in the Madras Oriental Series.

We are grateful to the Government of Madras for the timely financial assistance given to us to publish these and other works.

TANJORE,<br>10—11—50.

**S. GOPALAN,**<br>HONY. SECRETARY,<br>T. M. S. S. M. Library Committee.

# முன்னுரை

'தஞ்சை ஸரஸ்வதி மஹாலில் ஸம்ஸ்க்ருத நூல்களே காப்பாற்றப்பட்டு வருகின்றன' என்பது நம்மவர்களுள் காணப்படும் பொதுவான எண்ணம். ஆனால், இந்நூல் நிலயத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்ச் சுவடிகளும், சுமார் 800 தெலுங்குச் சுவடிகளும், சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மகாராஷ்டிரச் சுவடிகளும் இருந்து வருகின்றன. இங்குள்ள தமிழ்ச்சுவடிகளைத் தமிழ் ஆராய்ச்சியில்தலைசிறந்த காலஞ்சென்ற **எல். உலகநாத பிள்ளையவர்கள்** நன்றாகப் பரிசோதித்து, விரிவான சரித்திரம் முதலிய குறிப்புகளுடன், விவரமான அட்டவணை தயாரித்துள்ளார். அது சுமார் 1051 பக்கங்கள் கொண்ட மூன்று வால்யும்களாக அச்சிடப்பட்டுள்ளது. இச்சுவடிகளில், அரிய வைத்ய நூல்களும், சங்க நூல்கள், கம்பராமாயணம் முதலிய பிரசித்தமான நூல்களின் பழைய பிரதிகளும், இடைக்காலத்தில் சிறந்த புலவர்களால் இயற்றப்பட்ட தமிழ் இலக்கிய இலக்கண நூல்களும், சைவ வைஷ்ணவ சித்தாந்த நூல்களும், கிருஸ்துவ மதத்தைச் சார்ந்த நூல்களும் அடங்கியிருக்கின்றன.

இவ்வரிய தமிழ்ப் பொக்கிஷத்திலிருந்து இதுவரை வெளியிடப்படாத அரிய நூல்களை, இப்போது நமது சென்னை அரசாங்கத்தாரின் பொருளுதவிகொண்டு பதிப்பித்துப் பிரசுரித்து வருகிறோம். வைத்ய நூல்களில், '**சரபேந்திர வைத்யமுறை**' என்ற பெயருடன், தஞ்சை சரபோஜி மகாராஜனால் பரிசோதித்துக் கைகண்டதெனத் தீர்மானிக்கப்பட்ட முறைகளடங்கிய 18 சுவடிகளும், '**கொங்கணர் சரக்கு வைப்பு**' என்ற அரிய இரஸாயனச் செய்முறை பாகங்கள் (Chemical Processes) அடங்கிய நூலும், **மாடு, குதிரை, கோழி, இவைகளின் நோய்களும், சிகித்ஸைகளும்** அடங்கிய நூலும் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. இலக்கியத்தில், '**பெருந்தேவனார் பாரதம்**' என்று

யாவரும் தேடிவரும் அரிய காவியத்தின் ஒரு பகுதி வெளி வந்துள்ளது. **'இராமையன் அம்மானை'** என்கிற சரித்திர சம்பந்தமான நூலும், **மூன்று பழைய நாடக**ங்களும் வெளிவந்துள்ளன. **'திருச்சிற்றம்பலக் கோவையாருக்குப் பழையதோர் உரையும், திருவாய்மொழிக்கு**ப் பழையதும், இதுவரை எங்கும் அச்சிடப்படாததுமான, **ஸம்ப்ரதாயமான உரையும்,** வெளியிடப்பட்டு வருகின்றன.

இந்த வெளியீட்டில் அடங்கிய 'மூன்றுபிள்ளைத்தமிழ்'ப் பிரபந்தங்களும், சொல் நயம், பொருள் நயம், மிகுந்த நூல்கள். இவற்றின் பிரதிகள் ஏடுகள் சிதைந்தும், எழுத்துக்கள் விளங்காமலும் இருப்பினும், சிரத்தையுடன் அவற்றைப் பரிசோதித்து, வழுக்களைப் போக்கிக் குறைகளைப் பூர்த்தி செய்து பதிப்பித்துக் கொடுத்த நமது தமிழ்ப் புலவர் உயர் திரு. **S. முத்துரத்ன முதலியார்** அவர்களுக்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். இந்நூலின் பிரதிகளை மிகவும் கவனத்துடன் நகல்செய்து, வழுக்களைப் போக்குவதிலும், குறைகளை நிரப்புவதிலும், மிகவும் சிரத்தையுடன் உதவி செய்த ஸரஸ்வதி மஹால் எழுத்தாளர் ஸ்ரீ **மீ. குழந்தைவேலன்** அவர்களுக்கு எமது நன்றி உரித்தாகும். இந்நூல் வெளிவரும் தறுவாயில் அவ்விளைஞர் மறைந்தது மிக்க வருந்தற்பாலது.

இந்நூலையும், இதுபோன்ற ஏனைய அரிய நூல்களையும், பதிப்பித்துப் பிரசுரிப்பதற்கு உதவி செய்துவரும் சென்னை அரசாங்கத்தாருக்கு எங்கள் நன்றியைச் செலுத்துகிறோம்.

ஸரஸ்வதி மஹால்,
தஞ்சை,
10—11—1950.

**S. கோபாலன்,**
கவுரவ காரியதரிசி.

# முகவுரை.

இவ்வெளியீட்டில் தஞ்சை சரஸ்வதிமஹாலில் காப்பாற்றப்பட்டுவரும் மூன்று பிள்ளைத்தமிழ் நூல்கள் அடங்கியுள்ளன. அவை,

1. திருப்பெருந்துறை சிவயோகநாயகி பிள்ளைத்தமிழ்.
2. தரங்கை வீரவேலாயுதசாமி பிள்ளைத்தமிழ்.
3. திருவாரூர் சத்தியஞானபண்டாரம் பிள்ளைத்தமிழ்.

பிள்ளைத் தமிழென்னும் தமிழ்ப் பிரபந்தம் பாட்டுடைத் தலைவரைக் குழந்தையாகப் பாவித்து, அக்குழந்தையின் காப்பு முதலியப் பத்துப் பருவங்களுக்கும் ஏற்ற செயல்களைக் கூறுவதாகும். இது ஆசிரிய விருத்தத்திறை் பாடப்படுவது.

இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும் இரண்டுவகைப்படும். காப்புப் பருவ முதல் சிறுதேர்ப் பருவம் வரையுமுள்ள பத்துப் பருவங்களமைந்தது ஆண்பாற் பிள்ளைத்தமிழ்; பெண்பாற் பிள்ளைத் தமிழ் காப்புப் பருவமுதல் பொன்னூசற் பருவம் இறுதியாகப் பத்துப் பருவங்களைப் பெற்றுவரும். இதற்கு இலக்கணம்:—

…………………… கடவுள் காப்பு
செங்கீரை தால் சப்பாணி முத்தம்,
வாரானை முதல் வகுத்திடு மம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதே ரென்னப்
பெறுமுறை யாண்பாற் பிள்ளைப் பாட்டே

(இல. வி. பா. 46)

அவற்றுள்,

பின்னை மூன்றும் பேதையர்க் காகா
வாடுங் கழங்கம் மானை யூசல்
பாடுங் கவியாற் பகுத்து வகுப்புட
னகவல் விருத்தத் தாற்கிளை யினவாம்.

(இல. வி. பா. 47.)

## சிவயோகநாயகி பிள்ளைத்தமிழ்.

திருச்சிற்றம்பலம்.

"இன்பம் பெருக்கி யிருளகற்றி யெஞ்ஞான்றுந்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியா—யன்பமைத்துச்
சீரார் பெருந்துறையா னென்னுடைய சிந்தையே
யூராகக் கொண்டா னுவந்து"

(திருவா. திருவெ. 11)

இந்நூல் திருப்பெருந்துறையில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவயோகநாயகி அம்பாள்மீது இயறறப்பட்ட பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தமாகும்.

**நூலாசிரியர் :—** இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரிந்திலது. நூலகத்தும் காணப்படவில்லை. ஆராய்ச்சியாளர்களாலும் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஊசற்பருவத்தில் "அரந்தாங்கி சூழ்நாடா" என்று விளித்தலால் இந்நூலாசிரியர் அரந்தாங்கிக்குச் சமீபத்தில் உள்ளவர் என்று கொள்ளக்கிடக்கின்றது. தேவி உபாசனை, யோகம், ஞானம் முதலியவற்றில் கைவரப்பெற்றவர் என்று இவர் வாக்கின் போக்கால் நன்கு உணரலாம். நூலாசிரியர் மந்திர சாஸ்திரத்திலும் சங்கீதத்திலும் பயிற்சி உள்ளவர் என்பது கீழ்க்காணும் செய்யுளால் அறியக்கிடக்கின்றது.

முச்சதுர மூவட்ட மீரெட்டு மோரெட்டு
முளரியிதழ் சூழ்ந்ததற்குள்
முகனையிற் பதினன்கு பத்துடன் பத்தெட்டு முக்கோண
நடுவிந்து வாய்

சச்சபுட முதலான தாளங்கள் தாள்பொரச்
சதகோடி திருமாதரார்
சந்ததம் நடம்புரியும் நாற்பத்து முக்கோண
சக்கரநாயகி வருகவே.

(வாரானை 2.)

**நூல் அமைப்பு :—** பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கு உள்ள பருவங்களில் கழங்காடல் பருவம் ஒன்றெனினும் அதனை விடுத்து நீராடல் பருவத்தைக் கூறுவது பெருவழக்கு. இப்பிள்ளைத்தமிழில் அவ்வாறன்றிக் கழங்காடற் பருவம் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாசிரியர் வாக்கின் போக்கில் குமரகுருபரருக்கும், பகழிக்கூத்தருக்கும் அடுத்த வரிசையில் வைத்து எண்ணத் தகுந்தவர்.

**கழங்காடல் :—** இவ்வாசிரியர் கழங்காடலைப்பற்றி விரிவாகக் கூறியுள்ளார். கழங்காடல் கடைச்சங்க காலத்து பெருவரவிற்றாயிருந்த தென்பது புலனாகின்றது. அவற்றுள் சில வருமாறு :—

பெருங்கதை 46. உழைச்சனவியாவனை.

பக்கம் 104. "முற்றுறு கழங்கொடு முதலகடு பொருந்தி"
„ 16. "கரந்துறை பூவையுங் கண்ணியும் கழங்கும்"

34. "யாழ்கை"

பக்கம் 51. "முனிவியராடும் பந்துங் கழங்கும் பட்டுழிக் கிடப்ப"

இலா-7 நகர்வலம்.

பக்கம் 286. "தேமொழிக் குறுமகள்—பந்துங் கழங்கும்"
(3 மகத. 5 பதுமாபதி)

பதிற்றுப்பத்து.

பாடல்.

15—5. "பரந்தாடு—கழங்கழி மன்மருங் கறுப்ப"

32—8. "எல்லாம் எண்ணின் இடுகழங்குதபும்"

பரிபாடல்.

பாடல்.

81—107. "பந்துங் கழங்கும்"

(புறம். 36) "குறுந்தொடி மகளிர் பொலஞ்செய்
கழங்கிற் றெற்றி யாடுந்"

நமது நூலாசிரியர் மேலும் பல அரிய விஷயங்களைக் கூறியுள்ளார். அவற்றுள் சில வருமாறு:—

"மொய்யார் தடம்புக்கு" (அம்புலி—4)

என்ற அடியால் **மொய்யார் தடம் பொய்கை** யெனத் திருப்பெருந்துறையில் ஒரு விசேட தீர்த்தம் உண்டெனத் தெரிகிறது. இதனைக் கீழ்க்காணும் அடிகளாலும் உணரலாம்.

"மொய்யார் தடம்பொய்கை புக்கு"

(திருவாச. திருவெம். 11.)

"திரைபொரு மொய்யார் பொய்கைத்
திருப்பெருந் துறையைச் சேர்ந்தார்"

(திருவால 27. 33)

**அம்பிகையின் அபிஷேக தீர்த்தம்:—** தரிசிப்பவர்களுக்கு அம்பிகையின் சந்நிதியில் இத்தீர்த்தம் கொடுத்தல் மரபு; உட்கொள்பவர்களுக்கு இது சிவஞானத்தை அளிக்கும்; இது.

"கையார வபிடேகமாட்டு குங்கும மஞ்சள்
கமழ் மஞ்சனம் பருகிமேற்
கருமும் மலக்கறைகள் கழுவிச் சிவஞான
கலையெலா நீவாரெலாம்"

(அம்புலி-4)

என்பதனால் அறியலாகும்.

**குருந்த மரத்தின் அடிமண்** :— *கருங்குட்ட நோயுள்ள வர்கள் இம்மண்ணைப் பூசிக்கொண்டால் அந்நோய் தீரும் ; இது,*

*" முதுகுருந் தடியின்மண் பூசிக் கருங்குட்ட*
*முற்றுந் துடைத்து விடலாம். "*

(*அம்புலி* - 4)

*என்பதனுல் அறியலாகும்.*

**அம்பாள் பீடம் (யோக பீடம்)** :— *உலகத்திலுள்ள சக்தி பீடங்கள் 50 ; அவற்றுள் 49* **காரிய பீடங்கள்** ; *இஃது ஒன்றே* **காரண பீடம்.**

(*தி. பெரு. புரா. பக்.* 71. *பாட.* 3)

**அம்பிகையின் திருநாமங்கள்** :— *சிவயோகாம்பிகை, சிவயோகநாயகி, சிவயோகம்பிரியாள், யோகம்பிரியாள், யோகநாயகி, ஆளுடைநாயகி, ஆளுடையாள் என்பன : இவற்றை இந்நூலால் உணரலாம்.*

**சுவடி அமைப்பு** :— *இச்சரஸ்வதிமஹால் நூல்நிலயத்துள் இந்நூலின் மூன்று பிரதிகள் உள்ளன. ஒரு பிரதி சுத்த மாகவும், மற்ற இரண்டு பிரதிகள் சிதிலமுற்றும், பிழை யுள்ளதாயும் இருக்கின்றன. வேறு பிரதி கிடைக்காமையால் எழுத்துப் பிழைகளை நீக்கி இருந்தவாறே அச்சிடப் பெற்றிருக்கிறது.*

# வீரவேலாயுதசாமி பிள்ளைத்தமிழ்.

முருகன் துணை.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே.

(கந்த. அல. 72)

தரங்கை வீரவேலாயுசாமி பிள்ளைத் தமிழென்பது தரங்கம்பாடியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் வீர வேலாயுதசாமி யென்னும் குமாரக் கடவுள்மீது இயற்றிய பிள்ளைத் தமிழ்ப்பிரபந்தமாகும்.

பிள்ளைத்தமிழிற்குரிய இலக்கணமும் பிறவும் முற்பக் கத்தில் எழுதியிருத்தலால் இங்குக் கூறவில்லை.

**நூலாசிரியர்:—** பெயர் முதலியவை தெரியவில்லை. செய் யுள் நடை மிகச்சிறந்தது, இந்தப் பிள்ளைத்தமிழில் வழங் கும் சில சொற்கொண்டு தரங்கம்பாடிக்கு அடுத்ததாயுள்ள ஊரினைச் சேர்ந்தவர் இவ்வாசிரியரெனத் தெரிகிறது.

**தரங்கையின் பெயர்:—** தரங்கை நகர், அலையெறிதரங்க புரம் எனக் காணப்படுவதால், இவை தரங்கம்பாடிக்குரிய வேறு பெயரெனத் தெரிகிறது.

**நூலமைப்பு:—** முதலில் கண்ணபிரான் துதி கூறியிருத்த லால் முருகன் பக்தியோடு திருமால் பக்தியிலும் சிறந்தவ

ரெனக் காணக்கிடக்கின்றது. வாரானைப் பருவம், அம்புலிப் பருவம், சிற்றில் பருவம் இவைகள் கற்ருர் போற்றும் அரிய கருத்துக்களமைந்த பாடல்களாகத் திகழ்கின்றன.

**சங்க நூற்பிரயோகம்;-** "குறுகுறு நடந்து" (சப்பாணி 2) (புறம் 2.)

**வடமொழிப் பிரயோகம்;-** "முத்தப் பருவம்."

**சுவடி அமைப்பு ;—** ஒரே பிரதிதான் உள்ளது. வேறு ஒத்துப் பார்ப்பதற்குச் சுவடிகள் கிடைக்கவில்லை. 93 செய்யுட்களே உள்ளன. 1, 9, 10, 15, 28 ஏடுகளில் பாதியே உள்ளன. 17, 39 ஏடுகள் இரண்டாக முறிந்துள்ளன. மற்ற ஏடுகளில் சிதலம் அதிகம். இந்த ஒரு பிரதியை வைத்துக் கொண்டு எழுத்துப் பிழைகளை நீக்கி இருந்தவாறே அச்சிட்டு முடித்தனம். ஆதலால் இதில் ஏதாவது குற்றம் காணப்படின் அறிஞர்கள் பொறுத்துக்கொள்வார்களென்று நம்புகிறேன்.

## சத்தியஞானபண்டாரம் பிள்ளைத்தமிழ்.

சிவமயம்.

உலகெலா முணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

(பெரிய புராணம்.)

**பாட்டுடைத் தலைவர்:**—சத்தியஞான பண்டாரம். மாசிலா மணி தேசிகரெனவும் பேர் தரித்தவர். திருவாரூர்ப்பதி யினர். இவர் திருவாரூர்ப்பதியில் நீண்டகாலம் வசித்து அநேக சிஷ்யர்களுக்கு ஞானோபதேசமும், சைவ சித்தாந்த போதனை யும் செய்துகொண்டிருந்தார் என்பது கர்ணபரம்பரைச் செய்திகளாகும். சத்தியஞான கோத்திரம் என்று வழங்கும் மரபுளோர் இன்றும் திருவாரூரில் உள்ளனர்,

**காலம்:**—

கண்ணிற் சிறக்குமா கமமுணர்ந் தினியதச
காரியந் தமிழினிற் செய்
**களந்தைவரு ஞானப்பிர காச**னுலகத் தவர்கள்
கருதரு **சிவப் பிரகாசம்**
பண்ணிற் சிறக்குமுறை யெழுது மன்பூரவனி
பரவு **ஞானப் பிரகாசன்**
பகரரிய விருவருந் தலைவணங்கக் கருணை
பாலிக்கு மொரு குரவனே
எண்ணிற் சிறக்குமுயர் முத்தலத்தினு முதன்மை
யீதென வெடுத் திசைக்க
வெவ்வுயிர்க ளெவ்வுரு வெடுக்கினும் சாரூப
மெய் துவிக்கும் புதுமைசேர்

மண்ணிற் சிறக்கும் **புகழ்க்கமலை நகர்**மேவு
மானபூடணன் வருகவே.
வளவர்வள நாடவர் சிவசமய பரிபால
**மாசிலா மணி** வருகவே.

இந்தக் கவியில் தசகாரியம் தமிழினில் செய்த களந்தை ஞானப்பிரகாசருக்கும், சிவப்பிரகாசத்துக்கு உரை எழுதிய ஞானப்பிரகாசருக்கும், இவர் ஞானகுரு என்று சொல்லியிருத் தலால், அவ்விருவருடைய காலத்தவரென்று அறியக் கிடக்கின்றது. வேறு இந்த நூலாசிரியரைப்பற்றியோ இப் பிள்ளைத்தமிழ்த் தலைவர் சத்தியஞான பண்டாரத்தைப் பற்றியோ காலம் முதலியன உணர்வது அரிதாகிறது.

**நூல் அமைப்பு**:— சைவ சமயமும், வெண் திருநீறும், ஐந்தெழுத்தும் இந்நூலகத்துள் அடிக்கடி கூறப்படுகிறது. நூலாசிரியர் சைவ சித்தாந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டவர் ஆனபடியால் பலவிடத்துச் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பயின்று வருகின்றது.

**சுவடி அமைப்பு**:— காப்புப் பாட்டுமுதல் நூற்றியொரு பாடல்கள் உள்ளன. இந்நூற் பிரதி தலைப்புகள் சிதைந்து, ஏடுகள் முறிந்து உள்ளது. வேறு பிரதிகள் கிடைக்காமையால் இவ்வோர் பிரதியை மட்டும் வைத்துக்கொண்டு எழுத்துப் பிழைகளை மட்டும் நீக்கி அச்சிடப்பெற்றது.

ஆகவே அறிவுடையோர்கள் இவற்றிலுள்ள பிழை களைப் பொறுத்துக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**நன்றியுரை :—**

சரசுவதிமால் நூல் நிலயத்திலுள்ள அச்சிடப்பெறாத பிரதிகள் மிகப்பல. அவற்றுள் இதுவும் இதுபோன்ற மற்றுமுள்ள அரிய நூல்களும் வெளிவர அடியேனை இங்கு வரப் பணித்து இவ்வரும்பெரும் தமிழ்ப்பணியை என்மீது ஏற்றிய சரஸ்வதி மஹால் கௌரவ காரியதரிசி **பிரம்மஸ்ரீ S. கோபாலன் B.A.B.L.,** அவர்கட்கு என் நன்றி உரித்தாகுக. மற்றுமோர் பெரியாராகிய **பிரம்மஸ்ரீ K. வாசுதேவ சாஸ்திரியார் B.A.,** அவர்கட்கும் என் நன்றி உரித்தாகுக.

சரசுவதிமகால்,
தஞ்சை.
31—10—50.

பண்டித S. முத்துரத்ன முதலியார்,
தமிழ்ப் பண்டிதர்.

## "திருப்பெருந்துறை"

# சிவயோக நாயகி பிள்ளைத்தமிழ்.

| முதற்குறிப்பு | பாட்டு எண். | முதற்குறிப்பு. | பாட்டு எண். |
|---|---|---|---|
| அடவியி ... | 77 | ஒலி மறையின் ... | 93 |
| அண்ட ... | 95 | ஒன்றெறிந் ... | 75 |
| அண்டமுகட் ... | 15 | கஞ்சனைப்போல ... | 70 |
| அந்தப்புரமே ... | 24 | கண்டகா ... | 65 |
| அயன்முடி ... | 53 | கருமாயக் ... | 12 |
| அருப ... | 58 | கலைக்கு ... | 51 |
| அழகு ... | 49 | காடாய ... | 33 |
| அழகு ததும்பிய ... | 80 | கால கால ... | 37 |
| அளிக ... | 76 | கொம்பாலுங் ... | 11 |
| ஆடு ... | 97 | கொம்மை ... | 83 |
| ஆதார ... | 2 | சடை சுமந்தது ... | 57 |
| ஆயிரமு ... | 85 | சாலையிளங் ... | 81 |
| ஆலிமுத்தந் ... | 43 | சிட்டர் ... | 8 |
| ஆழி ... | 100 | சூழிசை ... | 74 |
| ஆறு ... | 38 | செங்கனை ... | 63 |
| ஆனபர ... | 5 | செங்கனி ... | 84 |
| இலக்கணந் ... | 20 | செய்யதா ... | 71 |
| இறைமாய ... | 55 | செவ்வாய் ... | 22 |
| உரியநின் ... | 72 | தக்கனூர் ... | 62 |
| உருவி ... | 78 | தடங்களி ... | 35 |
| எங்கால் ... | 44 | தந்தூரிற் ... | 14 |
| எவர்க்குவந் ... | 19 | தரத்தகிண் ... | 17 |
| எறுழி ... | 46 | தருக்கமுஞ் ... | 18 |
| ஏனக்குருளை ... | 21 | தருணோதயக் ... | 73 |
| ஒப்பற்ற ... | 10 | தாமரைக் ... | 34 |

| முதற்குறிப்பு. | பாட்டு எண். | முதற்குறிப்பு. | பாட்டு எண். |
|---|---|---|---|
| திருவுளம் | ... 91 | மதியுளந்தரு | ... 59 |
| திலகசிந்துர | ... 60 | மந்திரபாலன | ... 66 |
| துளப | ... 50 | மலையாசன | ... 79 |
| தேமேவு | ... 92 | மனது | .... 47 |
| தேனு | ... 96 | மாதபோதனர் | ... 98 |
| நாயிறு திங்கள் | ... 86 | மாதவர் | ... 26 |
| நீளிடை | ... 88 | மாமகீதல | ... 40 |
| நீறு | ... 90 | மாவாக் | ... 42 |
| பங்கயமா | ... 3 | மானே | .... 41 |
| பட்டுடையுஞ் | ... 13 | மிக்கா | ... 23 |
| படுகை | ... 7 | முகிலாண்ட | ... 1 |
| படிவாய்க் | ... 32 | முச்சதுர | ... 52 |
| பனிநெடுங் | ... 56 | முடிக்கணிங் | .... 16 |
| பாகு | ... 99 | முண்டக | .... 68 |
| பாடக | ... 28 | மும்மண்டலத் | ... 61 |
| பாடக பஞ்சடி | ... 87 | மூவருக்குங் | .... 4 |
| பாடிய வேத | ... 27 | மேரு | ... 89 |
| பாடுநாரதர் | ... 36 | மேரு மலையைக் | .... 94 |
| பாததாமரை | ... 39 | வானவர் | .... 30 |
| பிறவாத | ... 54 | விந்துநடு | ... 6 |
| பின்னெடு | ... 82 | விம்ப | ... 69 |
| புகழுயர் | ... 9 | வெங்கடு | .... 67 |
| பொய்யார் | ... 64 | வேதாண்ட | ... 31 |
| மகுட | ... 48 | வேதியர் | ... 29 |

முருகன் துணை.

# "திருப்பெருந்துறை"

# சிவயோக நாயகி பிள்ளைத்தமிழ்.

## காப்பு.

வல்ல சிவயோக மன்னும் பெருந்துறைவாழ்
நல்ல சிவயோக நாயகிமேல்—சொல்லிப்
பரசுவற்கப் பிள்ளைப் பருவத் தமிழ்க்கங்
கரசுவற்கப் பிள்ளையே காப்பு.

## சுப்பிரமணியர் துதி.

முகிலாண்ட வெற்பரசன் முதுதவஞ்செய் வா[வி]
முண்டகப்பச் சிளங்கதிர்போல் முளைத்தபூம் பாவை
நகிலாண்ட மோகினியாய் நன்முகந்தற் கிளைய
நாரணியைச் சிவயோக நாயகியைப் புரக்க
துகிலாண்ட கொடியாடத் தோகைமயில் நடிக்குஞ்
சூளிகையு மாளிகையுஞ் சூழ்ந்த பெருந்துறையில்
அகிலாண்டங் கடந்தசீ ரன்றொருமா லிடனுக்
*கருங்குருவாய் வந்தளித்த நங்குருவா னவனே. (1)

---

* கருங்குரு சேர்க்கை.

## சதாசிவம்.

ஆதார கமடமு மனந்தனுந் தருமாதி
அரியணையும தன்மீ
தெழுந் தலர்கமல மும்பரா பரவிந்துநாதகன்
னிகையுமா மாசனத்தின்
மீதான பஞ்சமுக மூர்த்திவிச் சகதேச
விமலபர மானசோதி
விஞ்ஞான சகளநிட் களசதா சிவனடிகள்
வினயமொடு மனதில்நினைவாம்
மாதாரு விந்திராணி திருவாணி முனிமாதர்
வானமாதர் மீனமாதரார்
மணமாதர் முதலான பெண்மா தரசெலாம்
குணகாதம் புணர்வுநீங்கி
பாதார விந்தஞ் சிவபவக் கயிலையிற்
பதியைநீங் கிப்பனிவரைப்
பால்வரு பெருந்துறைச் சிவயோக வல்லியைப்
பரிவொடுங் காக்கவெனவே. (3)

### (வேறு.)

பங்கயமா துளங்கஞ்செவ் வரத்தமா ணிக்கம்
பவளமிளங் கதிர்சூத பல்லவமின் னொளிபொற்
சங்கையில்பே ரழகுடைய பெருந்துறைப்பூம் பஞ்ச
நாயகியைச் சிவயோக நாயகியைப் புரக்க
கங்கையிளம் பிறைச்சடையுங் கருணைவிழி மூன்றுங்
கடவுளரைக் காத்ததிருக் கண்டமுந்தோ ளென்கும்
அங்கையின்மான் மழுவர்த மபயமுத லேந்தி
ஐயைந்து திருவுருக்கொண் டருளியநா யகனே. (3)

## விநாயகர்—முருகக் கடவுள் துதி.

மூவருக்குந் தமக்குமுயி ரெவற்றினுக்குந் தாயாய்
முழுதுலகின் விளையாட்டின் முறையான முன்னை
யாவருக்கும் மகவாகும் பெருந்துறைவா ழிறைவி
யெங்கள்சிவ யோகவல்லி யிருபாலுங் காக்க
தேவருக்கு முனிவருக்குங் கணங்களுக்குந் தவத்தின்
சித்திக்கும் புத்திக்கு முத்திக்குங் குருவாம்
மாவருக்க முகத்தானு மவற்கிளைய வாறு
மறிவருக்க மகிழ்ந்துபணிந் தெழுந்தே. (4)

---

## திருமால் துதி.

ஆனபர விச்சைமுத லைந்துசத் தியுமாகி
ஆருயிர்க் கருளினாலே
ஐந்தொழில் நடாத்திமுக் காரணத் திடையாகி
யாகம சித்தாந்தமும்
நாணிவரு வேதாந்த முங்கடந் தன்பருள
நண்ணிப் பெருந்துறையில்
நன்குருந் தடிநீழல் மேவிவளர் சிவயோக
நாயகியை யினிதுகாக்க
தேன்குழலார் பிரம னாகுதி கொடுத்திடச்
செஞ்சுடர் விளக்கமாகத்
தேவரொடு பண்ணவர்கள் சிந்தைகளி கூர்ந்திடத்
திகழுமில வர்தகைவளர்
கானமர் கடுக்கையந் தொடையிலனி கடவுளைக்
கடிமணஞ் செய்தநாளில்
கன்னியவ ளைக்கைப் பிடித்துதக நீர்பெய்த
கார்வண்ண நெடியமாலே. (5)

---

## பிரமன் துதி.

விந்துநடு மிசையெழுது முக்கோண முஞ்சூழ
மேலெழுது மறுகோணமும்
விரவுவட் டப்புறத் தட்டத் தளக்கமலமும்
மேற்சதுர ரேகைமூன்று
மிந்துதவ ழுஞ்சடா மகுடமுஞ் சபவட
மிலங்குபொத் தகமுமேந்தி
இருமைதிக ழுந்துறைசை யோகநா யகிகமல
விருசரண மினிதுகாக்க
முந்திவரு மண்டரண் டங்கள்புவ னங்கட்கு
மூலகா ரணமுதன்மையாய்
மூவர்க்கு ளொருவரென முத்தொழிற் றலைவராய்
முதுமறையை மொழிகடவுளாய்
பந்தமலர் பதுமா சனத்தின்மா தேவுமாய்
பகர்வாணி கேள்வனுகும்
பைம்பொன்மலர் நிகரவரு நான்முகப்
பிரமனே பரிவொடுபணிந்தெழுந்தே. (6)

## சத்த மாதர்கள்.

படனுகங் கடனுகம் படருடற்கமல மால்வரைப்
பதினலென் றிலோகம் பணிவிடைப்படி சுமாடுகொள்
பரமாறுந் திறமேறுந் பதமிருத்தியு மூளாவிகொள்
பசிகூருஞ் சுசிதீரும் படிபுரக்குமருளாகரித்
திடரொடுங்கரையொடுந் திரையுவட் டயவரால் பொருசினை
[மேவுங்
கருமேகஞ் செருமூலைப் பெருகுபால் கமழ்செழுநீருங்
கழிநீருஞ் செறிவயற்றுறைசை நாயகி
சிவயோகம் பிரியாடன் றிருவடிச்சுவடு சூழ்பவர்
கடலெழும் புவியெழுங் கருணையிற்பேறு பிராமணி
கயிலாயம் பயிலாயங் கதிர்பெறத்தரும கேசுவரி

கதிர்வேல்கொண் டுலகாளுங் களிமயிற்கடிய வாகினி
கருதாவஞ் சகரோடுங் கலகமிட்டசக மோகினி
அடலாழுந் திரைமேல்கொண் டயில்மருப்புள வராகினி
அதிகாரஞ் சுராஙரடென் றதிரிக்குமயிராபதி அடையாளங்
கொடிமேல்நின் றலகைகொட்புறு நிகேதினி கேதினி
அனையமாரிங் கெழுபேரென் றவனியிற் புகழுமாதரே.

---

## அட்டமூர்த்திகள் துதி.

### ( வேறு. )

சிட்டர் சித்தக்கமல மகலாத சிற்சத்தி
சிட்டர்தஞ் செல்வமனையாள்
சிட்டரைப் பரிபா லனஞ்செய் கருணையே
திருவுருக் கொண்டபரமர்
சிட்டர்வாழ் வாகிய பெருந்துறைப் பதியிற்
றிருக்குருந் தடிநீழலிற்
சிவயோக நாயகியை அவளடித் தாமரைகள்
சென்னியிற் கொண்டுகாப்ப
அட்டகுல வெற்புக்க ளட்டமா ஞகங்கள்
அட்டமா தங்க ளோ(டு)
அட்ட ........... மலர்மாதர் அட்டகுள
மட்டவர்க்குத் தேவிமார்
அட்டமத ஞங்கணை யட்டமங் கலரூபர்
அட்டயோ கினிகளுடனே
அட்டமா சித்தியவ ரட்டவித் தியேசுரர்கள்
அட்டமூர்த்திகள் யாருமே. (8)

---

( வேறு. )

புகழுயர்முறைமை நீதிகோல்வளர் புரவலர்பணி புரூரவாய்
புயமணி புரியின் வேதவிதியர் [மையர்
புவிதரைமுதல்முன் னூறுபேர்தொகை
திகழ்தருஞ்சுருதி ஞானநூல்கலை சிவனருளுருவமாகவாழ்பதி
சிவபுரமருவும் யோகநாயகி திருவடியிணைகள் சூழ்பவை
பகருமொழிக ளெழுகொடிகள் பதமிசை யெழுதொனுத
நான்மறைப் பயனொடு பயிலுமாறுமா கலை பரநெறி
புகலுமாகம மாதிகள் நிகழ்கதை பயில்மூவாறு பாவினம்
நினைதமிழ் முதலிமூவர் பாடலும்
நிருமல னெழுதும் வாசமாமணி நிலைபல் கலைகள்
யாவுமேவியே. (9)

## முப்பத்து முக்கோடி தேவர் துதி.

( வேறு. )

ஒப்பற்ற கயிலாய நாதனு ராதியாய்
உரைகின்ற சனவன்மியன்
ஞுற்றுதரிய சதுர்வேத மங்களங் குறுமுனிவன்
உளன்றுகற் சிவபுரமெனும
செப்புற் றிலங்கும் பவித்திர மாணிக்கம்
திருப்பெருந் துறையென்னவே
திருநாம மேவிய குருந்தடியி லமருஞ்
சிவயோக வல்லிபதமே
முப்பத்து முக்கோடி விண்ணவர்கள் தலைவனோடு
முனிவரெண் மூவிரட்டி
மு.திர்கதிர்கள் பன்னிருவர் பதினறுவர் கணநாதர்
மூவகைய ரிருமூன்றதாம்
அறுபத்து மூவர் மாணிக்க வாசகர்
தண்டியனை வருஞ்சிர காமமைத்
தன்புகொண் டென்புருக ஆனந்த வருவியோடும்
அகலாது சூழ்வார்களே. (10)

**காப்பு முற்றும் குருவே துணை.**

உ

முருகன் துணை.

# சிவயோக நாயகி பிள்ளைத்தமிழ்

## செங்கீரைப் பருவம்.

தொம்பாலுங் குயிலாலே கூவிக்கிர வெல்லாம்
கொய்மலருந் தண்மணமும் பெய்மதுவுந் தாதோ(டு)
எம்பாகங் கொள்வீரென் றும்பர்க்குத் தாகத்தனி
துய்க்குந் துறைசைக்குட கனிதுய்க்குங் கிளியே
பைம்பாகுஞ் செந்தேனும் பாலும் போலுஞ்
சொற்பண்ணிசையுங் கண்ணசைவும் பாலித்துப் பரம
செம்பாகங் கொள்வாளே செங்கோ செங்கீரை
சிவயோகப் பிரியாளே செங்கோ செங்கீரை, (11)

கருமாயக் கடலூடே கரைகாணுதொடுங் காமாதிப்
பலபண்டக் காய்ப்போ நாவாய்
சுருபாதிக் குறிமுற்றும் சோதித்துக் கொளுந்
துலைமாறுத் துறைசைக் கோரரசே
பொருமாதுக் கினியாளே புவிமாதுங்கமலப் பூமாதும்
பாமாதுங் கோமாதென் றோதுந்
திருமாலுக் கிளையாளே செங்கோ செங்கீரை
சிவயோகப் பிரியாளே செங்கோ செங்கீரை. (12)

பட்டுடையுஞ் சிற்றிடையும் பாடகமுந் தாளும்
பணைமுலையும் திருமிடறும் பவளச் செவ்வாய்
சட்டுவமுங் கையுந் தண்முகமுங் கண்ணருளுந்
தார்குழலுங் கண்காணத் தவமென் செய்தேனோ
பொட்டுடலம் பெற்றதனாற் கிட்டிய திப்பேறோ
போதாதோ மாதாவே புண்ணியமே என்றுஞ்
சிட்டருளத் துறைவாளே செங்கோ செங்கீரை
சிவயோகப் பிரியாளே செங்கோ செங்கீரை. (13)

தந்தூரிற் கயல்பாயத் தாமரைத் தாள்சாயத்
தள்ளிவிழுந் தலைதெறியக் கள்ளவிழும் வெள்ள
நந்தூரும் கடல்வெள்ளா றுடனோடித் துறைவாய்
நறைசைவத் துறைசையி லோர்நடை கற்குங்கொடியே
முந்தூரும் செங்கதிரிற் பிறைபுகுமா றல்லால்
முழுமதியிற் செங்கதிர்சேர் முறையிதெனப் புனையுஞ்
சிந்தூரத் திருநுதலாய் செங்கோ செங்கீரை
சிவயோகப் பிரியாளே செங்கோ செங்கீரை. (14)

அண்டமுகட் டண்டித் திக்கெட்டும் போயளவா
யகிலமடிப் படவோவிட் டதலம்புக் கிடலால்
கொண்டல்நிறத் தரிபோலக் குளிர் கோலங்
கொண்டகுந்த நிழற்றுந் துறைசைக் கோமளயாமளமே
தொண்டருளத்துள் விளக்கே சூரர் சூடாமணியே
சுருதிக்கும் பரிதிக்கும் துணியாத பொருளே
தெண்டிரையிற் *றருமமுதே செங்கோ செங்கீரை
சிவயோகப் பிரியாளே செங்கோ செங்கீரை. (15)

---

* படு—பாடபேதம்.

## (வேறு.)

முடிக்கணிந் திடுவதும் நொடிக்கநின் றதும்விழிகள்
முன்காண மேவுமதுமேல்
முயற்சிகொண் டெழுமன மகிழ்ச்சிதந் தருள்வது
முதிர்ந்தாசை கூறுவதுமோர்
தடித்தெனும் படிமிடி கெடுத்திரந் தினியன
தரும்போக மீகுவதுநீ
தரத்தகும் பதவிகள் எனக்குவந் ததுநினது
தண்பாத தாமரைகளே
கொடிக்குலங் கதலிகமு கிற்படர்ந் தொழுகிய
கொழுந்தோடி மாளிகையினீள்
குடத்தொடுந் துகிலிகை யிடக்கையந் தழுவிமிசை
கொண்டேறி வா னடவிசூழ்
செடிப்பொதுப் புள்வள வயற்பெருந் துறைமுதல்வி
செங்கீரை யாடியருளே
திருக்குருந் தணிநிழ லிருக்குமம் பிகையினிது
செங்கீரை யாடியருளே (16)

தரத்தகிண் கிணியரை வடத்தொடைப் படைசுடிகை
தந்தார்முராரி முதலோர்
சமைத்த செங்கனி தளிர்விளக்கெரிந்திடு மணிகள்
சந்திராதிதேவர் தருவார்
இரட்டுவெண் கவரிமுத லட்டமங்கல மிடுவர்
இந்திராணி யாதிமடவார்
இரட்சையுந் திலகமு மிலகியஞ் சனமிட
விருந்தார்க டாபதமினர்
துரத்தனம் புவிகவி மகத்தனம் பதவிகள்
சுகம்பேணு மாசையவர்நோய்
துரக்குநெஞ் சினருடல் துறக்கு மன்பினர்பலர்
தொழும்போது வாறுபெறவே

சிரத்தையுங் கனவருள் வரப்பெருந் துறைமுதல்வி
செங்கீரை யாடியருளே
திருக்குருந் தணிநிழ லிருக்குமம் பிகையினிது
செங்கீரை யாடியருளே. (17)

தருக்கமுஞ் சமயிகள் பெருக்கமும் பயில்வது
தயங்காது நீதிநெறியோர்
தழற்குள்நின் றுணர்வுகள்
ஒழித்துடம் புலறிய தவந்தானும் ஞானநிலையோ

உருக்கமுந் தொழுகையு மடக்கமும் பெறலறி
வுளங்கொளும் வேலியதுதான்
உனைத்தொழும் பெரியவர் அடித்தொழும் பவையென
உணர்ந்தேனின் நாளினமுதே

மருக்கொழுந் தலரித மரத்தை சண்பக நறவ
மந்தாரை மாதளைகுரா
வருக்கைசந் தகில் மகிழ் கருப்புரந்......சவாம்
பாடலாதி புடைசூழ

தெருக்களின் சிறகுள் வளப்பெருந் துறைமுதல்வி
செங்கீரை யாடியருளே
திருக்குருந் தணிநிழ லிருக்குமம் பிகையினிது
செங்கீரை யாடியருளே. (18)

எவர்க்குவந் ததுதிரு எவர்க்குவந் ததுகளி
இருந்தார்க சோகமணுகா
தெவர்க்குளங் களிமகிழ எவர்க்குளந் தெரியுமறி
வென்றுனின் மாடமதில்சூழ்

பவர்க்குவந் ததுதொழும் பவர்க்குவந் ததுபுகழு
மன்பாலென் னுளமுளவோர்
அவர்க்குவந் ததுவெனில் அவற்றினென் றினுமறி
வடைந்தேனி லெனையருள்வாய்

தவக்கொழுந் தறிவரு மறைக்கொழுந் துலகுக
டருந்தேவர் மூவரினுமோர்
தலைக்கொழுந் திரசத மலைக்கொழுந் திமையவர்
சஞ்சீவியா நினைவாழ்
சிவக்கொழுந் துறைதிரு வடிப்பெருந் துறைமுதல்வி
செங்கீரை யாடியருளே
திருக்குருந் தணிநிழ லிருக்குமம் பிகையினிது
செங்கீரை யாடியருளே. (19)

இலக்கணந் தெரிவது மிலக்கியம் பழகுவதும்
எம்பாவை கோவைமடல்தூ
தெனப்புனைந் திடுவதும் முதுக்குறைந் தவரொடும்
இதம்பேசி யாகமமெலா
மலைத்தறிந் தொருவகை நினைத்துநின் றனுபவம்
வந்தாரும் ஞானவகையால்
மறப்பிறந் திடுமுயிர் இழப்புமுன் சரணசின்
மயங்கா னுபாய வழிகாண்
மூலைத்தழும் புனதுகை வளைத்தழும் புடையதிரு
மொய்ம்போடு மார்புமொருகோ
முறைப்பிரம் படிபடு புறத்தழும்புட னொருவன்
மூங்காதி மோதிமுடிசேர்
சிலைத்தழும் புடையவ ரடிப்பெருந் துறைமுதல்வி
செங்கீரை யாடியருளே
திருக்குருந் தணிநிழலி ருக்குமம்பிகை யினிது
செங்கீரை யாடியருளே. (20)

**செங்கீரைப் பருவம் முற்றிற்று.**

---

உ

முருகன் துணை.

# சிவயோகநாயகி பிள்ளைத்தமிழ்.

## தாலப் பருவம்.

ஏனக் குருளை யரிக்குட்டி யாமைப்
பார்ப்பு மீன்குழவி
இரக்குங் *குட்டன் மறைமாணி யிளங்கோ
மதலை யாதவர்செய்
கானத் தொறுவர் குலக்காளை கக்கி
மறியென் றுற்பவித்து
கடைக்கண் வளர்ந்து மலர்ந்துலகங் காக்குங்
கருணைக் கடனீயோ
மோனத் திருந்து கண்மூக்கின் முனைவைத்
திதய கமலத்து
முளைக்குந் தீபப் பெருகொளியின் மூழ்கு
மறிவிற் பெரியோரால்
‡சானித்தறிய வரும் பொருளே தய்யால்
தாலோ தாலேலோ
தாயே துறைசைச் சிவயோகத் தலைவி
தாலோ தாலேலோ (21)

செவ்வாய் விளர்ப்பி னவநீதத் திருட்டுக்
கண்டு பிடித்துரலின்
சேர்த்துக் கயிற்றால் விசித்தொறுப்பச்
சிந்தைக் கருணை மடைதிறந்தாங்

---

* குயிலெனப் பேசுமெங்குட்டன் [திருக்கோ. 224]

‡ சானித்தல்—தியானித்தல் சிவஞா போ. (9-3-1)

கவ்வாய மலர்க்கண் ணீர்ததும்ப வசோதை
விடுத்துத் தாலாட்ட
வாடை மடிமேற் கண்வளர்ந்த வண்ணல்
நீயென் றறியோமோ

பொய்வா யுலகன்முதலாகப் புகலத் துவித
மீருகப் புறமென்
றகமென் றுரைக்கின்ற பொரு ளூற்
சமயத் தறிவரிய

சைவாகம நூற் பொருட்குவெளி தந்தாய்
தாலோ தாலேலோ
தாயே துறைசைச் சிவயோகத் தலைவி
தாலோ தாலேலோ. (22)

மிக்கா யுலக மீரேழு மிதப்பப்
பெருகும் பிரளயத்து
வெள்ளத் தலையோ ராலிலைமேல் வேதந்
தானே தாலாட்டத்

தெக்கா யகிலத் துயிர்முழுதுந் திரட்டி
விழுங்கி யழுங்குதலைச்
செவ்வாய்க் குழவி வடிவாகித் திருக்கண்
வளர்ந்தாய் தாலேலோ

பொக்கா யமுனைத் திரை கொழிக்கும்
புனல்பூந் துருத்திப்
புறங்கரையிற் புலம்புஞ் சுரிவாய் வலம்புரியில்
புதல்வியாகிக் கண்வளர்ந்து

தக்கா யணியென் றொருநாமந் தரித்தாய்
தாலோ தாலேலோ
தாயே துறைசைச் சிவயோகத் தலைவி
தாலோ தாலேலோ (23)

அந்தப் புரமே திருக்காஞ்சி அரங்கத்
தலமே பள்ளியறை
யாடல் பார்க்கு மிடமணிமன் ருரூர்
கொடுக்கு மாத்தானம்

கந்தப் புதுப்பூங் காவனமாங் கடம்பாடவி
மஞ்சனச் சாலை
காசி வளர்க்கு மறச்சாலை கண்டாயையா
றுனக் கம்மே

முந்தப் பரமன் கலைமடந்தை முனிபுட்
பதந்தன் சங்கரன்பின்
முதிர்ந்த சித்தன் பரமன் முதலோர்
மொழிநற் கவியுடனே
சந்தத் தமிழும் புனைந்தருளுந் தையால்
தாலோ தாலேலோ
தாயே துறைசைச் சிவயோகத் தலைவி
தாலோ தாலேலோ. (24)

அமரா பதியோ மனையகத்தில் அளகைக்
கிறைவன் சரக்கறையில்
அரிய திருமால் மறுமார்பில் அன்று
பார்த்த திருநோக்கம்

நமரா தரிக்கத் திரும்பாதோ நல்லூர்
வயலிற்புகு வெள்ளம்
நரலைக் களவாய்ப் புகுந்தக்கால் நன்
செய்யாமே யினியம்மே

பமாரம் பிகையே பரமன் புவனும்
பிகையே தவமுனிவர்
பரவுந் திரிபுராம் பிகையே படிமேற்
பக்ர மோகாம்பிகையே

சமராம் பிகையே யெனநாமந் தரித்தாய்
தாலோ தாலேலோ
தாயே துறைசைச் சிவயோகத் தலைவி
தாலோ தாலேலோ. (25)

( வேறு. )

மாதவர் வாழி வேதியர்வாழி வாசகவேடிதே
தோதாய் வாழ்சிவஞான
போதம தாயவா குரைநானீ நூலீதால்
ஆதலி நானுமாசையு ளோனேயாள் கெனவீழ்வா
ஞசானுய் ஆவகை வாதவூரனே யாளு
மாவுடையார் பால் வாழ்வளே
வேதபுராண மாகம பேதம் வீழ்சுடர்பாணி தீகால்வான்
வேறிலையாகி யாகியவாவி வேதக மாயா
போதரவாய நாதபரா பராதியுமான நாயகி
தாலோ தாலேலோ
நாரணிமூல காரணி யோக நாயகி
தாலோ தாலேலோ. (26)

பாடியவேத கீதசமேள பாவகமே மேல்மா
ருதார் பாய்விடையோடு
பேய் கணநாதா பாரிட ரோடே
யூரூர்தோ (று)
மாடியுலாவி யோர்பலி தேரு மாணவ
வூணே யூணுய
வாழாவுடை நாதா வாமசரீர மாகிய
மாதே மாதாவே
நீடிய கோடி யாயிரநூறு நீடச
மொரோர் பேராலே
நேர்படுமூழி நாள் வருடாதி நீர்பதி
பானுளொர் நாளாய்

*நாடி விஞடி யாகியகால நாயகி
தாலோ தாலேலோ
நாரணி மூல காரணியோக நாயகி
தாலோ தாலேலோ. (27)

பாடக பாத நூபுரமாதர் பாடிசையாலே
யாழாலே பாய்புன
லூர சிலாதல மேடை பாசி
படாமே லூடாடா
தாடக மேடை கூடகபோத மாவண
மாடே போமாரு
தாவுடை நாதர் வாழிய கோயி
லாளுடையாளே தாலேலோ
சூடக மாடை மேகலைதோடு சோர்குழல்
வாடார் நீடார்தோள்
சூழணியாட நாயக ரோடு தோதக
மோடோ டாடாதார்
நாடகவாத நாள்விளையாடு நாயகரோடு நாயகி
தாலோ தாலேலோ
நாரணி மூல காரணியோக நாயகி
தாலோ தாலேலோ. (28)

வேதியர் பூதி சாதியா நீதி வீதியா
வேயே தாயாயார்
மேலையாரலை யாலையர் மாலை வேலையர்
தோயாதே தோய்வார்
சேதியராக ரோதிய ராதி சீதர
ராலேல் காணுதார்
சேவுடை நாத ராவுடை நாதா
சீருடையாளே தாலேலோ

---

* நாட்—பாட பேதம்.

ஆதியனாதி பேதியர் பேதி ஆரியை
கோமா தாமாதாய்
ஆரணி யாம ளாகமி கோமளா
ரண்ணியா மாதேயாள்
ஞாதிரு ஞான ஞேயசுரூப நாயகி
தாலோ தாலேலோ
நாரணி மூல காரணியோக நாயகி
தாலோ தாலேலோ. (29)

வானவர் பாக சாதனர் வாழ்கவாழ்
திருமானே தாலேலோ
மாமறை தேரு நான்முகனுவில் வாழிய
பேதாய் தாலேலோ
பானல மேனி மாயவன் மார்புபரவிய
பாவாய் தாலேலோ
பாய்விடை யூர்தி யாவுடைநாதர் பாகமுள்
ளாளே தாலேலோ
ஆனனமானை யாறெனு மேன்மை ஆனவர்
தாயே தாலேலோ
ஆதிசதாசி வேசன் மனோன் மனோகித
மானே தாலேலோ
ஞான விநோத நாதசமான நாயகி
தாலோ தாலேலோ
நாரணி மூல காரணியோக நாயகி
தாலோ தாலேலோ. (30)

## தாலப்பருவ முற்றும்.

உ
முருகன் துணை.

# சிவயோகநாயகி பிள்ளைத்தமிழ்.

## சப்பாணி பருவம்.

வேதண்ட வெண்முத்து வெண்களிற்றுக் கொம்பு
வெண்கவரி மயிர்வெள்ளிருல்
வெண்சந் தனக்கொடு வெண்கருப் பூரமடல்
வெண்பளிக்குப் பருக்காழ்
சேதண்டம் வீசிக் கொழித்துப் பெயர்பெற்ற தெள்ளுநீள்
வெள்ளாறுபாய் திருமிழலை
நாட்டுப் பெருந்துறை யெனப்படுஞ்
சிவபுரிக் கொருசெல்வமே
பூதண்ட கோடிகள் மிசைகொண்ட கணபண
முடிக் குணங் கணவர் கொளுவரா
மூவாயிரங் கொடு முடிக்கொண்டு
மூவுலகு மூவரொடு தாங்கு மேருக்
கோதண்ட மாகப்பிடிக்குந் தடக்கையால் கொட்டியருள்
சப்பாணியே
குருந்தமூலந் தனிலிருந்த யோகத் தலைவி
கொட்டியருள் சப்பாணியே (31)

படிவாய்க் கிடங்கெரிக் கால்வாய்த் தடங்குளம்
பழனங்களங் கெங்கெலாம்
பள்ளக்குழா மள்ளர் தள்ளப் புகுந்தும்
பறிக்கப் பரந்தோடியும்
பிடிவாய்க்கி யக்குதிரை போலக் குதிக்கும்
பெருக்குநீர் வெள்ளாறுபாய்
பெருமிழலை நாட்டுக்கு நாயகமெனத்தகும்
பெருந்துறைப் பெடையன்னமே

வடிவாய்க் கிடந்தபே ரண்டவீட் டளவிலா
மன்னுயிர்ப் பிள்ளைகளுடன்
மகிணரும் பசியாமல் ஒருகலத்துணவுற
வளர்க்குநெல் லிருநாழியால்
குடிவாழ்க்கை செய்யுநின் * சூடகச் செங்கையால்
கொட்டியருள் சப்பாணியே
குருந்தமூலந் தனிலிருந்த யோகத் தலைவி
கொட்டியருள் சப்பாணியே. (32)

க்காடாய நெற்சாலி யெழுகதிர் வளைந்துவாழக்
கமுகின்கழுத் துரிஞ்சக்
கண்ணீ ருகப்பாளை கண்டுகுயில் கூவெனக்
களமர்தங் குயவாளிஞற்
சூடாய் முதற்ற டரிந்துபோர் செய்துறு
தொழிற்குறைக டூர்த்தளிக்குந்
தொன்மிழலை நன்னாடு சூடும் பெருந்துறைச்
சோலைக் கலாபமயிலே
ஓடா நடைப்புரவி யிரவிமதி போலிரண்
டுலகுமூழ் காலங்கள்
சென்றுக முடிவுபோல் விடியவிளையாடி நாளும்ப
ருடனிமிட மொருகாலமுங்
கூடா மலர்க்கண் புதைக்குநின் கைகளாற்
கொட்டியருள் சப்பாணியே
குருந்த மூலந்தனி லிருந்தயோகத் தலைவி
கொட்டியருள் சப்பாணியே (33)

தாமரைக் கண்ணனுக் கொப்பான தண்ணளியர்
சந்திரசூரியர் தவறினுந்
தவறாத வாய்மொழியர் சுவறாத கடலெனத்
தக்கமேழிச் செல்வர்தாம்

---

* உமைதிருச் சூடகக்கையால்-தொ-பு-சாரம்

வேமரக் காடவிய மேகம் பொழிந்ததென
மிடிகடீரக் கொடுப்போர்
வெள்ளாண்மை யிற்பெரிய வல்லாண்மை யோர்வாழி
மிழலையந் துறைசையமுதே

தேமனக்கும் புயங்கொங்கையிற் றழைவித்த சிவன்திருவடி
வருடியுஞ்
சேதனங் கட்கெலா மோதனம் பகிரத் திருச்சட்
டுவம் பரித்துங்

கோமளப் புதுநிறம் பெற்றநின் செங்கையாற்
கொட்டியருள் சப்பாணியே
குருந்தமூலந் தனிலிருந்த யோகத் தலைவி
கொட்டியருள் சப்பாணியே. (34)

தடங்களி னுடன்று பொருகயலிற் சலித்துத்
தவழ்ந்தேறு சங்கவயலிற்
றண்கதலி யேறிவண் கமுகமேறித் தடந்தாழை
யேறி மாடந்

துடங்கு மதிளேறி மாளிகை யேறிமடவார்
தொகுக்கு முத்தொடு
முத்தஞ் சொரிந்தேறி வளமிக்கமிழலைப் பெருந்துறைத்
தூண்டாத மணிவிளக்கே.

கடங்கலு ழியிற்புரளு மவைதொறு மலர்ந்தசெங்
காந்தள்வெண் காந்தளாகக்
கடலிரவி யெழுகின்றக் காலையிற் கண்டசெங்
கமலவெண் கமலமாக

குடங்கைக ளிரண்டுஞ் சிவப்பச் சிவப்பநீ
கொட்டியருள் சப்பாணியே
குருந்தமூலந் தனிலிருந்த யோகத் தலைவி
கொட்டியருள் சப்பாணியே. (35)

(வேறு)

பாடுநாரதர் யாழ் மேளத்தொடு பண்கொளத்
தாள் பெயர்த்திடமா
பாரவாணர் முழாமார் பிற்கொடு பம்பரச்
சுழலிற் புகநீர்
ஆடுமாதவர் கோடீரச் சடை அண்டமட்டமாய்
விரித்தெழ மேல்
ஆதிநாயக ராகாயத்திரு வம்பலத்தே நடித்திடுநாள்
தோடு வார்குழ லூர்வசிபுக்கனி தும்புருபாட
மற்றவணீ தோதி
தோதிமி தீதொதித் தொக்கே தாங்கதித்தது
கற்றருள் சீர்
கூடுதாளம் விடாதே கைத்துணை கொண்டு
சப்பாணி கொட்டுகவே
கோயிலாளுடை யாளே கைத்துணை கொண்டு
சப்பாணி கொட்டுகவே. (36)

காலகால கபாலி முக்கணர் கங்கையிற்
சேய்புனற் சடையோய்
காயமாவது காணு மற்றது கண்டளிப்பா
யெனப் புகலா
ஆலகால மூணு வாய்வைத்தவர் அண்டருக்
காவிவைத் திடுநாள்
ஆதியார்கள் நீயே தொட்டுடன் அன்புவைத்
தாவிவைத் திடுநாள்
ஞாலமேழ் கடலேழ் சூழசக்கர நன்புயக்கே
யுரப் பணியர்
ஞானமாமணை மீதே கற்பக நந்தனப்
பூமணக் குழலாய்

கோல வாணுதலாளே கைத்துணை கொண்டு
சப்பாணி கொட்டுகவே
கோயிலா ளுடையாளே கைத்துணை கொண்டு
சப்பாணி கொட்டுகவே. (37)

ஆறு கோடிகள் மாயாசத்திகள் அஞ்சுடைப்
பூத சத்திகளா
வாறுகாரிய லீலா சத்திகள் அண்டையிற்
றேழுமைக் கொடுநீ

ஏறி மாசல மீதே யுறப்பவ மின்புறக்
காமசத் தியிலா
வீசன் மாலயன் வானோரைக்கொடு வீரந்துணைத்தாள்
மணக்கு மண்ணுள்

வேறு பெரிதனமே லேதுற்ற மின்கொடுத்
தேனுனக் கென்னநீர்
மேனையோ டிமவானே கைக்கொடு வெஞ்சுடர்த்
தீப முயர்த்திடுபேர்

கூறு நாதர்கை மேலேவைத்த கைகொண்டு
சப்பாணி கொட்டுகவே
கோயிலா ளுடையாளே கைத்துணை கொண்டு
சப்பாணி கொட்டுகவே, (38)

பாத தாமரை யாராதிப்பவர் பண்புளத்தே
வெளிப்படுவாய் பாவகாரியர்
காணுமற் புதைபந் தெனப்போ
யொளித்திடுவாய்

வாதிபேதியா நாளும் வித்தக வஞ்சகத்தே
நொடித்திடுவாய் வாமயாமா
தேவாதித் திறம் மனக்களிப்பாய்
விடுத்திடுவாய் நிதி

ஞாதிரு ஞானுதிக்குண நின்மலத்தை யழித்தருள்வாய்
நீர்மையேபெறு நூலாதிக்க
நினைந்துயிர்க்காய் விடுத்திடுவாய்
கோதைத்தாழ் குழலாளே கைத்துணை கொண்டு
சப்பாணி கொட்டுகவே
கோயிலா ளுடையாளே கைத்துணை கொண்டு
சப்பாணி கொட்டுகவே. (39)

மாமகீதல மாதாற் றிருமங்கை சப்பாணி கொட்டுகவே
மாயவாழ் வொருவாழ்வா கச்செயும் வஞ்சி
சப்பாணி கொட்டுகவே
தாமநீள்முடி மாயோனுக் கொருதங்கை சப்பாணி
கொட்டுகவே
சாதிவேதியர் வேதாதிக் கொருசங்கை சப்பாணி
கொட்டுகவே
காமகார்முக பாணிகற்ப கதம்ப கர்ப்பூர
மெய்ப்புளகி காலகோகில
வாணி முத்தணி கந்துகப்போர் விசித்திரகரி
கோம ளாகம
வேணி கைத்துணை கொண்டுசப்பாணி
கொட்டுகவே
கோயிலா ளுடையாளே கைத்துணை கொண்டு
சப்பாணி கொட்டுகவே (40)

## சப்பாணிப் பருவம் முற்றிற்று.

உ

முருகன் துணை.

# சிவயோக நாயகி பிள்ளைத்தமிழ்.

## முத்தப் பருவம்.

மானே முதலா முபாதான வகைக்கா ரணங்கள்
மூன்றாகி மண்ணீறாக
வாறாறு மாயா மாயா காரியமாய்
யானே யெனதென் றிதமகித மீட்டுமிரண்டு வல்வினைக்
கீட்டின்ப துன்ப
மருந்து மருந்தி டங்க ளிரகி
யிருந் தாயால்
ஊனே யுயிரே வுணர்வே யெனஉணர்
வூரிய பேரின்பமே
வுருவே யருவே விணையகடந் தொளிரும்
மொளியே யொளிமணியே
தேனே யமுதே கனியேநின் செவ்வாய்
முத்தந் தருவாயே
திருவே யோகம் பிரியாளே திருவாய்
முத்தந் தருவாயே. (41)

மாவாக் கியத்திலேந் தெழுத்தில் மறைநீதியி
லாகம விதியில் மதசாங் கியத்தில்
சிவயோகில் வருவே தாந்த சித்தாந்த
மூவாக்கதியி லொன்றாதல் முதலோ டிரண்டற்
றிருத்த லெனும்
முனிவரறிவின் முறைபரிந்து முத்தமளிக்கு முத்தமே

கோவரத்தாள் நிலையிறேடு கோலாப் பசுந்தே
னுள்ளடக்கி குறையாக்
கலைத்தண் மதிமுகத்து குவியாக்
குமுதமென மலர்ந்து
சீவாப்பவள மெனவொளிருஞ் செவ்வாய் முத்தந்
தருவாயே
திருவே யோகம பிரியாளே திருவாய்
முத்தந் தருவாயே (42)

ஆலிமுத்தந் தருமேகம் ஆர்த்துப் பொழியும்
மலைநின்றுமே முத்தமென மருப் பளித்த முத்தம்
வேயமுத்தம்
கோலிமுத்த மிருகரையுங் கொழிக்கு மருவிவெள்
ளாற்றுக் குறைநீர்ப்பாயும்
தென்மிழலை கூற்ற மென்னுந் திருநாட்டுச்
சாலிமுத்தங் கழைமுத்தஞ் சங்கமுத்தம் பைங்குவளைத்
தண்டாமரைக ளருமுத்தம்
தண்ணங் கமுகுதருமுத்தம்
சேலின் முத்தந்திகழ் துறைசைச் செல்வி
முத்தம் தருவாயே
திருவே யோகம் பிரியாளே திருவாய் முத்தம்
தருவாயே (43)

எங்கால் சூழும் நின்கோயில் எங்கை கூப்பும்
நின்னிருதாள் என்கண்காணும் நின்வடிவம்
இறைஞ்சுந் தலைநின் சந்நிதிக்கே
நங்காதுன் பேரிசை கேட்கும் நன்னுவழுத்தும்
நின்னுமம் நன்னெஞ்சுணரும்
நின்னையே நாமேயடிமைக் குரியேங் காண்

சங்கா லுமிழ்ந்த வெண்டரளஞ் சசிவெண்ணில
வென் றயல்வாவி தண்டாமரைகள் முகிழ்க்கத
தடங்கா விருக்கை யிடங் காவில்
செங்கா லன்னம்புகுந் துறைசைச் செல்வீ
முத்தந் தருவாயே
திருவே யோகம் பிரியாளே திருவாய்
முத்தந் தருவாயே (44)

ஏறுழி புடையா ரிறைவர் கவர்நாள் எயிறு
தெரி வாண்முத்தமோ எழுகடலுமோ
செலுவிலிடு சேரிரு கணெடு சோர்முத்தமோ
சிறுகண் மதமா வுரிவைகொள் வாய்சிதறி
யுதிரமா முத்தமோ
சினவு மதனு ரெரிய வணைவார்
சிலையினுகு தீமுத்தமோ
முறுகுசின மொட்டி கொடரைநாள் முதிருமதி
வீழ் முத்தமோ
முனிமடவா ரழியவரு மால்மொழியு மிடரூய்
முத்தமோ
தறுகணுள வாலளிய தெளிதோ தருக
திருவாய் முத்தமே
சமய முதல்வீ துறைசை யிறைவீ தருக
திருவாய் முத்தமே. (46)

நினது விழியா ரமுத வருளால் நிதிய
மணிதோ கற்கிமா
நிகளமதமா நடனமடவார் நிபுட
மிடவாய் நிற்டையால்

---

45-வது பாடல் இல்லை.

மனது நினைவார் தமதுபொருளாய் மலரொடிலை
காயிட்டதே
மதலை தொழிலதாய் மகிழ்வதலதோர்
வரிசைதகு காணிக்கையே
கனகமயமே அழகின் வடிவே கனியினமுதே கட்டியே
கமழுமணியே சுவையினிசையே
கயிலைமலை யோலக்கமே
தனதன் மனையே எனதம்மனையே தருகதிருவாய்
முத்தமே
சமய முதல்வீ துறைசை யிறைவீ தருக
திருவாய் முத்தமே. (47)

மகுட மலையா நெடியதவமா மடுவிலெழு
மாணிக்கமே
மதுரை யமுனை நதியி லொருபால்
வளையில் வருபான் முத்தமே
விகட மயிடாசுரனை மிதியா விசயமழியா
வச்சிரமே விமல
பவளா சலமே யிடமே மிளிர்வொளி
கூர்பச்சையே
முகடு தொடர்வா னகடுகிழிய முடுகவொருதா
ளதிக்கெலாம் முழுது
மளவாய் நிறையவொருதாள் முகிலின்
வடிவாய் நிற்குநீ
சகடுபொரு மோர்மகவு மனையாய் தருக
திருவாய் முத்தமே
சமய முதல்வீ துறைசை யிறைவி
தருக திருவாய் முத்தமே (48)

அழகு பெறவே முழுகு மலர்நீ ரமுதுகொடு
பூசிப்பதோ
அமுத கவியால் வடசொல் தமிழால் அனுதினமும்
வாசிப்பதோ

எழுது மவைபோல் முழுதுமசையா திரவுபகல்
நேசிப்பதோ எளியதெது நான்
முயல்வ தேதுநீ எதுகொடென வரமவிப்பதே
புழுகு பனினீர் களபமதமே புனையு முலையால்
நித்தர் தோள்
புளகமெழவே தழுவியுலகோர் புவனமனு
போகத்திலே
தழுவி யெழுவாழ் வருளுமயிலே தருக திருவாய்
முத்தமே
சமய முதல்வீ துறைசை யிறைவீ தருக திருவாய்
முத்தமே. (49)

துளப மலரோ முளரி யிதழோ சுரர்க டருவார்
புட்பமோ
தொடை யிதழியோ கமழுமிருதாள் துணைவர்பதமார்
பற்பமோ
களபவயிறோ முருக னுதலோ கருது மடியாருச்சியோ
கருணையுடனே
பகிரு மமுதோ காகமலம் வாசிப்பதோ
அளக முகிலே பிளவுமதியோ அழகு நுதல் பொர
விற்களோ
அலகுகணையோ புருவவிழி காதளவு தகையோ
முத்தமோ
தளவ நகையோ முறுவல் எளிதோ தருக திருவாய்
முத்தமே
சமயமுதல்வீ துறைசை யிறைவீ தருக திருவாய்
முத்தமே

**முத்தப் பருவம் முற்றிற்று.**

உ

முருகன் துணை.

# சிவயோகநாயகி பிள்ளைத்தமிழ்.

## வாரானைப் பருவம்

அலைக்கு நாயகனுங் கதிர்க்கு நாயகனு மிருகால்
வண்டிலாக முன்னைக்
காதைக்கு நாயக மெனத்தக்க நான்குங் கடுங்குரம்
பரியாக வந்
தலைக்கு நாயகமான நான்முகப் பிரமமே தனிவலவனாக
வாய்த்த
சகல லோகங்கட்கு நாயகப்பூமித் தடந்தேரி
வேறுமன்னுட்
கொலைக்கு நாயகமான தேவரே யெவருங் கூரம்பதாக
நாக்கக் குழுவுக்கு நாயகங் கொளுவு
நாணகவே கொண்டொருகை கோதண்டமே
மலைக்கு நாயகமென வளைக்கு நாயகன்வாழ் மனைக்கு
நாயகி வருகவே
வாதவூரன் பணிவிடைப் பெருந்துறை யோக
மங்கை நாயகி வருகவே. (51)

முச்சதுர மூவட்ட மீரெட்டு மோரெட்டு
முளரியிதழ் சூழ்ந்ததற்குள் முகனையிற்
பதினன்கு பத்துடன் பத்தெட்டு முக்கோண
நடுவிந்து வாய்
சச்சபுட முதலான தாளங்கள் தாள்பொரச்
சதகோடி திருமாதாரார் சந்தத நடம்புரியும்
நாற்பத்து முக்கோண சக்கர நாயகி வருகவே

கச்சைத் தலத்திலே பஞ்ச பாணத்தொடு
கருப்புவிற் பாசாங்குசங் கடிதடத்திற்
காஞ்சி கொங்கையிற் குங்குமங் கண்களிற்
கருணைவாரி

வச்சதொரு வெயிலிளங் கதிரென வெனக்குமுன
வந்த நாயகீ வருகவே
வாதவூரன் பணிவிடைப் பெருந்துறை யோக
மங்கை நாயகி வருகவே. (52)

அயன்முடி நரைக்குடுமி ஆயன்முடி கற்கடினம்
அரன்முடி சடைக்காடு மற்றுகண்ட லேசர்முடி
மணிமுடித் தென்னவாக்கப செயப்பட்ட வதனால்

பயன்முறை வரக்கொடுத்தவ ரவரெழுந்தபின்
பயப்பயப் போய்வருதியால் பஞ்சிலும்
கூசுவ தனிச்சம் பொறுது தாள் பானுரையினும்
. பதவிதாங்

கயன் முறையெனக் கண்கள் கொண்டு கண்டருள் கெனக்
கடைகாவல் விடைமாதாரார்
கைகொடுத் தஞ்சிப் பயந்தனை விடுத்திட
கனகவெற் பரசன் மனைவாய்

மயன்முதல் விதித்ததொரு கன்னிமாடம் புகுத
வந்த நாயகி வருகவே
வாதவூரன் பணிவிடைப் பெருந்துறை யோக
மங்கை நாயகி வருகவே. (53)

பிறவாத வயிறில்லை தவழாத மனையில்லை பெறுதாதை
தாயென்ன நான் பேணுத வுயிரிலைக்
காணுத காட்சியும் பேசாத நொடியுமில்லைச்

சிறவாத வழகிலைத் தழுவாத மாதருந் தின்னுத
வுணவுமில்லை திரியாத தேசமிலை யிரவாத
பொருளிலைச் செத்தபின் சுட்டு நீருய்ப்

பிறவாத வுடலில்லை சொர்க்க நரகத்தி லனுபவியாத
வினையுமில்லை யிப்படியே சுழன்றுழன்றடியே
னிடர்க்கடற் படுவதோ கடவதம்மே
பிறவாமலினி யென்னை யருளாழி விழிபொங்க
வாழிவாழ்கென வருகவே
வாதவூரன்பணி விடைப்பெருந் துறையோக
மங்கை நாயகி *வருகவே, (54)

இறைமாய னிந்திரன் சந்திரன் பானுவே யெரியாதி
காரிசாத்தன் இகல்வீர பத்திரன் முருகனேரம்
பன்மயற்றெழு மாதர் திருவாணி யோர்
நிறைவா மகத்தியன் காசிபன் துருவாசன் நிகழுமிப்
பெரியோர் ரெலாம் நினது மூவஞ்செழுத்
துச்சரித்துப் பூசைநேசித்த கல்யாணர் காண
பிறை நாறு சீறடி திருச்சக்கர நாயகி பிறங்
கறம் வளர்த்த கைச்சி
பேருணமுலை மாது சாந்துக் கழுத்தி யருள
பெருகுங் கயற்கண்ணி நான்
மறைஞான மனநாறு குழலியென் றுலகெலாம்
வழுத்து நாயகி வருகவே
வாதவூரன் பணிவிடைப் பெருந்துறை யோக
மங்கை நாயகி வருகவே. (55)

## (வேறு.)

பனிநெடுங் கிரிபரமர் புன்சடை பாகசாதன
முதலியோர் பணியதென் றணிபனதி
கிண்கிணிப் பாததாமரை பழகியே
எனது நெஞ்சினி லிருள்தருங் கலின் ஏறிவாழ்
குவ தொளியதோ
வினியநின் றிருவுள மகிழ்ந்திட வேதுகாரண
மறிகிலேன்

* வருக வருகவே மூ. பாடம்.

வனசசந்திர முகமிரமப் பிராமவாரியி லமுதமாய்
அலையெறிந்துக ணருள்ததும்பு
தார் நூபுரவொலி யெலாம்
உனது பங்கென விழிகுளிர்ந்திட வோடி
மாதுமை வருகவே
ஒரு பெருந்துறை வருகுருந்துறை யோக
நாயகி வருகவே. (56)

சடை சுமந்தது விடைநுகர்ந்தது தாழுமாலிகை
தலைகள் தோ[ள்]தனையு மருங்குல்
தணிவ வெண்பொடி தானமாவது சுடலையாய்
விடையுகந்தன ரெனினும் நின்பதி வேதன்மால்
மகபதி விண்ணோர் விசய சுந்தர சகள்
மங்கள வீரவாகென மொழிகுவார்
அடை வறிந்திடி லுனையடைந்தவர் ஆடலூடலின்
முடியின்மே லடிபுனைந்தனர் அமுதமுண்டனர்
ஆதலா லவளலாது பால்
உடல்புகுந்தன ரெனநடந்தருள் யோக நாயகி
வருகவே
ஒருபெருந்துறை வருகுருந்துறை யோக நாயகி
வருகவே. (57)

அருப சஞ்சித ரகிதகுஞ்சித ராடுதாள் பிறர்
தொழுவ தோர்
அலது தஞ்சிர மொருவர்முன் பணியாத வாதிய
ரமுதமோ
குரவ னென்றிலர் வருகின்றருள்கூர வேயருள்
குணதையால்
குருவெனும்படி குமரன் வந்தது கோதை நீபெறு
மகிமை காண்

கரக மண்டலி யமுத மண்டலி காளி யாமளி
யமளிகோ கனக சுந்தரி களபகந்தரி
காமமோகினி சயனியா

உரக குண்டலி கரகமண்டலி லோக பாலகி
வருகவே
ஒருபெருந்துறை வருகுருந்துறை யோக்
நாயகி வருகவே. (58)

மதியுளந்தரு கருணை பொங்கிய வாரிபோலலை யெறியமேல்
மடை திறந்திடு மதகெனும்படி
வாளிபோல் விழி பெருகவே

புதிய குங்கும கலச கொங்கைகள் பூரியாவரு
ளொழுகுபால் பொழிய நின்றன கரைபுரண்டன
போத மாதவர் வருகவே

சதிகலின் கலின் ஞெலிதரும் பத சாலமேகலை செவிக ணோர்
தாதுழைந்து யிருடம்பொடு
தாரை நீரென வருகவே

உதய செங்கதிரென நடந்தெதிர் யோகநாயகி வருகவே.
ஒருபெருந்துறை வருகுருந்துறை யோக
நாயகி வருகவே. (59)

திலகசிந்துர வதன சந்திரதீப நாயகி வருகவே
சதநிதம்பித சகதிகம்பர தேச நாயகி
வருகவே

மலையடங்கலும் முலையெனுந்திரு மார்ப நாயகி வருகவே
மணநெருங்கிடு கணமெனுங் குழல் மாலை
நாயகி வருகவே

அலகிலண்டமு மணியபங்கெதன ஆடுநாயகி வருகவே
அருளெனும் பிரளய மருங்கெனை ஆளு
நாயகி வருகவே

உலகொடுங்கவும் விழியொடுங்கில ஆழிநாயகி
வருகவே
ஒருபெருந்துறை வருகுருந்துறை யோக
நாயகி வருகவே. (60)

**வாரானைப் பருவம் முற்றிற்று.**

உ

முருகன் துணை.

# சிவயோகநாயகி பிள்ளைத்தமிழ்.

## அம்புலிப் பருவம்.

மும்மண்டலத் துச்சி யமுதமண்டல முடையை
முக்கணரிடக் கண்ணே வான்
முதுபனிக் கோட்டாற் பிறந்துளாய் நவகோண
முறையிடமெனத் திகழ்ந்தாய்
செம்மண்டலத்திற் புகுந்துலகு தொழவருவை
சேவிடையின் மிசையாகுவாய்
சீவிக்கு முயிர்கட் குடம்பாகுவாய் பெண்மை
சொரூபாய் தென்னன் மரபாய்
எம்மண்டலத்துந் துதித்திட வுதித்தாய் எழுங்குணத்
தன்மையெல்லாம்
இவடன்மை போலுறுதி யாதலா லிவளில் வேறில்லைநீ
யென்றெண்ணுவோம்
அம்மண்டலத்து நின்றிங்கு வென்றவளோ டம்புலி
யாட வாவே
ஆண்ட நாயகி பெருந் துறையோக நாயகியோ
டம்புலி யாடவாவே. (61)

தக்கனர் மக்களிரு பத்தேழு மாதருந்
தாரங்களா முனக்குத்
தன்மையால் மைத்துனக் கேண்மையென் றெண்ணி
சாபமா யிட்டகயனேய் [யோ

நக்கனூர் தீர்த்ததுந் தீராது மாயினன்
நலியுமென் றதனைநீக்கி
நங்கைதன் றங்கைமா ரன்பினால் வாழ்விக்கும்
நண்புவைத்தோ வன்றியும்

புக்கதா ரைக்குடி(க்) கருகிநின்றாயெனப் புத்தி கற்பித்
துனக்கும்
புலவிமா தற்குமுற வாக்கியென் றூக்கவோ பூவைசெங் [கனி
வாய்திறந்

தக்கடா வாவென் றழைத்துநின் றாளிவளோ
டம்புலி யாடவாவே
ஆண்ட நாயகிபெருந் துறையோக நாயகியோ
டம்புலி யாடவாவே. (62)

செங்கணா யகர்முடிக் கங்கையைச் சார்தலால்
சினமிகுந் தூடன்றுறும்
செம்பஞ் சழுந்திட வுதைத்தலும் பிறைநாற
சீறடிப்பேர் படைத்தாள்

எங்கணா யகிகுறிப் பிதுவென்று வீரபத்
திரகுமரன் வேள்விமீதில்
இட்டிடமுன் தேய்த்திடத் தேய்த்து விட்டான்பெற்ற
யானைமுகனைக் காய்ப்பினால்

தங்கணா காதெனத் தள்ளிவிட்டா னனள்
சார்பினாற் பட்டதெல்லாந்
தாட்சியுஞ் சஞ்சலமும் அல்லாம லில்லை யிவள்
சார்பெவர்க்குங் கிட்டுமோ

அங்கணாயகி யுனை அழைத்ததே சார்பாக
வம்புலி யாடவே
ஆண்ட நாயகிபெருந் துறையோக நாயகியோ
டம்புலி யாடவாவே. (63)

பொய்யார் தடம்பொலிகை மூழ்கிக் கயப்பிணிகள்
மோகாமுதற் றீர்கலா
முதுகுருந் தடியில்மண் பூசிக் கருங்குட்ட
முத்துந் துடைத்து விடலாம்

கையார வபிடேக மாட்டு குங்கும
மஞ்சனம் பருகிமேற்
கருமும் மலக்கறைகள் கழுவிச் சிவஞான
கலையெலாம் நீவளரெலாம்

மையார கலிப் புவியி லிற்றைநாள் வரையும்நீ
வாளாதிருந்து விட்டாய்
மதியாகி மதியிதனை அவமதிசெய் யாதிங்கு
வருகமதி யமைதியுடனே

அய்யாறெண் டறம்வளர்த்த மாதுளம் யிவளோ
டம்புலி யாடவாவே
ஆண்ட நாயகிபெருந் துறையோக நாயகியோ
டம்புலி யாடவாவே. (64)

கண்டகா லாக்கினிப் பரமர் பாதாளங்
கடந்த திவள் பாதமலர்காண்
கனகசக்கர வாளகிரி கடிதடத்திற் சூழ்ந்த
கனகாதனக் காஞ்சிகாண்

தண்டபாணிகள் மிசைக் கொள்கை பொன்மவுலிகாண்
சகலலோகமு மேனிகாண்
தபனுதி யொளியெலாங் கண்கள்காண் மலையெலாந்
தனதடங்காண் முகிலெலாங்

கொண்டதோர் கருணைகாண் எங்கெங்கு மின்பங்கை
குலவு சந்நிதி முகங்காண்
கூறுமிவ் வடிவமுஞ் சிற்றுருவெனத் தக்க
கோலமொன் றுண்டதற்கிவ்

அண்டகோடிகள் முற்று மணிவடங் காணிவளோ
டம்புலி யாடவாவே
ஆண்ட நாயகிபெருந் துறையோக நாயகியோ
டம்புலி யாடவாவே. (65)

## ( வேறு. )

மந்திரபானல கிரிகொண்டவை வந்தபி ராய
கவிஞர் ஞுள
மங்குழவா விதல வெனும்படி மண்டிலமாக
நிலவை வோர்
குந்தள வோலை யிவளெறிந் தனள் கும்பிட யாரும்
வெருவநீ கொம்பனை யாரின வேளறி
ஞைந்தொளி குன்றியவாறு மறிதியால்
இந்திரவாணி யிரதி சுந்தரி யிங்கித லோல
லளிதையாய்
எங்கனை யாள வளர்பெருந்துறை யின்புற வாழு
மயி லன்னாள்
அந்தர வாணர் தொழு மணங்கினோ டம்புலி
யாட வருகவே
அம்பிகை யோக மலைமடந்தையோ டம்புலி
யாட வருகவே. (66)

வெங்கடு வாயி னுழைவ தன்றியு மின்
கனலூடு மலைகுவாய்
மின்களி னுசை மிகுவ தன்றியு மின்குலின்
மேக மறைகுவாய்
மங்கையொ டாக மருவ்வங்கவர் வன்புறு
சாப மறையவே
வஞ்சகர் பேரின் வருவதன்றியு மந்திர
லூடு திரிகுவாய்
எங்குள் பேரு மறிவர் நின்குண மிங்கிலை
தீர நினைதியே
லின்சதிர் தாருவளர் பெருந்துறை எங்கனை
யாளு மியல்பினள்

அங்கணர் பாகமமரு மங்கையொ டம்புலி
யாட வருகவே
அம்பிகை யோக மலைமடந்தையோ டம்புலி
யாட வருகவே. (67)

முண்டக பாத விரணகங்களின் முன்சில போது
பழகினுல் முந்துளதான கறை தவிர்ந்தது
முந்துளதான கலைகெடா
தெண்டிசை யோகர் புனல்சொரிந் தலரிண்டைகள் சூடி
முடியின்மே லிங்கிதமொடு
புனைய வந்தனை என்பெறு பேறு
மேனியை மேல்
மண்டப மாட மனையரங்குகள் மங்கைய ராட
முழுவரு மங்கலவீதி
மலிபெருந் துறைவந்த கலாபமயி லன்னுள்
அண்டரு ணுத வமுதவஞ்சியொ டம்புலி
யாட வருகவே
அம்பிகை யோக மலைமடந்தையொ டம்புலி
யாட வருகவே. (68)

விம்ப வெய்யோனை வருகவென்றிலள் வெண்பல்
லில்லாத குறையினுல்
விஞ்சிய சேயைவருக வென்றிலள்
வெங்கன லான முறைமையால்
உம்பரின்மேதை வருக வென்றிலள் ஒன்றிய
சரத முடைமையால்
உங்கு வியாழம்வருக வென்றிலள் உன்பகை
யான நெறியினுல்
வம்பக லீசன் வருக வென்றிலள் வஞ்சகதேச
நினைவினுல்
வஞ்சனி யோடிவருக வென்றிலள் மந்தக
னீச னெனுமதால்

அம்புலி யாடவருக வென்றன ளம்புலி
யாட வருகவே
அம்பிகை யோக மலைமடந்தையோ டம்புலி
யாட வருகவே. (69)

கஞ்சனைப்போல நிகரு கின்றனை கங்கெழுதாமல்
மனையை யோர்
கந்தித சரவண யனையை யிங்கெழு
*காந்துகமாதி சிறியதோ
பஞ்சனை போல மிகவளர்ந்திடு வஞ்சகர் மாவை
நறவுவார் பண்டியிருலி னிகழ்வை
வெங்குளிர் பங்கயமாக மலர்தியால்
மஞ்சன மாடி யிவள்புனைந்திடு வண்டிப னுன்
களபநேர் வந்தனை யாதி வளர்பெருந்துறை
மங்கையராவி னயனமன் னுள்
அஞ்சன மேனியமை மதங்கியொ டம்புலி
யாட வருகவே
அம்பிகை யோக மலைமடந்தையோ டம்புலி
யாட வருகவே. (70)

**அம்புலிப் பருவம் முற்றிற்று.**

---

* காந்துகம்—வெண்காந்தள்.

உ
முருகன் றுணை.

# சிவயோக நாயகி பிள்ளைத்தமிழ்.

## கழங்காடற் பருவம்.

செய்யதா மரை மலர்த் தேயுஞ் சோவியுந்
திசைமுகத் தவனவியுந்
திசையுடைக் கடலாடை நங்கையுங் கங்கையுந்
திவிலோக மடமங்கையும்
பைய வாரித் திரைக் கன்னியும்
பொன்னியும் பாயுமேதிச்
சென்னியும் பாடியாடுந் திறம்பார்த்துப் படிக்கின்ற
பாங்கிமாரே யல்லவோ
மையுலா வுங்கணு லிந்திரநீ லங்களாய்
வாயினுற் செம்பவளமாய்
மரதகச் சோதியா யாதியாம் வண்ணமாய்
வெண்ணகையினுல்
கையினுல் மாணிக்கமாக வேதாளக் கழங்குநீ
யாடி யருளே
கவுரீ பெருந்துறைச் சிவயோக வல்லி
கழங்கு நீயாடியருளே. (71)

உரியநின் கேள்வர்மேல் வைத்திடும் பத்தியொன்
றுறைகின்ற மேனிக ளிரண்டுலக
முண்டாக்கு தற்குபா தாளமூன் றுயிர்க்குதவும்
பதங்க ணன்குந்
தெரியவரு தொழில்க ளைந்துள்ள குணமோராறு
சீவிக்கு மாவிக்கெலாந்
தேகங்கொடுத்த குறியொரே ழெனக் கொண்டு
சீர்வைத் துடன்பாடியே

அரியதிரு வருளினூற் பச்சென்ற மேனியாய்
அய்யைநின் செங்கையினூல் அளிசிதளப்
புனற் பாசடையிலா திடை அலர்ந்த செந்
தாமரையின் மேற்
கரியவண்டாடுமா போலவே நீலக்கழல் கெடுத்
தாடி யருளே
கவுரி பெருந்துறைச் சிவயோக வல்லி
கழங்குநீ யாடியருளே. (72)

தருணோதயக் கிரிச் சிந்தூர வருவியிற் சதகோடி
மாணிக்கமுஞ்
சுடரொளி யிலங் கையிற் றக்கமுக் கூடா
சலச்சீவ மாணிக்கமும்
பரமாக வேமண் சுமக்கின்ற சேடன் பணுமவுலி
மாணிக்கமும் பாண்டியற் காவான வாதவூரன்
கையிற் பாலித்த மாணிக்கமும்
திருமால் சுமந்தகைச் செய்ய மாணிக்கமுந்
தியாகமா மாணிக்கமுந்
தெட்டுப் படாதவன வெட்டுப்படக் கண்ட
தெய்வீக மாணிக்கமுங்
கரமாகவே கரங் கொண்ட மாணிக்கக்
கழங்குநீ யாடியருளே
கவுரி பெருந்துறைச் சிவயோக வல்லி
கழங்குநீ யாடியருளே (73)

சூழிசை விபஞ்சியே பஞ்சியடி வஞ்சியே
தொண்டுபுரி வார் நெஞ்சியே
சொன்னமே முதலான வன்னமே பின்னமே
தாவிமென் பெடையன்னமே

தாழுமல ரோதியே பாதினிரு பாதியே
சதுர்வேதியே சோதியே
சந்தத வசந்தமே கந்தமக ரந்தமே
தருணமுக வரவிந்தமே

ஏழுலக மேழுதல ஏழுகட லேழுபுவி ஏழுகிரி யேழுபொழி
டெழு கன்னி [லோ
எழுமுனிகள் எழுச்சுருதி யெழுநதி ளெழுவகைப்
பொருள் யாவுமெழ

காழுருவில் வந்ததனை யொக்குநின் செங்கைக்
கழங்கெடுத் தாடியருளே
கவுரி பெருந்துறைச் சிவயோக வல்லி
கழங்குநீ யாடியருளே. (74)

ஒன்றெறிந் தாறுவைத் துய்த்திரண் டைந்துவைத்
துய்த்துமூன் றிட்டுநான்
குய்த்துநான் கிட்டுமூன் றுய்த்தைந்
திரண்டுவைத் திரண்டெறிந் தொன்று வையா

நின்றெறிந் தேழும் பிடித்துவைத் தேயதன்
நிறுத்தொன்று வைத்தா றெடா
நேரிரண்டாக வைத்தைந்தெடா மூன்றையும்
நிலத்தில் வைத்தொரு நான்கெடா

மூன்றங்க நான்குவைத் தொருமூன் றெடா
வைந்தையுமுன் பிட்டோ ரிரண்டையு மெடா
முதலாறுவைத்

தொன்றெடா வேழுமேத்தர முழங்கைப் பெறுங் கைத்தலங்
கனலெந்தளிர சிவப்பச் சிவப்பக் கழங்குநீ யாடி
[யருளே
கவுரி பெருந்துறைச் சிவயோக வல்லி
கழங்குநீ யாடியருளே. (75)

## ( வேறு. )

அளிக முகங்குறு வேர்வை யெழாமலடக்கு
மந்தா நிலமா
அளிநற வுண்டளை காடவி மாலை அடுத்தெழுந்
தாடிடவே
இளகுபசும் பொனின் வார்குழை நீழல் இரட்டு
வெண் சாமரையாய்
இருசெவி யின்றுணர் சூரிய தூசம் எனப்
புறஞ் சோர்வுறவே
களபகதம் படர் சபாது கருப்புரஞ் சீதளநீர்
கலவிய குங்கும மேருவிலாளி
கரத்தொடும் பூசிடவே
புளக மிகுந் தனபார வுண்ணுமுலை பொற்கழங்
காடுகவே
புனிதை பெருந்தை யாளுடை நாயகி
பொற்கழங் காடுகவே. (76)

அடவியி லெங்கனல் வாய்நிலையா வுணர்
வற்றிருந் தாரமுதே
அனுதின மும்புன ரேய்பவ ராசிகள்
அற்புதங் கூர்நிதியே
சடர விடும்பைகள் போகிய யோகிகள்
தற்பரந்தீர் வடிவே
சமய மதங்களி லோதிய நாலுள சத்தியஞ்
சேர் பொருளே
கடவுள ரிந்திரர் ஆதியர் வேதியர் கட்புனல்
காணரியாய்
கடிமலர் கொண்டடி சூழினர் வாழிய
கற்பகம்போ லினியாய்

புடவி யளந்த முராரி சகோதரி
பொற்கழங் காடுகவே
புனிதை பெருந்துறை யாளுடை நாயகி
பொற்கழங் காடுகவே (77)

உருவி னுழைந்தனர் சேயுரு வாயினர்
கற்றறிந் தார்மடவார்
குமரில் விழுந்தனர் நோயுடல் கூனினர்
கைத்தலங் கோலொடுபோய்
எரியில் மடிந்தனர் கீழொடு மேலுல
குற்றறிந்தா முழல்வோர்
இவர்தம ரென்றடி யென்முடி யாமல்
எடுத்திடுந் தாயவளே
திரிபுர சுந்தரியே பிரியாதொரு சித்தசன்
சூழ்வரவே சிவனெதிர்
நின்றருள் கூரிய பார்வை செலுத்தும்
பாயிட நீள்
புருவ மெனுஞ் சிலைகோலிய மோகினி
பொற்கழங் காடுகவே
புனிதை பெருந்துறை யாளுடை நாயகி
பொற்கழங் காடுகவே. (78)

மலையாசன பரிவால் மகமேவரு மத்தகஞ்சேர்
குழலாய் மணிசெய்குதம்பிப
களமென்னகை யாரமடுத்திடுங் காதுடையாய்
கலைமகளுந் திருமாது முலாவிய கட்பெரும்
பார்வையுளாய் கரிமுகவ னருகள்
வாயமுதூறிய கச்சிளம் பூண்முலையாய்
உலக மயங்கிரு ளோடவு மாதவர் உட்டெளிந்தாடவு
நீடுயிர் கண்
மலர்ந்து தம்மூழ்வினை நாடும் உற்பவஞ்
சேர்தரு மோர்

புலரி யிளங்கதிர் போல்வரு கோமளை
பொற்கழங் காடுகவே
புனிதை பெருந்துறை யாளுடை நாயகி
பொற்கழங் காடுகவே. (79)

அழகு ததும்பிய தேனின் மூழ்கி
அளிக்குலஞ் சூழ்வடிவாய்
அமுதி னருங்கடல் வாய்மடை பாயு
மணைத்தடங் கூர்விழியாய்
மழலையின் மென்கிளி வீணையி னோசை
வசித்தசெந் தேன்மொழியாய்
மரகத பஞ்சி கலாப விநோத
வனப்பெழுந் தோகையினாய்
குழவி யிளம்பிறை வாணுதலூடு குறித்த
சிந்தூரமும் வார்
குழைக ளசைந்தொளி வீசுக போல
குணக்கவின் தேகாமர்
புழு கொழுகுங் குழலா யுமைநாயகி
பொற்கழங் காடுகவே
புனிதை பெருந்துறை யாளுடை நாயகி
பொற்கழங் காடுகவே. (80)

**கழங்காடற் பருவம் முற்றிற்று.**

உ

முருகன் துணை.

# சிவயோக நாயகி பிள்ளைத்தமிழ்.

## அம்மானைப் பருவம்.

சாலையிளங் கதிர் மேற்காண வருமிந்திர விற்க னக
மயிற்கலப கண்ணிரை சூ*ழவண்ணம்
மாலைதொடுத் தலர்கமல மணிப்பைம்பொன் வாசிகை
யெனவே நின்வடிவ மிசைத் தோன்ற
சோலைகள் புடைசூழ்ந் துறைசை வளம்பதியுந்
துணைவர் விழித்துணையுந் தொண்டர்கள் சித்த
ஆலய மாயுடையாய் ஆடுக வம்மானை [முமே
ஆளுடை நாயகியே ஆடுக வம்மானை. (81)

பின்னொடு முன்சனனம் பின்னிய மாராப்பும்
பேதமுடன் புடையில் பெற்றிடு தோளாப்பும்
துன்னிய கைவளைமுன் சுற்றிய கங்கணமுஞ்
சூழிமிடிக் கண்ணித் தொங்கலு முன்கானை
கன்னி மடப்பிடியே காமருமென் வினையே
காவலிளங் கிளியே கார்மயி லேகுயிலே
அன்னநடைக் கொடியே ஆடுக வம்மானை
ஆளுடை நாயகியே ஆடுக வம்மானை (82)

கொம்மை முலைப்பொழி பாலுண்டு கொழுக்குமிளங்
குமரர்தமக் குதவக்கொண்ட கொழுங் கனிபோல்
செம்மைமனத் தடியார் செவ்விவிழுங்க விடத்
திருவருளா ரமுதந் திரளை பிடிப்பதுபோற்
பொய்ம்மை யெனும்பறவை புட்குலமே யாமே
புண்ணியமென் பயிரே போற்றுமூலம் பலபோல்.

* ழும்—பாடபேதம்.

அம்மை மலர்க்கை யெடுத்தாடுக வம்மானை
ஆளுடை நாயகியே ஆடுக வம்மானை (83)

செய்கனி த்துவர்வாய் செப்பிய மென்பாடல் தேனெனவே
மாலைச் செறிகுழ லார்வண்டாடக்
கைவிரற் றளிரோ மென்றுமெனப் பதறி
கங்கண வெள்வளையுங் கலகல பூசலிட
மைவிழித் துணையும் பற்றிய மின்னளவாய்
பக்கமுடன் புரளத் தக்கன சிக்கனவாய்
அய்யை யெமக்கொரு காலாடுக வம்மானை
ஆளுடைய நாயகியே ஆடுக வம்மானை (84)

ஆயிரமூ ருடையார் ஆயிர நாமமுள்ளார் ஆயிர மேனியனுர்
ஆயிர மாடலினுர்
ஆயிர மாகியதோள் ஆயிர மாயிருகா தாயிர மானனமோ்(டு)
ஆயிர நாவுடையார்
ஆயிர நீள் முடிதாள் ஆயிர மாலயனுர் ஆயிர நாளளியர்
ஆவிடையா ரிருகண்
ஆயிர முங்குளிர் ஆடுக வம்மானை
ஆளுடைய நாயகியே ஆடுக வம்மானை. (85)

( வேறு. )

நாயறு திங்கள் செவ்வாய் புதன் நாதன் நாவலன்
வண்ணமை யோர்
நாகமிரண் டொரு கோளினர் தங்களை நாடரு
மம்மனையாய்
மேயவிடந்தொறும் வீசியெறிந்தினி மேலுயி ரெண்ண
வேறுமயங்கிட மோகன முன்செய்த [மெலாம்
மேதகு பொன்னனையாய்
மாயன் முகுந்தன் முராரி வசுந்தரை மாமகிணன் நெடுமால்
மாதவ னந்த குமார னனந்த *மகாசயன்ன மணிமார்

---

* பிழைபட்ட பாடம்.

பாயலுகந்த சகோதரி யம்பிகை ஆடுக வம்மானையே
ஆதிபெருந் துறை யோக சுமங்கலி
ஆடுக வம்மானையே. (86)

பாடக பஞ்சடி நூபுர வஞ்சியர் பாதுகை தன்னலகபாய்
பாய்பரி வெண்குடை சாமரை கொண்டிரு
பால்வரமும் மலைமா
தாடகை யென்றொரு பேர்கொடு வந்தெழு தாரணி
மன்னவர் போர்
சாடி யரன்புணர் கூடல் வளம்பதி
சார்தரு பெண்ணரசே
நாட வரும்புலி யோடுபதஞ்சலி நாரணன் மாமலரோன்
ஞானசிதம்பர மீது தொழும்படி
நாதரை யின்னம்விடா
தாடல் கொளுஞ் சிவகாம சவுந்தரி ஆடுக வம்மனையே
ஆதிபெருந் துறை யோக சுமங்கலி
ஆடுக வம்மனையே. (87)

நீளிடை பிங்கலை தூரநிவர்ந்தெழு நேர்வழி தன்னை விடா
நேயமொடும் பதமாறு கடந்து நிலாமதி
வண்ண மதாய்
நாளமுறுந் தளமாயிர முண்டக நாயகர் சென்னியின் மேல்
நானென நின்றருள் மூழ்கியிருந் தவர்
நாவூறு மின்னமுதே
கோளரி வென்றுரி கீளுடை கொண்டெதிர் கோபமோ
[டுண்மதமாய்
கொற்றல் புரிந்துடல் மேல்விரி கொண்டொரு
கோவண மெய்ம்மறையாய்
*ஆளான மானபுகழ் பாடி மகிழ்ந்தினி யாடுக வம்மானையே
ஆதிபெருந் துறை யோக சுமங்கலி
யாடுக அம்மானையே. (88).

---

* ஆளானம்—யானை கட்டுந் தறி.

மேரு வுடன்றது சூரியர் சந்திரர் வீதியின் விண்ணளவோ
மேலு நிமிர்ந்தது சோதி பரந்தது
வேறிது முன் னறியோம்
ஆரிது கண்டவர் மேதைய ரென்றவர்ஞானமு மன்னமுமாய்
ஏறி யிழிந்தறி யாவகை நின்றவ ரேர்பெறு
கண்ணனையாய்
தாரொ டிலம்பக வார்குழை மிஞ்சிகை
தாழ்சர மின்னொளிசூழ் தாதணியங்கத வால்வளை
கங்கண தாமமோ டம்மனை
சேரரவங்களு மாட மகிழ்ந்தினி ஆடுக வம்மனையே
ஆதி பெருந்துறை யோக சுமங்கலி
ஆடுக வம்மனையே. (89)

நீறு வழிந்திடு மார்போடு கொங்கையள் நீர்பொழி கண்ணின
நீடுநினைந்துயி ராய்வரு பைந்தொடி [ளாய்
நீர்மல நண்ணினையே
மாறுபுரிந் தரனெரி யுண்ட மணளனை *யின்னினமே
வாறியதா தருள்வா யெனவுஞ்சிலை மாரனை
முன்னருள்வாய்
நாறு கரந்தை குராமகிழ் கொன்றை நறுமலர்
வன்னியெலாம் நாரொடு தொங்கவு நாண்மதி
நாயகர் சென்னி யின்மேல்
ஆறுகுழம்பவும் ஊடிய பஞ்சடி யாடுக வம்மனையே
ஆதி பெருந்துறை யோக சுமங்கலி
யாடுக வம்மனையே. (90)

## அம்மானைப் பருவம் முற்றிற்று.

* யின்னணமே (பா. பேதம்.)

உ

முருகன் துணை.

# சிவயோகநாயகி பிள்ளைத்தமிழ்.

## பொன்னூசற் பருவம்.

திருவுளம் பெறவாத வூராளியாய் வந்து செழியற்
கமைச் சமைந்த
தென்னவன் பிரமாதி ராயன் விலைப்புரவி
தேடிவருகின்ற வழியிற்
குருவிடங் கொண்டருள மாணிக்க வாசகக் குலவுபேர்
கொண்டு தமிழால்
குழைவுடன் பாடித் திருப்பணி புரிந்திடு
குருந்தடிக் கோயி லொருபால்
ஒருவடங் தேவர்கோன் ஒருவடஞ் சதுர்வேத
னொருவடங் கரிய நெடுமால்
ஒருவடம் பரமன் றிடத்து நின்ருட்ட மற்று
மற்றெலாங் கும்பிட
பொருவருஞ் சுருதிகள் சுற்றிலும் போற்றிட வினிது
பொன்னூச லாடியருளே
பொன்னே பெருந்துறைச் சிவயோக நாயகி
பொன்னூச லாடியருளே. (91)

தேமேவு த...குருந்தடி நீழலிடிகைத் தெய்வராகி பற்பமேல்
செம்பொற் பொகுட் டிடைத் திருவடித்
தாமரைச் சிவலிங்க சன்னதிக்கண்
மாமேவு மார்பன வனுந்தி மலர்வேதன் மகவான்
முதற்றிசை யுளோர் மகுட நிமிடத்
தொடுவணங்கத் தகுந்தில்லை மண்டப
மருங்கி லொருபால்

கோமேதகத்தைப் பலகை வயிடூரியப் புடைகுலவு
காலமா ணிக்கமாக
குலமுற்று மரகதப் பவளநீலங் களிகொளுவு
மிட்டவட்ட

பூமேதக...... புருடராக வயிரங் கொண்ட
பொன்னூச லாடியருளே
பொன்னே பெருந்துறைச் சிவயோக நாயகி
பொன்னூச லாடியருளே. (92)

ஓலிமறையின் முதனவிலும் ஓமெனு மெழுத்தன்ன
உலகெலா முட்கொள்வதாய்
ஓங்கொளி பரந்திட மகன்று தானுக்
கொண்டுள்ள ...........தாய

கலிகெழு புனற் சடைக் கடவுள் மிடுவதாய்க் காணுந்
தொறும் புதுமையாய் கற்பனை கடந்ததாய்
சிற்பரந்தமெய்க் கனகசபை மண்டபத்தி

அலர்மாது திருமேனி தொட்டணிவ குப்பொடு திருத்தவி
ஞுவாணி தெள்ளமுதஞ் செவிக்குற
நிவேதிக்கவா னரம்பையர் வழுத்தப் பொலிக......

பொலிகென்று தவமி...... பொற்.........
பொன்னூச லாடியருளே
பொன்னே பெருந்துறைச் சிவயோக நாயகி
பொன்னூச லாடியருளே. (93)

மேருமலையைக் குடைந்தனைய *பாரிக்கையது மிக்க
நவரத்தின சக்கர
வெற்புக் களைக்கடைந் தனையகூர் வேலையது
விண்ணுலகை மண்ணுலகிலே

---

*" இரவிகுலம் பாரிக்கத்தருவன் " (கலிங். 224.)

பாருமென வித்தார சித்திரரூபப் பளபளப்
புளது வயனும்
பண்ணரிய தேனுந் தொண்டை ரகுநாத பூபால
மண்டபந் தன்னிலேறி
வாரியுல கத்தோ ரறந்தாங்கி சூழ்நாடர் வளமை மிழலைக்
கூற்றுளோா வாழ்வுபெறு நாளென்
கண்குளிர மண்குளிர மழைமாரி பொழிய விண்ணோர்
புரையென மலர்
மாரி மழை பொழியவே வாழி
பொன்னூச லாடியருளே
பொன்னே பெருந்துறைச் சிவயோக நாயகி
பொன்னூச லாடியருளே. (94)

அண்ட ரண்டங் கட்கு நாயகன் கயிலாய வத்தாணி
மண்டபம போலறிய மண்டப மெண்டிசை
நாயற்கு மதிசயிக்கு மண்டப
மண்டல மண்டபங் கட்கு நாயகமான மண்டப
மண்டல மகீபற்கு நாயகம் போலவரு
மச்சுதத் தொண்டை நரபால பூபால
மண்டபந் தன்னிலேறி
கண்டமா யேசுரர் திருப்பணித் தவமுனிவர்
கருங்கூலர் சைவர்
மறையோர் காணிபெறு தரணி காப்பாபரை
யருச்சனைக் கல்வி *மறையோர்சூழ
புண்டரீக மேலாடு மன்னமென வென்னவே
பொன்னூச லாடியருளே
பொன்னே பெருந்துறைச் சிவயோக நாயகி
பொன்னூச லாடியருளே. (95)

* வேதியர் [பா. பேதம்.]

தேனு நாயகி பானு நாயகி தசநாயகிசீ தேவிநாயகி
‡நாலிநாயகி சிவநாயகி கார்
வானநாயகி கானநாயகி வாரிநாயகிபூ வாளிநாயகி.........
.........நாயகி வாலநாயகிமா
ஞான நாயகி மோனநாயகி சூழ் ஞாலநாயகி கானநாயகி
நாக நாயகி
ஆனஓ நமோவெனு நாயகி பொன்னூச லாடுகவே
போகநாயகி ஏகநாயகி ஊச லாடுகவே. (96).

ஆடு சோலையில் ஓடு சாய்கையில் ஆலுமா மயிலோ
ஆழிவாரிதி மீதிலே யசை *ஆனமான மணியோ
நீடு காலமொரு மேகமூடு நிலாவு சோதி மினோ
நீரிலலலை வாரிசாதநி வாசமா நிலையோ.
நாடி......கோச பரவிலாச நாட்டாதி தாரகமோ
ஞாலமேல் வரு நீலமான நளானதோ வெனவே
ஓடி மீள உலாச மாமணி ஊச லாடுகவே
யோக நாயகி ஏகநாயகி ஊசலா டுகவே. (97)

மாதபோதனர் போத மானத வாவி யோதி மமே
வாத ராரண வேதசாத வாலகோ கிலமே
ஏதிலார் விழி காணொணாத விராச வானிதியே யெமசாமள
ரூபமாமபி ராமராம கோமமே
மூதார வுருவாதி தராகமல மாரணமே மூரலான மூழ்கவே
விளைமோக வாரிதியே
ஓது மாதர் வோர் தயாநிதி யூசலாடுகவே
யோகநாயகி யேகநாயகி யூசலாடுகவே, (98)

---

* ஆனமானம்—சிறப்பு. ‡ நாலி—முத்து.

பாகு பால்கனி தேனளாவிய பானிலா மொழியாய்
பானு லோசனர் பாதியாகிய பாலரு முலையாய்
மேகமா யருள் மாரியே பொழி வேலைகூர் விழியாய்
வீரவேள் குடி போன வாளொளி வீசுவார் குழை
[யாய்
நாக பூஷணர் வேணி சேர்பிறை நாறு சூடியாய் நாவியோ
டகிலாவி நீவிய ஞானவார் குழலார்
ஓகையா லெனையா ......ரது யூச லாடுகவே
யோகநாயகி யேகநாயகி யூசலாடுகவே. (99)

ஆழி சூழ்புவி வானவானவர் ஆறுவாவி கள்பாய
ஆரநீர் சேரவே விளைசாலி சேர்பயி லாசால
மேழி காவலர் நீதி மானகர் வேத வேதியரான மேலைவானவர்
சாலைபாலையும் வேணிசேர் பிறையார்
வாழு நீறுசை வாகமாதிகள் வாய்மை மூவர்கள் பரவாதவூரர்
சொல்லான மாமணி வாசகா தியுமோர்
வாழி நாள்பெற வாழி வாழிய வூசலாடுகவே
யோக நாயகி யேகநாயகி வூசலா டுகவே. (100)

பொன்னூசற் பருவம் முற்றும்.

சிவயோகநயாகி பிள்ளைத் தமிழ் முற்றிற்று.

வெற்றிவேல் புவர் பிரிண்டிங் பிரஸ், தெற்கலங்கம், தஞ்சாவூர்.

# திருப்பெருந்துறை

# சிவயோக நாயகி பிள்ளைத்தமிழ்.

## பிழைதிருத்தம்.

| பாடல். | அடி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| காப்பு | 3 | பரசுவற்க | பரசுவர்க்க |
| ,, | 4 | கரசுவற்க | கரசுவர்க்க |
| 2 | 13 | சிவபவக் 3 (ண்) | சிவப்பவக் 2 (எண) |
| 4 | 8 | மதிவருக்க | மதிவருக்க முகத்தானு |
| 7 | 6 | கடலெழும் புவியெழும் | கடலேழும் புவியேழும் |
| 36 | 8 | வரார்குழ | வார்குழ |
| 64 | 1 | பொலிகை | பொய்கை |
| ,, | 8 | நீவளரெலாம் | நீவாரெலாம் |

## தரங்கை

# வீரவேலாயுதசுவாமி பிள்ளைத்தமிழ்.


| முதற்குறிப்பு. | | பாட்டு எண். | முதற்குறிப்பு. | | பாட்டு எண். |
|---|---|---|---|---|---|
| அஞ்சொன் | ... | 37 | கரிவாளை | ... | 45 |
| அடலவுணர் | ... | 77 | கல்லுற்ற | ... | 72 |
| அண்ட | ... | 92 | கள்ளக் | ... | 54 |
| அதல | ... | 48 | கற்பகக் | ... | 64 |
| அமரர் | ... | 46 | கணைக | ... | 49 |
| அமராடு | ... | 31 | காமேவு | ... | 2 |
| அருணோதயமே | ... | 83 | கார்கொண்ட | ... | 43 |
| அரும்பிளங் | ... | 51 | காளகூட | ... | 24 |
| அழலெழும் | ... | 38 | கிளைக்குங் | ... | 52 |
| அள்ளிக் | ... | 22 | குருகுகிரி | ... | 68 |
| அளிகுமிறு | ... | 79 | கூறும் புவனம் | ... | 21 |
| அனக விதுல | ... | 47 | கொடிக்கு | ... | 55 |
| இந்தாரு | ... | 71 | கோட்டுங் | ... | 90 |
| இயலு | ... | 76 | கோரமுறு | ... | 63 |
| இருள்பிட்டு | ... | 74 | கோலுஞ் | .... | 88 |
| உரகபதி | ... | 53 | சதுர்மா | .... | 84 |
| உனதுபுக | ... | 80 | சிலையெனப் | ... | 50 |
| ஊழியிற் | ... | 8 | சீர்பூத்த | .... | 1 |
| ஒள்ளொளித் | ... | 42 | சுடர்விட் | ... | 89 |
| ககனமுகடகடு | ... | 34 | சுரர்களு | ... | 17 |
| கங்கைப் | ... | 15 | சுருட்டுங் | ... | 25 |
| கடுசின | ... | 5 | சுருதிபரவு | ... | 81 |
| கண்டகர் | ... | 14 | செங்காவி | ... | 33 |
| கண்டுநேர் | ... | 61 | செம்பொற் | ... | 4 |
| கந்த மலர் | ... | 36 | செய்ய | ... | 18 |

| முதற்குறிப்பு. | பாட்டு எண். |
|---|---|
| தண்ணென் ... | 81 |
| தனதட ... | 27 |
| ...திடவமரர்கள் ... | 19 |
| திருவே ... | 56 |
| துங்க ... | 16 |
| துதிபரவு ... | 28 |
| துப்படும் ... | 93 |
| துளிக்கும் ... | 85 |
| தொட்டிளங் .... | 13 |
| தொண்டர் ... | 29 |
| நிகழ்துற ... | 20 |
| நிருதர்குல ... | 57 |
| நிலவு ... | 58 |
| நெட்டுடற் ... | 73 |
| நெடிபடு ... | 65 |
| பங்கே ... | 11 |
| பச்சைப் .... | 12 |
| பச்சைப்பசுங் ... | 44 |
| பராசரர் ... | 39 |
| பாசகா ... | 67 |
| பூந்துணர்க் ... | 6 |

| முதற்பகுதி. | பாட்டு எண். |
|---|---|
| பூவிரி ... | 69 |
| பொதுவர்மனை ... | 35 |
| மகவான ... | 9 |
| மறிதிரை ... | 26 |
| முகுளவீர ... | 78 |
| முட்டு ... | 40 |
| முத்தொழிற் ... | 91 |
| முந்தை ... | 30 |
| முப்புர ... | 3 |
| முறிதிரைவிரவு ... | 7 |
| முருக்கிதழ்க் ... | 66 |
| வண்டார் ... | 32 |
| வழியிற் ... | 87 |
| வள்வார் ... | 86 |
| வாடகச் ... | 70 |
| வார்க்குங் .... | 23 |
| வாராட்டு .... | 10 |
| விரைக் ... | 75 |
| வெண்ணிலாக் ... | 41 |
| வெம்பிக் ... | 62 |

உ

முருகன் துணை.

## தரங்கை

# "வீரவேலாயுதசுவாமி பிள்ளைத்தமிழ்"

## காப்புப் பருவம்.

### 1. கண்ணபிரான் துதி.

சீர்பூத்த வுந்திச் செழும்போதில் நான்முகச்
சிறைவண் டிருந்த வேதத்
தெள்விளி யெடுத்துலகு பதினாலு நல்கத்
திருந்தளிகள் பூத்து நிற்குங்
கார்பூத்த கொண்டற் கனிந்ததிரு மேனியெங்
கண்ணனைப் பண்ணு லாவுங்
கனியிதழ்க் கொன்றையந் தீங்குழற் பவளவாய்க்
கடவுளைக் கை குவிப்பாங்
கூர்பூத்த செங்கட் கருங்கயற் செந்துவர்க்
கொவ்வைவாய்க் கவுரி யிமவான்
குலக்கொடி மடப்பிடிதன் வயிறுளைந் தீன்றசெங்
குமரனைக் காந்தள் சூட்டுந்
தார்பூத்த பன்னிரு தடம்பொற் குவட்டிலிரு
தனதடக் கொடிகள் படரத்
தண்ணளி சுரக்குந் தரங்கைவடி வேலனைச்
சந்ததங் காக்க வென்றே, (1)

## 2. விநாயகக் கடவுள் துதி.

காமேவு கற்பகப் பொன்னு டளித்திடுங்
 கடவுளர்க் கரசு வாய்த்த
கனதனப் பொற்குவடி ரண்டைச் சுமந்திடுங்
 களியானை மண வாளனை
மாமேவு பச்சைப் பசுந்துழாய்க் கொண்டலிரு
 வரந்தருந் திரு மாயவன்
மருகனைத் தென்றரங் கன்புரியில் வீரவேல்
 வள்ளலைக் காத்த ளிக்கத்
தேமேவு நற்கனி விரும்பிச் சுரும்புமுரல்
 செம்பொனங் கொன்றை சூட்டுஞ்
செஞ்சுடர்க் குன்றைவலம் வந்திடுங் கன்றரிய
 திருநான் மறைக்கு மெட்டா
நாமேவு குடிலைப் பரஞ்சுடர்ச் சூழுமொளி
 நான்முகத் தேவ மூத்து
நால்வாயின் வீரகற் பகயானை செய்யவடி
 நளினங் துதித் திடுகவே. (2)

## 3. சிவபெருமான் துதி.

முரிதிரைவிரவு குடவளைவயிறு முதிர்கரு நித்திலங்
 கார்மலர்க் கரத் தோறு
முழுமதிநிலவின் முகிமெனவுலவ மொழிதரு சொற்
 றரங்காபுரிச் சீர்த்திகொண்
முழுமுதல் சுருதி யரியயன் மார்க(ள்)
 முறைதொழுநித்தரங் காதரித்தேத்துரை
முழுதுல கவர்க ளடிதொழ வருளு
 முதல்கிரிபெற்றிடும் பார்ப்பதிக்கேற்றவர்
திரிபுர மெரிய விளநகை கொளுவித
 ......னெழின......மெய்ப்புரங் தூள்படப்பார்த்தவர்

தெரிதரு மதுர கவிவலா பரசு
திகழொளிசுத்தரிந்தார் சடைச்சூட்டினர்
திரைநதி யிதழி யறுகலர் செருகு
திருமுடிநற்களங் காரெனக்காட்டினர்
செழுமறை துடரு மலரடி யுகள
சிவமுதல்நிட்களங் கேசரைப்போற்றுது
அரவுட லுரக முடிநெளி நெளிய
வருதிசைமத்தகங்கூர் மதப்போர்க்கரி
மறுபுர முறுகி நிமிர்தலை கவிழ
வளர்புனல்மொய்த்தலம் பார்திரைக்கூக்குரல்
மறிதிரை யுவரி சுறுசுறு சுறென
மறுவளமொய்த்திடுங் தாரகைக்கூட்டமொண்
மணிமழை பொழிதல் நிகரென வுதிர
வடகுவடுட்கநங் தாரணிக்கோக்குல
வருவரை பொருமி மிகநெரி நெரிய
வசுரர்சமர்க்களங் தீயெழப்பூக்குழல்
அவுணர்தம் மகளிர் வயிறெரி தவழ
வடலொடெதிர்ந்திடுஞ் சூரன்மற்றோட்டுணை
யவை கிலுகிலென வரமொடு விறலு
மறவுடல்வெற்பிரண் டாய்விழப்பார்த்தொளி
அடலயில் முடுகு சரவண பவனை
யலரவும்வெற்பலங் காரனைக்காக்கவே. (3)

## 4. பிரமதேவன் துதி.

செம்பொற் பொலன்குவட் டீரா றுடைப்பெருஞ்
செம்மணிக் குணபூதரச்
சென்னியிற் றுன்னுசெங் கதிரோத யத்தபனர்
சேர்ந்தனற் கிரீடநிறையும்
அம்பொற் புயக்குவடு மணிமார்பு மாகவந்
தடியேனு ளத்தடத்தும்

அலையெறி தரங்கைப் புரத்தும் புரக்குமெம்
ஐயனைக் காத்தளிக்கக்
கம்......த்து நெக்கிடுங் கனியிற் கனிந்துளங்
கடவுண்முனி வரரேத்திடக்
கற்பகக் கரவரைசு மெண்டிசைப் பாலருங்
கருதுபுத் தெளிரேவருந்
தம்பொற் பிரகாசமணி முடியால் வணங்கவெண்
டாமரைத் தையல்தழுவத்
தமனியத் தண்டமுக டுச்சிமே லரசுபுரி
சதுர்முகத் தண்ணலவனே, (4)

## 5. துர்க்கை துதி.

கடுசின முடற்றி யெற்றும்வா ளவுணர்கள்
மதுதெறிக்க விட்டகோ ளரிசொல
ககனமுக டெக்கி நிற்கும் யானைபல
கதறவிகு மத்தகத்து லாவிவர
முடுகி யெதிர் கொக்கரித்த மாமயிடன்
முதுகுடல் பிளக்கவெட்டி நாளுமவன்
முடிமிசை மிதித்த துர்க்கை மாதுமலர்
முளரியடி யைப்பழிச்சு வரமேமது
கொடிய வினைவெற் பிடித்து வாழுரக்
குலபதி முடிப்படத்து லாவுமணி
குலைய மெய் கிழித்தெடுத்த வீரமயில்
குலவிபிர புச்சமத்தர் வேலிறைவர்
தொடு கடல்கொழித்த முத்துவால் வளைகள்
சுடர்மதியுடுக்க ணத்துலா வணிகர்துதி
தனதநற் புரிக்குள் வாள் முருகா
சுமுகாகு கரைப்புரக்க நாடோறுமே. (5)

## 6. பிரமன் துதி.

பூந்துணர்க் கற்பகக் காவுந் தளிக்கப்
புலோமிசை மணிக் கழுத்திற்
பொன்னூற ரிக்கதப் பெருந்தேவர் காற்றளைப்
பூட்டுந் தெறிக்க வழலிற்
காந்துவெஞ் சீற்றக் கொடுஞ்சூரி யனுள்ளங்
கலங்கக் கலங்க உந்தி
கதிர்வே லொடுந்தன் கடைக்கண் சிவக்குமெங்
கந்தனைப் போங் தளிக்கப்
பாந்தள்வெஞ் சூடிகையிற் சுடர்மணி குயிற்றிவிண்
படருங் கொடிஞ்சில் மானம்
பரிவிற் பெறப்பொன் விழியிற் பெறச்சீர்கள்
பாவளகை புரவு பூண்டே
யேந்துமற் றிருநிதி புரக்கச் சுரக்குமரு
ளெந்தையைச் சந்த மறைதே
ரிறைவனைத் தென்றரங் காபுரியில் வந்துநின்
றேத்துங் தனிக் கடவுளே. (6)

## 7. சத்தமாதர்கள் துதி.

முப்புர மொரு நொடியி லட்டடலை யாகயொளிர்
முத்துநிறைதரு முறுவ லாடிநின்றவள்
முற்றுசது மதிவதனி சக்கிரிக வுமாரிதரை
முற்றுமகிழ் வதனமலர் கோலமென்றவள்
துப்புறமு மிதழிகிரி யிற்சிறகா ரியெதிர்
துரகனுயிர் கவரமுனி வாகிநின்றவள்
சொற்கிறைவி வனசமயிலிப் புவனயா யிவர்கள்
துத்திமல ரடியுகளை யாம்வணங்குதும்
வெப்புரக பதிமகுட முற்கிழிய வோர்களினர்
விட்டுவள ரவுணர்குல மாவெனுந்தரு

வெட்டியமு தசணர்படு துக்கமொழி வாகவருள்
வெற்றிமயில் முருகர்வடி வேலர்புங்கவர்
இப்புவியில் வளமருவு சொற்கநிக ரானதல
மெய்ப்பொருளு மருவுதிரு வாழ்தரங்கையி
லெட்டமுறு மிறைவரருண் வைத்தமுரு கேசர்தமி
ழெத்திசையு மேறுமவர் சீர் விளங்கவே. (7)

ஊழியிற் பெருவெள்ள மொப்பக் கடாகலுழி
யூற்றவுயி ராற்ருதுகண்
டுலவும் பெருஞ்செவிக் காற்றிற் சுவற்றியவ்
வுயிர்க்கருள் சுரந்தளிக்குஞ்
சூழிக் கராசலக் கற்பகச கோதரச்
சுந்தரனை யறம்வளர்க்குஞ்
சுமங்கலி யளித்தரு டரங்கைவரும் வீரவேற்
றுய்யனைக் காத்தளிக்க
வேழக் குலாதிபத் தரைசுவர மேற்கொண்டு
விண்ணு டளிக்கும்வேந்தின்
விரைமலர்க் கொந்தார்மந் தார்மாலை முஞைக
விண்டுதண் டேன்றுளிக்கப்
பாழிப் புயாசலக் கந்தினிற் பூட்டுபொற்
படர்முலைக் கடாக்களிற்றுப்
பவளவாய்ச் செங்கட் கருங்குழற் காட்டளிகள்
பாட்டுளர் பிராட்டிதானே. (8)

மகவான மதமாமலை யயிரா பதராசதன்
மதிவாணுதறேமொழி யயிராணிமணுளனை
முகின்மா மலைபூரணை யுயிர்நா தனைவேதனை
முடிகீறியமுதலோ ரடிபாடுதும்
அகநான்மறை தேர்தருதன தாபுரி வாழ்தரு
கருணகரன்மாதுமை யருநாயகன்வேல்பெறு
குகநாயகன் வாழ்சிவ குருநாயகன் வானவர்
குலநாயகன்மெனனிகுல வாரருள்கூறவே. (9)

வர்ராட்டு கொங்கைக் குவட்டிளங் கிரிராச
வல்லிதன் மடியில்வைத்து
மணிநுதற் சுட்டியுங் கட்டுபொன் னரைஞாணு
மவிரொளித் தாளவடமுஞ்
சீராட்டு முச்சியிற் கொண்டையுங் கெண்டையுஞ்
சேர்த்துப் புனைந்திடுக்கிச்
செம்பவழ வாய்நெரித் துச்சிமோந் திடுமயிற்
செல்வனைப் போற்றிநிற்பார்
தாராட்டு பொன்முடித் தப்பரைபன் னிருவருந்
ததைமலர்த் தொங்கலாழித்
தலைவர்களு ருத்திரக் கடவுள்பதி னொருவருஞ்
சாற்றுமெண் வசுக்கடவுளும்
பாராட்டு சீர்த்திகொண் மருத்துவர்களிருவரும்
பருமணி முடித்தேவரும்
பலகட லொலிக்குந் தரங்கா புரிக்குட்
பராவிநின் றெஞ்ஞான்றுமே. (10)

## காப்புப்பருவம் முற்றும்.

# செங்கீரைப் பருவம்.

பங்கே ருகத்தனெரி வெட்கருப் போனொளிர்
    பைம்பொனிடப் பைதாங்கப்
பருதிகணி தஞ்சொலத் திங்கள்வெண் குடைதரப்
    படர்கனலி தீபமேந்தக்
கொங்கார் நறுந்தொடைப் பவன்னவரு ணன்சிவிறி
    கொள்ளயெம னுடைவாள்பெறக்
குலநிருதி சாமரை யிரட்டப் புரந்தரன்
    கொண்டுதக நீர்வார்த்திட
அங்காதல் கொண்டுவளர் முலையானை கைப்பற்றி
    யருண்மணிக் கோலமுடனே
ஐயன் றரங்கையின் மாசிலா மணிபுணரும்
    அகிலாண்ட வல்லியிருகட்
செங்காவி மலர்வரு சந்திரோதை யக்குமர
    செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மணிமகுட மூவர்க்கு மொருதலைவ
    செங்கீரை யாடியருளே. (11)

பச்சைப் பசுங்கதிர்க் கற்றைக் கலாபம்
    பரப்புஞ் சிறப்புமயிலும்
படரொளித் தண்டையுங் கிண்கிணிக் காலுமொளி
    பாயும் நிசாரினழகுங்
கச்சிற் பொலிந்திலகு மின்னொளிச் சுரிகையுங்
    கட்டுசெம் பட்டினுடையுங்
கவினிளந் தொந்தியுங் கொந்தியுங் கையுமொளி
    காட்டுபொன் பூட்டுமார்பு

மிச்சைப் படுங்கனக குண்டிலக் காதுமெழி
லேந்துபொன் முடிகளாறு
மிலங்கவந் துன்னடித் தொண்டருக் குற்றிடத்
தெதிர்வந்து நிற்குமுருக
செச்சைத் தடம்புயர் மெச்சுந் தங்கையாய்
செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மணிமகுட மூவர்க்கு மொருதலைவ
செங்கீரை யாடியருளே. (12)

தொட்டிளங் கற்பகப் பொன்னரித் தொங்கற்
சுராதிபன் வதனகமலத்
........................ - ........ .........
.......................................
மொட்டிளங் கொங்கைத் தயித்தியக் கன்னியர்கண்
முகிழ்நகைக் குமுதம்வாட்டி
முனிஞிமிறு சுருதியஞ் செவ்வழிப் பாட்டிசை
முழங்கத் தழங்குகுரலிற்
கொட்டிளங் கேழலறி யாதவடி வாரமுங்
கொடிமுடியோ ரெட்டுமுடைய
குலகிரிகன் னெற்றியிற் செங்கதிர்க் கற்றையொளிர்
கோடான கோடியுதையச்
செட்டிளம் பருதித்தரங் காபுரிக் குமர
செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மணிமகுட மூவர்க்கு மொருதலைவ
செங்கீரை யாடியருளே. (13)

கண்டகர் குலக்குரிசில் வெஞ்சூர னென்கட்
கரந்தன னெனத்திருவுளங்
கண்டுதைய பானுவிற் செஞ்சுடர் கற்றைபொழி
கதிர்வேல் விடுத்துமுன்னீர்

மண்டுமென் றிறல்கெடுத் தனைமுன்ன மின்னமது
மதியாத ளித்தியெனவோ
வளரொளிக் கனகமு நித்திலக் குவையனு
மணிநிறப் பவளமலையு
முண்டிருட் படலங் கிழித்தெறியு நவரெத்தின
வொள்ளெளிக் கிரிராசியு
மொங்கலன் வங்கந் தனைக்கொண்ட ள்ந்துதிறை
யொப்பக் கொழித்துநாளுந்
தெண்டிரை யிறைஞ்சுந் தரங்கா புரிக்குமர
செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மணிமகுட மூவர்க்கு மொருதலைவ
செங்கீரை யாடியருளே, (14)

கங்கைப் பெருங்குலவு கொன்றைச் சடைக்கடவுள்
கணமணிக் குமரேசனே
கற்பகக் காவரை சனிக்கப் புரந்தரன்
கடவுள்வெஞ் சிறைமீட்டிடக்
கொங்கைத் தடங்குவட் டிந்திரா ணிமங்கலங்
குலவுநாண் பூட்டவகிலங்
கொடுங்கலித பத்திரம் தெய்வந் தழைத்திட
கொக்கரித் தெதிர்சூர்முதல்
அங்கந் துளைத்துக் கிரௌவுஞ்சம் பிளந்தவுண
ரணிதளங் கெட்டுமுரிய
வண்டவண் டங்களுந் திண்டாட வேல்பணித்
தருளொடு தரங்கைவருவோர்
சிங்கத் தனிக்குருளை சங்கத் தமிழ்ப்புலவ
செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மணிமகுட மூவர்க்கு மொருதலைவ
செங்கீரை யாடியருளே. (15)

## வேறு.

துங்க மணிக்கன கத்தி லிழைத்திடு
தொட்டி லுதைந்தாடி
துய்யபொன் மேனி முறுக்கி யெழுந்து
துடிப்ப விதழ்ப்பவள
மெங்கு முழக்கி யழக்கிரி மகடா
னிரங்கி யிடுக்கிவள
ரிளமுலை கொட.........................
.........கடலேந்திய.........பவளா
செங்கையி னொருமுலை வருடக் கட்கடை
தேவிமுகம்பார்...................
............வாயி லொதுக்கிச் சிறுநகை
............நிலவூர
அங்கலும் கடைவாய் யொழுக மடுத்தவ
னுடுக செங்கீரை
யார்கலி.......................குமர
வாடுக செங்கீரை. (16)

சுரர்களு மாடச் சுருதிக ளாடத்
தொழுமுனி கணமாடச்
சுடர்மதி நிலவு...........................
............பொலி துய்யவேண்டிக்
கரைபொரு கங்கைத் திரைநுரை பொங்கிக்
காலுவ தெனவீசுங்
க..............தும்பைத் தொங் கமாடக்
கங்கண வரவாடக்
கிரிதரு கொங்கைப் பெண்களி யாடக்
கிளர்தலை வடமாடக்

................யாடச் சங்கரியாட...........
கொழுபுலி முனியாட
அரைமதி முழுமதி யாகப் பணியரை
சாடச் சடையாட
வழகுடனு......................ளியாடி
வாடுக செங்கீரை
யார்கலி பொங்கு தரங்கைக் குமரா
வாடுக செங்கீரை. (17)

செய்ய பொலன் கு..............வணைத்த
செழுஞ்சுடர்...........வினிலுஞ்
செம்மணி கொட்டி யிழைத்த வுலம்பொரு
திண்டோ ளெட்டினிங்
..............டியறம் வளர்மாதுரைத்
..................தமனிய மடிமேலுஞ்
சந்தன பாளித குங்கும மெழுதுந்
தணதட முகின்மேலுங்.......ன
மெய்யிலு மார்வக் கங்கையு...........
......................
நற்கனி யிதழ்வாய் நீர்மார்பு நனைப்பக்
கதிர்மணி முடியசைய
ஐய தவழ்ந்து வளர்ந்து விளங்க
வாடுக செங்கீரை
ஆர்கலி பொங்கு தரங்கைக் குமர
வாடுக செங்கீரை. (18)

...................திட வமரர்கள் வாழ்ந்திட
வந்தா யிந்தூரு
மருணில வார்ந்திடு சடிலர் புராந்தக
னன்பூ றுந்தேனே

வசையொடு மோங்கி நிருதர்கு லேந்திர
லெங்கே சன்றேள்கண்
மடியவில் வாங்கினன் மருகசொல் காங்கய
வண்டார் விண்டோடு
மிசைபெரு வேந்த ரெனமக வீன்றரு
ளெந்தாய் சந்தாரு
மிளமுலை மான்கனி நலன்மது வார்ந்திடும்
வண்டே யென்றேது
திசைசெவி டார்ந்திட வருமயி லூர்ந்தவ
செங்கோ செங்கீரை
திருமகள் வாழ்தரு டரங்கையி னுண்டகை
செங்கோ செங்கீரை. (19)

நிகழ்துற வார்தொழு மடியவர் சூழ்ந்தருள்
கந்தா மந்தார
நிழலரை சீன்றருள் மதகளி ருங்கொடி
பங்கா கங்காளர்
மகிழ்வரு தீங்கனி யமரர்க ளாய்ந்திடு
சத்தா பந்தீர
வருகுக மூண்டெழு மவுணர்கு லாந்தக
கண்டா னுண்டாரு
புகழ்மது வார்ந்திடு சுவையமு தாங்கனி
யெந்தாய் நந்தாத
புவிபுனல் வான்றழல் வளியுயிர் வான்சுட
ரென்றே துந்தேவே
திகழொளி கான்றருள் வளர்வத னும்புய
செங்கோ செங்கீரை
திருமகள் வாழ்தரு டரங்கையி னுண்டகை
செங்கோ செங்கீரை. (20)

**செங்கீரைப் பருவ முற்றிற்று.**

# தாலப்பருவம்.

கூறும் புவனம் படைத்தளித்துக்
    கொழுவி யொடுக்கும் புத்தேளிர்
குறையுற் றிரந்து சூர்க்கொடுமை
    கூறவருளு மையத்தே
சீறுங் குழந்தைப் பசிகொள்ளித்
    தேளிற் சினவ வயிறெக்கிச்
செவ்வாய்ப் பவழத்திதழ் பிதுக்கித்
    தேம்பிக் கமலக் கண்பிசைந்து
விறுஞ் சிறுபுன் குரல்நெரித்து
    விம்மி யழலுங் கவுரியனல்
"மிதித்தாள் போலக் கடிதோடி"
    விரும்பி யிடுக்கிக் கண்டுடைப்பத்
தேறிச் சுரக்குந் திருமுலைப்பால்
    தெவிட்ட வுண்டாய் தாலேலோ
செல்வத் தரங்கை நகர்புரக்குஞ்
    சேயே (தாலோ) தாலேலோ! (21)

அள்ளிக் கொள்ளும் இருட்பிழம்பி
    லருள்வெண் டிங்க ணிலவுதெளித்
தனைய மலர்ப்பூங் குழல்வள்ளிக்
    கன்பர் ......பொ னுடங்குமிடைத்
துள்ளுங் கயற்கண் மால்யானை
    துணைவர்த் தோளா மணிமுத்தே
தொழுவென் மழலைச் சொற்கேட்கச்
    சொல்வா யொருகா லென்றழைக்கும்
வெள்ளம் புனற்பா கீரதிக்கு
    விளம்பா தன்னை மடியேறி

விமலர் முகம்பார்த் திதழ்குவித்து
வேதக் குழவி விளையாடுந்
தெள்ளுங் குதலைக் கனிசொரியுஞ்
சேயே தாலோ தாலேலோ
செல்வத் தரங்கை நகர்புரக்குஞ்
சேயே தாலோ தாலேலோ. (22)

வார்க்குங் குமப்பொற் கொங்கையுமை
வள்ள லுடனே விடையேறி
வாவிக் கரையில் வரக்கண்டு
மணிவாய் பவள மலர்ந்தோடிப்
பார்க்குங் குழவி யொன்றெழுந்து
பாடுங் குழவி யொன்றழுது
பார்க்குங் குழவி யொன்றுநகைப்
பவளந் திறக்கு மொருகுழவி
யார்க்குஞ் சிறுகிண் கிணிக்காலி
லாடுங் குழவி யொன்றுபுன
லளையுங் குழவி யொன்றிணைய
வளவில் விளையாட் டயர்ந்துமையாள்
சேர்க்குங் கருணைத் திருமேனி
யொன்றாய் வந்தாய் தாலேலோ
செல்வத் தரங்கை நகர்புரக்குஞ்
சேயே தாலோ தாலேலோ. (23)

காளகூட விடங் கொழிக்கக்
கடுக்குந் துளைவா ளெயிற்றுரகக்
கர கங்கணத்துக் குணக்குன்றின்
கண்ணின் மணியே யணிசக்கிர
வாள கிரிதான் வீதியென
வளவாய்ச் சூட்டு நெடுங்கழுத்து

மணிப்பொற் ரேகைப் பரிநடத்தும்
வல்ல ரவுலம்வாழ்பன்னிரண்டு
தோள கூடற்ற னின்மறையுங்
துளங்க விளங்குந் தமிழ்க்கடலிற்
போயி லறவர் பொருள்விரிக்குந்
துய்ய புலவர் சூரிடுபுத்
தேளிற் காலிற் றளையவிழ்க்குஞ்
சேவ்வே லுழவா தாலேலோ
செல்வத் தரங்கை நகர்புரக்குஞ்
சேயே தாலோ தாலேலோ. (24)

சுருட்டுந் தரங்கைக் கடல்வயிறு
சுவறக் குடிக்குங் காளமுகிற்
றேன்றுஞ் சுடரிற் சாமளப்பூஞ்
சூட்டு மொட்டுக் கார்மயிலின்
மருட்டுந் துணைக்கண் கவர்வனப்பு
வளர்பன் னிரண்டு திண்டோளு
மருவுஞ் சந்திரோ தயமுகமு
மலர மாலுஞ் சேலினத்தை
வெருட்டுங் கருங்கட் கலாமகட்கு
வேந்துஞ் சேவித் தருகுவர
வெள்ளி மலைமேல் வீற்றிருக்கும்
விரும்பு்ந் தாதை யன்னையுளந்
தெருட்டுந் துணைக்கண் மணிகுளிர்ப்பச்
செல்லு முருகா தாலேலோ
செல்வத் தரங்க நகர்புரக்குஞ்
சேயே தாலோ தாலேலோ. (25)

## (வேறு)

மறிதிரை சுருட்டுகடல் கொழிதரு மணித்தரள
மதியொளி திரட்டியன வோர்பாலே
வளர்சிறை யனப்பெடைகள் பிடிநடை நுளைச்சியர்கள்
மடநடைகள் கற்றுலவு மோர்பாலே
செறிபொழில் மலர்ப்புனையின் விளரியை யிசைத்துநிதி
சிறுகிழி யவிழ்க்குமளி யோர்பாலே
திருமல ரிதழ்க்குவளை விழிகளை நிகர்க்கவுறு
செறிதவ முஞற்றுதட மோர்பாலே
வெறிகமழ் முடப்பலவி னுதிர்சுளை யடைத்தமடை
மிகுசுற வுடைத்துலவு மோர்பாலே
வெளிமுகட ளக்கமளர் கனககிரி யொப்பவயல்
விளைசெனல்கள் கட்டுமலை யோர்பாலே
அறிஞர்கடு திப்பவள மருவிய புகழ்த்தனத
னரியநக ருக்கதிப தாலேலோ
வனுபம விசித்திரமயில் நிபுணகனி முத்தமிழ்சொ
லறுமுக வச்சிரத் தாலேலோ (26)

தனதட முகுட்குமரி யிமசயில புத்திரியுமை
தருணவதி புத்திரமயில் வீராசேர்
சததள மலர்க்கடவுள் பிரண முரைப்பநரை
சதுமுடி புடைத்தவிர லாளாவோர்
வனசரர் வளர்த்தகிளி யிளகுதன சக்கிரகுல
வரைகளை யெடுப்பனிரு தோளாலே
மலரடி பிடிப்பன்வரி சுரிகுழல் முடிப்பன்மகிழ்
மதகலை படிப்பனெனை யாளாய்நியெனவவள்
மனக்கடின கலுமுருக விச்சைசொலி யிதழமுது
துய்த்த விரகாளா சீ

ரெழுதரிய கட்டழக சரவணப வக்கடவு
 ளிறைமுருக சத்திதர தாலேலோ
அனகஅது லப்பிறவுட் குணதர தயிர்த்தியர்செய்
 யமரர்சிறை விட்டதுரை தாலேலோ
அனுபமபுகழ்த் தனத்புரி முருக முத்தமிழ்
 சொல்லறு முகவச்சிர தரதாலேலோ, (27)

துதிபரவு நற்சுருதி முடியினட மிட்டதொரு
 சுடரின்வரு சித்துருவ தாலேலோ
சுகவசனி நற்கரியி னொருமகட னக்கினிய
 துவரிதழின் வித்துரும தாலேலோ
மதிவதன சட்கமல மனமொழியு மெட்டரிய
 வளரொளி பரப்பிரம தாலேலோ
மலைமக டனக்குமலை புனல்மக டனக்குமொரு
 மகவென வுதித்தமணி தாலேலோ
விதியையும் விதித்த விதியென விழிக்க
 வுஞர்மிகுசிறை விதித்தவிதி தாலேலோ
விமலனக லத்துருவ மலர்விசிகம் விட்டுவரு
 விறல்மதனன் மைத்துனவ தாலேலோ
அதிமதுர முத்தனியின் வடிசுவை யெனப்புகலும்
 அமிழ்த மழலைக்குழக தாலேலோ
அனுபமபு கழ்த்தனத புரிமுருக முத்தமிழ்சொல்
 லறுமுகவ வச்சிரதர தாலேலோ (28)

தொண்டர் தமக்கெளியாய் துங்க சுமங்களனே
 தூயா மாமாயா
சுந்தர சொற்கமெலா............
 ............னேசூரா பேராள
மண்டுக ளத்தவுணர் சிண்டுபி டுங்குமயில்
 வாகார் பாகார்சொல்

வஞ்சிகுற..................மே
    வாஞர் சோஞடா
அண்டர் தமக்கரைசே சங்கரி தன்புதல்வா
    ஆஞ கோஞகும்
ஐங்க...........ங்கவர் தந்தவமே
    யாலா மேலோனே
தண்டமி ழுக்கருள்வாய் தென்ற னகைப்பதியாய்
    தாலோ தாலேலோ.
..................குருவே யிங்கித செங்குமரா
    தாலோ தாலேலோ, (29)

முந்தை மறைப்பொருளே வஞ்சக ருக்கிருளே......
    ..............................
.........கனுக்கரியாய் கண்டக ருக்கெரியாய்
    மூள்வாய் தாலேலோ
பந்த மொழித்தருள்வாய் சிந்தை...........யே
    பாலா தாலேலோ
பண்பு மிகுத்தசொலா யும்பர் துதித்திடவாழ்
    பாதா தாலேலோ
கந்தம..............தைவிழிக்கருவே
    காவே தாலேலோ
......கண்கள் களித்திடவார் செம்பொ ஞெளிக்கிரி
    யாகார் தாலேலோ
......................குயிரேவந்த அருட்பயிரே
    தாலோ தாலேலோ. (30)

**தாலப்பருவம் முற்றிற்று.**

# சப்பாணிப்பருவம்.

அமராடு திண்சிலைப் பிசிதா சனச்சேனை
யட்டிடத் தொட்டனூட்பி
னருகொடி யொகு.....................ட்
டழல்வாய் நிணங்கடுக்கத்
திமிராடு சென்னரிக் குலமுளை பல்லியஞ்
செய்யவொள் ளிருணணிற்
செங்கட் கருந்தலைத் தா.....கொத் திட்டுமேற்
செங்குடாத் தொங்கல்சூட்டி
கமராடு வற்ற.........வுட் பெய்ப் பசுந்தோற்
கடிமணக் கூறையிட்டுக்
கன்னியென் றுருபேய் கழுத்திற் புனைந்துசொற்
கலியாண மாகவுண்ணச்
சமராடு செங்களம் பட்டிடக் கண்டவேள்
சப்பாணி கொட்டியருளே.
தனதபுரி வடிவேல மிர்துவசன வுமைபால
சப்பாணி கொட்டியருளே. (31)

வண்டார் நறுந்துணர்க் கொன்றையந் தொங்கலணி
வான்பொற் குவட்டிலேறி
மலைவல்லி கொங்கைக்கடாக் களிறுழக்கு மணி
மார்பில் வெண்புழுதி யாடி
விண்டாவு செஞ்சடைக் காட்டிடை முளைத்தெழும்
வெள்ளிக் குருத்தின்மிளிரும்
வெண்பிறைப் பாதியிற் கேழலொண் கோடொற்றி
மிளிர்முழுத் திங்களாக்கிக்
கொண்டார் பணிப்பணம் விரிப்பப் பயத்தொடுங்
குறுகுறு நடந்துகங்கைக்

குளிர்துறைக் கக்கரைக் கிக்கரை யுங்குதலைக்
குடமெனப் பற்றிநீந்தித்
தண்டாது விளையாடு சண்முகக் குழவியே
சப்பாணி கொட்டியருளே
தனதபுரி வடிவே லமிர்துவசன உமைபால
சப்பாணி கொட்டியருளே. (32)

செங்காவி யாவியிற் கட்குட முடைந்தன்த்
திருமுக மலர்த்துமுளரிச்
செங்காடு மேய்ந்துதங் கடைவாய் குதட்டிடுஞ்
செங்கட் செருத்தன்மேதி
தங்கா தெழுந்திறுகி வட்டமிட் டுயர்முலைத்
தையலாற் மணிமிடற்றிற்
றழைமடற் பூகப் பொதும்பரிற் சென்றுதன்
றனிமழக் கன்றையுள்ளிக்
கங்கா நதிப்பெருக் கென்னப் பரூஉமுலைக்
கண்டிறந் தூற்றவோடுங்
காட்சிவென் பாற்கடற் றெண்டிரை குடித்தெழுங்
கரும்புய றுளித்தல்மானுஞ்
சங்கராம வீதிவளர் சோணாடு காவலர்
சப்பாணி கொட்டியருளே
தனதபுரி வடிவேல மிர்துவசன உமைபால
சப்பாணி கொட்டியருளே. (33)

ககனமுகடகடு கிழிதர நிமிர்ந் திலகுமொரு
கடவுள்வட மேருகிரியிற்
கதிர்விடுங் கொடுமுடியோ ராயிரத் தெட்டுமொரு
கையிற் பறித்து விசி
நகைபுரிந் துடுகணமோ ருண்டையிற் செய்துதிரை
நரலையிடு மதன கிரியை

நறநறெனை விற்குனித் தமரர்முது குளையவெதிர்
நற்சுண்டு விற்றெறித்து
மொகுமொகென் றெழுகட்ற் றெண்ணீர் குடித்தெரி
முழங்கிக் கனற்றும் வடவை
முற்றுமவியப் புரிந்திந் திருதி தேவரு
முளரிப் பொகுட்டி லயனும்
தகவருசகங் களுங்கலங்க விளையாடு வோய்
சப்பாணி கொட்டியருளே
தனதபுரி வடிவேல மிருதுவசன வுமைபால
சப்பாணி கொட்டியருளே, (34)

பொதுவர்மனை வயினுலு நிரைநிவந் தொருமலர்ப்
பொற்பதந் தூக்கியாய்ச்சி
பொருபடைக் கண்படை யுணர்ந்தொருகை யரைமணிகள்
ஒத்தவொரு கையளையளைந்து
உதிர்கனிச் செவ்வாய் மலர்ந்துகவ் கவ்வென்ன
வூற்றுகின் றமைதியவள் தான்
உறுக்கிச் சினத்தான் மழக்கன்றி யாப்புறும்
வொண்கயிற் ருற்சிமிழ்ப்பக்
கதுமெனச் செந்தா மரைக்கண் பிசைந்தழுது
கைவிதிர்க் கட்டொடேகி
கவடுகொடு நெடியமரு தொடியவொரு காலோச்சு
கருணைசொரி புயலின்மருகா
சதுரநிசி சரர்வயிறு கரிபெருக வருமுருக
சப்பாணி கொட்டியருளே
தனதபுரி வடிவேல மிருதுவசன வுமைபால
சப்பாணி கொட்டியருளே. (35)

( வேறு. )

கந்த மலர்க்குழ லிந்திரை பூட்டிய
கட்டரை ஞாணிடையிற்
கட்டிய கிண்கிணி கிண்கிணி ணெனக்
கங்கை மகட்புனையுஞ்
சந்த மலர்க்கழ லிட்ட சதங்கை
சலெென சலஞ்சலனத்
தமனிய முத்து வடங் கலினென்னத்
தண்டை சிலம்பறவும்
உந்தி குழைந்திடை துள்ளி யெழுந்திரு
காலு மெடுத்துமையாள்
ஒண்பொன் மடித்தல மீது விழுந்தரு
டாதை யுரத்துதையுங்
கொந்தலர் பம்பைக் குஞ்சிக் குமர
கொட்டுக சப்பாணி
குலவு தரங்கை யருட்கதிர் வேலவ
கொட்டுக சப்பாணி. (36)

அஞ்சொன் முலைக்கொடி யறம்வளர் மாதுகோ
தாட்டு மருங்கனியே
யமரர் மடப்பிடி புணர்கல விக்கட
லாடு மிளங்களிறே
விஞ்சு மலர்ப்பிர மாவு மதிப்பிடும்
வேத விழுப்பொருளே
மெய்த்தவர் பற்றிய சிற்கன ரூபக
விரிகதிர் மரகதமே
தஞ்ச மெனப்பணி விண்ணவர் காவல
சற்குண பூதரமே
தத்துவ ஞானசி காமணி யான
சதாசிவ போதகனே

கொஞ்சு குறச்சிறு வஞ்சி மகளுக
  கொட்டுக சப்பாணி
குலவு தரங்கை யருட்கதிர் வேலவ
  கொட்டுக சப்பாணி. (37

அழலெழும் வாள வுணக்கட லுற்றம
  ராடு பறந்தலையில்
அற்றுயிர் பெற்ற தெனக்குறை யுடல
  மாடிட வோடியபேய்
முழுவென மத்தக மால்கரி யிற்றலை
  கொண்டு முழக்கவோர்பேய்
முதிரிரு குண்டல மொத்திய தாள
  மெனச்சதி முறைகொட்டப்
பிழைபடு வாய்கடி மறந்தடல் வேலின்
  பெருமை வழுத்தவோர்
பேய்பிடி துகில்தா ளிசவுக் களியென்னப்
  பேசி யளித்திடுபேய்
குழுவுகள் குணலை கூத்துக............டவ
  கொட்டுக சப்பாணி
குலவுகு தரங்கை யருட்கதிர் வேலவ
  கொட்டுக சப்பாணி. (38)

பராசரர் புத்திர மீனுரு நீக்கு
  பரா...............விற் குறவா
பராவரு கற்பக தாரு மலர்க்கிளி
  பாடுமி லங்கையிலே
யிராவண வல்லி புகுந்து பிடுங்கி
  யடுங்கரி மாமருகா
வேத்து தொழும்பர்க ளுண்டுரு குஞ்சுவை
  யூறுமி ளங்கனியே

சுராதிப வாரண பூரண ஞான
    சுகோதைய சாகரமே
சுந்தர மங்கள பூதவ சகா
    வண்டுது தைந்தளையுங்
குராவலர் பன்னிரு பொற்புய பூதர
    கொட்டுக சப்பாணி
குலவு தரங்கை யருட்கதிர் வேலவ
    கொட்டுக சப்பாணி. (39)

மூட்டு சமர்க்கள வவுணர் செடித்தலை
    மூளைபி டுங்கிடுளுள்
மும்மத யானை யுடற்குரை கூல
    முரிக்கும ருப்பெவையும்
வட்ட மலர்க்கொடி வளைய முறித்திடு
    மரகத நற்கவிகை
வளமலி பாசடை தேரில் விழுந்திடு
    மருங்கு குட்குலமாய்
பட்டெறி பாந்தி லெழுந்துவி ழுந்தலை
    பங்கய மாமலராய்
படுகளம் வாரிச வாவியெ னப்புகழ்
    பாடிவி ழிக்கடையால்
கொட்டுத ழற்கண நாதர்க ளுயக
    கொட்டுக சப்பாணி
குலவு தரங்கை யருட்கதிர் வேலவ
    கொட்டுக சப்பாணி. (40)

**சப்பாணிப்பருவம் முற்றிற்று.**

---

# முத்தப் பருவம்.

வெண்ணிலாக் கற்றைக் கடாங்கவிழ்க் குங்கோட்டு
வேதண்ட வேந்தளிக்கும்
வெயில்மணிச் செம்பொனிற் றிருமணப் பந்தர்வரு
மெல்லியற் கொம்பர்சூட்டுந்
தண்ணுரகக் கற்றைக் கருங்குழற் பாரமோ
தனதடக் குன்றினிரையோ
தாங்குதற் கென்றங்கு சிற்றிடைப் பரவிற்பாற்
றண்ணளி சுரந்துநோக்குங்
கண்ணெனும் பன்னிரு குடங்கையாற் கொடியெனக்
கால்பெயர்த் தொல்கிநாணிக்
கையொதுக் கித்தனது முலைமுகங் கொட்டுங்
கவின்வெள்ள மள்ளியுண்டு
வண்ணவான் குன்றுநோற் பூரித்த திண்டோள்
மணிவாயின் முத்தமருளே
மழலைகனி யமுதுகுதரங் கைவேலா யுதனே
மணிவாயின் முத்தமருளே, (41)

ஒள்ளொளித் தும்புபொன் மணிகுண்ட லங்களு
மொண்ணித் திலச்சுட்டியு
மொளிர்மணி குயிற்றிடுங் கண்டசர முஞ்சுடரு
மொழிகெழிற் புயவலையமும்
நள்ளிருட் படலமொண் டுண்டுதேக் கிட்டெறியும்
நாகிளம் பருதிஇருள
நல்லொளி யெறித்திடுந் தமனியக் கொண்டையும்
நவமணித் திருமாலையும்
புள்ளலம் புங்கனக கிண்கிணித் தொங்கலும்
பொற்றறம் வளர்க்குமுமையாள்

பொற்புற வணிந்துலகு காக்குநா யகனருட்
புனிதனிரு கைக்கொடுப்ப
வள்ளலொடு சிங்கா தனத்துறை யிளங்குமர
மணிவாயின் முத்தமருளே
மழலைகனி யமுதுகு தரங்கைவரு வேலாயுதா
மணிவாயின் முத்தமருளே. (42)

கார்கொண்ட கொண்டலுந் தண்டேன் பிலிற்றுபைங்
காயாவின் மலர்வண்ணமுங்
கட்டழித் திட்டொளி விரிக்குங் கவுத்துவக்
கதிரொழுகு மணிமார்பினிற்
சீர்கொண்ட பங்கயச் செல்வியிரு கொங்கைச்
செழுங்கடாக் களிறுமுட்டிச்
சென்றுழு துழக்கமகி ழுஞ்சனக் குன்றனைய
திருமா றனக்குமருகா
ஊர்கின்ற தென்றற் புனிற்றிளங் கன்றுசந்
தொண்மலர்க் காவனைந்திட்
டொள்ளிதழ்த் தாமரைத் தாதிற் புரண்டுவந்
தோ....................துலாவும்
வார்செம்பொன் மாளிகைச் சோணாடு காவலா
மணிவாயின் முத்தமருளே
மழலைகனி யமுதுகு தரங்கைவே லாயுதா
மணிவாயின் முத்தமருளே. (43)

பச்சைப் பசுங்கொண்ட றுளிமுத்தம் நீனிறப்
பங்கே ருகத்தின்முத்தம்
பங்கப் படும்பசுஞ் சென்னெலொளி முத்தமரி
பட்டிடும் பணிலமுத்த
அச்சினிற் கடைபடும் வேய்முத்தம் வெடிபடு
மருங்கழை யளித்தமுத்த
மரியவொள் வாளினிற் கழிபடு மிப்பிமுத்
ததிபயத் தோடிருக்குமே

யச்சுடர்த் திங்கள் வெண்முத்தம் நஞ்சொடு
பழகும்விலை யேற்குமுத்தம்யாவும்
விமலவுன் செங்கனிப் பவளவாய் முத்தமோர்
விலைவரம் பறியலாகா
வச்சிரக் கரதலர் தேவசே னுதிபா
மணிவாயின் முத்தமருளே
மழலை கனியமுதுகு தரங்கைவே லாயுதா
மணிவாயின் முத்தமருளே. (44)

கரிவாளை நேர்விழிப் பூண்முலை யுழத்தியர்
கைநெரித் தொல்கிமாழ்க
கடிமலர்ச் செந்தா மரைக்கா டுழக்கியோர்
கார்மயிற் பேடுபோலத்
திரிவாளை யிந்திரரில் விடதென் றையுறச்
சேர்ந்துமேற் கமுகுகீறிச்
செங்காலி யர்மெனக் கட்டுணைச் சாயலைச்
சேர்களை யெனப்பிடுங்கிப்
பரிவாளை மென்முலை பட்டால் சுரந்தூற்றவோர்
பாலினிற் சென்றுமுட்டி
பைம்புயற் படலங் கிழித்திழுமென் னோசையிற்
பதினுரை யோடிறங்கும்
வரிவாளை பாய்வயற் சோணாடு காவலா
மணிவாயின் முத்தமருளே
மழலைகனி யமுதுகுத ரங்கைவே லாயுதா
மணிவாயின் முத்தமருளே. (45)

## (வேறு)

அமரர் பயமு முனிவர் துயரும்
அசுரர்வரமு முகக்கவே
யருண கிரண அயிலை விடுமோர்
கைத்தலர்................

தமர மகர முரவு கடலை முகபெடை-
வடைத்த மால
சருவு மருக வுருகு மடியர்
தமது பெரிய சித்தமார்
திமிர மரியு முதய தபன
சிறுவ பெரிய வுத்தமர்
தெரிய விறைவர் பொருளை விரிய
மதுரை தனிலு ரைத்தர்
குமர தற்வர் சிறுமி தழுவு
கொழுந தருக முத்தமே
குலவு தனத புரியின் முருக
குரவ தருக முத்தமே. (46)

அனக விதுல வசல வமல
வகள சகள சற்குணு
வமிர்த வசன சுசன வபய
வதிக சுகமு நிஷ்களா
சனக சனக முனிவர் பரைச
சதுர வதர வித்திரு
சகுண நிபுண விபுதர் திலக
சலச நயன பொற்புயா
பனக வரைசு கடக சடில
பவள கிரிவ ளைத்தென
பரமர் குடிலை வினவி யெளிது
பணிய மொழியு ரைத்தவா
குனகு மழலை யொழுகு மழக
குழக தருக முத்தமே.
குலவு தனத புரியின் முருக
குமர தருக முத்தமே. (47)

அதல விதல சுதல நிதல
அவணி குலேய வெற்பலா
அதிர வுததி சுவர வனலு
மவிய வடவை யுட்கவே
கதிகொ ளிறுதி வளியி னரசு
கடின விரைவு முட்கவே
கடவு ளெவரும் வெருவ மருவு
கருது மொருநொ டிக்குளே
சதன சதன மெனவன் னனுசர்
தகுதி முனிவ ளர்ததரோர்
தழலி லுதைய பருதி பொருவு
தகரை விடுமோர் வித்தகர்
குதலே வசன லமர ரிறைவ
குரவ தருக முத்தமே
குலவு தனத புரியின் முருக
குமர தருக முத்தமே. (48)

## (வேறு)

கனேக டற்றெண் டிரைமு ளேக்குங்
கவடு வைக்குந் தருவையே
கருதி வெட்டுங் கமல மொக்குங்
கரத லத்தெங் கடவுளே
திணேவி ளேக்கும புனமளிக் குஞ்
சிறுமி மெத்தென் றிளகுமோர்
திருவடிச் செந்தளிர் முடிக் குஞ்
செழு மணிப்பொன் மகுடமே
புனமயிர்த் தந்தலே தலேக்கும்
பொருளில் பொய்ப்புன் சமயமார்
புக ரிருட்டின் குவ டிடிக்கும்
பொழிகதிர்ச் செம் பரிதியே

தனிமுகற் செம்பொரு ளளிக்குந்
    தனைய முத்தந் தருகவே
தனதை யுற்றங் கருள் கொழிக்குந்
    தலைவ முத்தந் தருகவே. (49)

சிலையெனப் பொன்மலை குழைக்குந்
    திகழ் மதிச்செஞ் சடையர் வாழ்
திருநுதற் கண்மலர் முளைக்குந்
    திகழொளிச் செம்ப வளமே
முலையெனச் சங்கனக வெற்பின்
    முகிள் சுமக்குங் கிரியின் மான்
முதிர் கடுப்பங் கொள வுதிக்கு
    முழுமணித் தண்ட ரளமே
யலைபுரட்டுங் கடல் கடக்கு
    கடல வெற்பும் பொடி செய்வான்
அவனி யுட்கும்படி நடக்கு
    மரிமுகற் றிண்கு வடுநேர்
தலை யுருட்டுங் குலிசம் வைக்குஞ்
    சதுர முத்தந் தருகவே!
தனதை யுற்றங் கருள் கொழிக்குந்
    தலைவ முத்தந் தருகவே. (50)

**முத்தப் பருவம் முற்றிற்று,**

---

# வாரானைப் பருவம்.

அருப்பிளங் கொங்கைத் தடங்குவட் டிந்திராணி
அகமலர்ந் துவகை கூற
அவர்கண் டலக்குரிசி லோரா யிரங்கண்ணு
மன்புற் றலர்ந்து நோக்கி
விருப்புற்று நின்னடிக் கமலந் துதிப்ப வொளிர்
விண்ணாட் டரம்பை மகளிர்
வெள்ளத் தலர்ந்த கட்காவி மலர்மாலையு
மென்முலைத் தெய்வ யானை
திருப்பரம மெனகாப் பொன்னரியின் மாலையுஞ்
செம்பொற் புயத்தின் வீழச்
செழுமுனிவர் கைத்தல முகிழ்ப்ப மதிபாற்கடற்
றிரைமுகட் டுற்ற தன்ன
மருப் பிரண்டாயிரத் தயிரா வணப் பிடரின்
வந்தமண வாளன் வருக!
வளமலி தரங்கை யகிலாண்ட குலவெல்லி பெறு
மயில் வாகனு வருகவே! (51)

கிளைக்குங் கொடுஞ்சூரி னுயிருண்டு தேக்கிடுங்
கிளரயிற் செவ் வேலினைக்
கெண்டை யங்கண்ணி னைக்கொப் பென்றுமாமணிக்
கெழுஉமெழிற் கிரீட நிரையைத்
தினைக்கும் பசுங் களப மென்முலைக் கொப்பென்று
சேயிதழ்க் காந்தண் மலரை
செம்பவள மெல்விரற் கொப்பென்று மாமயிற்
செவ்வியஞ் சாய லென்று
மிளைக்கும் படிக் கெழுதி வாயாது கண்டுகண்
டின மடலை விட்டெரிந் திட்

டிடை யிலாவேடிச்சி தேனுகுத் தன்ன சொற்
கெழுமூரி யேறுபோன்று
வளைக்குந் தினைப்புனஞ் சூழ்ந்துகா லோய்ந்திடும்
வள்ளலே வருக! வருக!
வளமலி தரங்கையகி லாண்டகுல வல்லிபெறு
மயில் வாகனு வருகவே. (52)

(வேறு)

உரகபதி கணபணவி லொளியுமிழு மணிகொழிசெய் துலவுபய
துததியிடை யொருகோடி யாகமாக
வுதயம் நிகரதர வலகில்பல புவனமுழு தொருநொடியில்
வலன்வருவெள் விடையேறி சேய்வருக
வரகவிசொ லருணகிரி யதிகரச மொழுகுகனி வடியமிழ்து
மதுவுநிகர் தமிழ்மாலை சூடிவளர்
மதுகலிக புயசயில மணிவருக வடியருள மலரிரெழு
வடிவே சலாம் வருக [சுடரிரவி
நிரதிசய வொளிவருக வெளியன்மிடி யிருடுலைய நிலவுபொழி
[தருவருக
பொருதாருகாசுரன்மெய் நிணமுமவளர் குடருமிரு
முதிர்முட னுரமுமவ னெடுவரமு முயிருமுண நிமிர்கால
[னேவருக
குரவுகம ழுளகபரி மளபவள விதழமுது குணகுகிளி
[மழலைபொழி
வளர்தேவ யானைபுணர் குசலவிடை பெறுமசல
[தனதபுரி
தழையவரு குமரகுரு பரமுரக்குலி சாயுதா வருகவே. (53)

கள்ளக் கலகவிழி க்கமலை கணவன்
புறவிற் றளின் முல்லைக்
கண்ணி யுனது முடி சூட்டக்
கருதி வந்தான் வருகவே

யள்ளற் கமலப் பொருட் டுறையு
மவனு மகநி வீணைமுரல்
அவனும் உனது புகழ் பழிச்சி
யருகில் நின்றார் வருகவே
கொள்ளைச் சுரும்பர் படிதருவிற்
குரிசில் மாறேடும் பணிந்துன்
கொலுச் சேவிக்க வந்து நின்றார்
குலவு மலையாள்முலை மணிப்பொன்
வள்ளத் தருவி பருகு கனி
வாயான் வருக வருகவே
மல்லற் றரங்கை யிறைவர் பெறும்
வாழ்வே வருக வருகவே! (54)

கொடிக்கு நிகரு மொளிர் மின்னுக்
கொடிகள் குழுமிற் றெனத்திருவுங்
குலவுஞ் சசியுங் கலைமகளுக்
கூடி மருங்குற் பாவியையே
யொடிக்குங் களப முலைக் களிற்றை
யுடனே யிருத்தி மங்களவாழ்த்
துருகி வாழ்த்துங் கலியாணத்
துவக்குங் குமரா வருகவே
படிக்குங் கிளியுங் கான்புகுதப்
பவளக் கனிவாய் கனிந்தூறும்
பசுந்தே னமிழ்துங் கலந்த தெனப்
பாடுங் குழலார் நடங்குயிற்று(மல்)
ரடிக்குந் தமிழ்கா விரிநாடா
மணியே வருக வருகவே
மல்லற் றரங்கை யிறைவர் பெரு
வாழ்வே வருக வருகவே. (55)

திருவே வருக வருள்கொழிக்குந் தேவே
　　வருக கவுரி யிளஞ்
சேயே வருக நிருதருக்குத் தீயே
　　வருக பிறப் பறுக்குங்
கருவே வருக வருள்பழுக்குங் கனியே
　　வருக சூரர் துலைத்த
கடம்பா வருக எமதிடுக்கண் களைவாய்
　　வருக மதிமுடித் தார்
குருவே வருக மலைக்குறத்தி கோவே
　　வருக நிட் களங்கர்
குமரா வருகமயி லுகைக்குங் குகனே
　　வருக மலரிருக்கு
மருவே வருக மூவிரண்டு வதனு
　　வருக வருகவே
மல்லற் றரங்கை யிறைவர் பெரு
　　வாழ்வே வருக வருகவே. (56)

( வேறு. )

நிருதர்குல கலக வமரர்குல திலக
　　நிபுண சுகுண குகன் வருகவே
நெடியவுட லுரகன் மகுடமணி யுதறி
　　நிமிறு மயிலழகன் வருகவே
கருது முனதடியன் வெருவு கொடியபி
　　ணிகருக வருள்பெறுக வருகவே
கவுரியிரு விழியு மனமு மலர
　　வருகருணை தருகுரிசில் வருக்வே
மருது மொடிய வுருள சகடுமிடிய
　　மதகளிறு மடிய வுதைய வனசமால்
மருகபர சமைய கருகுமிருள் பருகி
　　வளருமதி வதன வருகவே

பொருது கமுகநிரை விரவு தனத
புரிபுரவு தருமுருக வருகவே
புளக மிளகுமுலை முகிள குறவனிதை
புணர் வினியபுயன் வருகவே. (57)

நிலவு தவழு முழுமணி கொள் கடிகை நுதல்
நிழலிழி மலர் வருகவே
நிமிரு முடியசைய வழகு குழைய வசய
நிமலனுதவு வருகவே
...............................
........................வருகவே
இமைய மயில் வயிறு நணைய...........
........................வருகவே
சதுர பொருநிருதாவ....................
....................................
....................................
புரவுதரு மிறைவ வருகவே
புளக...........................
............................ (58)

## வாரானைப் பருவம் முற்றிற்று.

59, 60 எண்ணுள்ள பாடல்கள் இரண்டும் அதிகமாகச் சிதைந்துள்ளது.

# அம்புலிப் பருவம்.

கண்டுநேர் தேமொழிக் கவுரியை கன்றுட்
கண்ணின் மணியாத லானுங்
கருதினோர்க் கின்னமுத வுருவினன் மாதர்கட்
காவியை யலர்த்த லானும்
மண்டலங் கொண்டிசையி னில்வெறித் திடுதலான்
வள்ளியோ னுதலானும்
வானவர்க் கினிய வமிழ் தளித்திடுத லான்
மன்பதை புரத்த லானும்
விண்டவத் தரசனை வெழித்திடு தலான்
வேண்டினோர்க் கினிய னலும்
விரைமலர்க் காந்தளந் தொங்கலான் றன்னொடும்
விரும்பிநீ நிகர்த்தல் கூடும்
அண்டர்நா யகனெங்கள் மாசிலாமணி மகவோ
டம்புலி யாட வாவே
யலையெறி தரங்கைவரு வீரவேல் னுட
னம்புலி யாட வாவே. (61)

வெம்பிக் கொடுஞ்சிறைப் பட்டநா னன்றனை
விடுக்குங் கடாட்ச விழியான்
வெந்திவன் மாதுலன் உன்னைச் செழுங்கவிகை
யாமெனக் கொண்ட வீரன்
நம்பிக்கு மைத்துன நீவந் துதித்திடு
நல்லிடமு மிவன் மாமனே
நற்றாய் பிறந்தகந் தக்கன் புகன்றசொன்
னல்லுடல் குறைப்ப உன்னை
உம்பற்கு மேலாக வார்சடையில் வைத்துன்
னுயிர்க்கருளி சத்தேவு முத்

தமனியவன் றூதையாகை யால்உன்னுடற்
கூறு மொழித் தருளுவா
னம்பொற் செழுங்கையால் வாவென் றழைத்தன
னம்புலி யாட வாவே
யலையெறி தரங்கைவரு வீரவே லவனுட
னம்புலி யாட வாவே. (62)

கோரமுறு நெட்டுடற் றுளைவா ளெயிற்றுக்
கொடும்பகை யுனக் குண்டுகாண்
குப்புற்று நெட்டரா மணிக்கக்கிடக் கொத்து
கூர்மயி லிவர்க்குண்டு கா
ணீர்மிரத மதியொன் றுனக் கிங்கிவர்க்கு முக
மிருமூன்று மதியுண்டு காண்
எட்டிரட்டின் கலையுனக் குண்டிவர்க்கு வரும்
எட்டெட் டிருங்கலைகள் காண்
வாரமுறு கங்குலிற் குவலைய மலர்த்துவை
வருபகற் கங்கு லிடையு
மறிகடற் குவலைய மலர்த்து னுனதுகுறை
மதியால் மறுத்தி டாதே
யாரமணி தந்திமுக னேரிளையகந்த னுடு
மம்புலி யாட வாவே
யலையெறி தரங்கை வருவீர வேலவனுட
னம்புலி யாட வாவே. (63)

கற்பகக் கொம்பினிற் கனிந்தொழுகு மழகுவள்ர்
கானக் குறத்தி யவடன்
காதற் கியைந்துகுழ னீவிப் புணர்ந்தினிய
கலவிய முதுண்ணு ஞான்றிற்
பொற்புறக் கொங்கைத் தடங்குங்குமக் கலவை
புளகமொடு தீட்டி வாட்டும்

பொற்படைக் கட்டுணேக் கஞ்சனமு மிட்டுநுதல்
பொட்டு மெதிர்நின்று தீட்டி
விற்பொலியு மென்கவுட் கனிகளை நெரித்திடும்
வேலைநன் னுதலி லொப்பும்
வெண்டரள மணிநகைக் கொப்புஞ் செழுங்கமல
மென்முகத் தொப்பு மாக்கி
யற்பினிற் கைபுனைய வல்லவன் னிவனுட
னம்புலி யாட வாவே
யலையெறி தரங்கைவரு வீரவே லவனுட
னம்புலி யாட வாவே. (64)

நெடிபடு பெருங்கானி லுரம் சருகிடிற்
பொலனெடுந் தருவி நீழற்
நிகழ் குடங்கைப் புனலி லாட்டிடிற் பாற்றெருகும்
நெடுந் திரைக்கட லளிப்பான்
கடிகமழ் நறும்பூவி னிதமொன்றிடிற் பெருங்
கனககோ கனக மீவான்
கருத்திடை யிருத்திடி லிருத்துவன் செம்பொனின்
கனவண் டதத்தி னுச்சி
முடியி னடிமலர் வணங்கி லிந்திராதிபர்கண்
முடிதொழு மிருக்கை யீவான்
முன்னவர்க் கும்மவன் முன்னவ னுன்குறையு
முடியா திரான் கருணையா
னடியவர் கெளியவன் குமரனுயக னுட
னம்புலி யாட வாவே
அலையெறி தரங்கைவரு வீரவே லவனுட
னம்புலி யாட வாவே, (65)

முருக்கிதழ்க் கவுரிலையக் கனியிடக் கண்ணினீ
முன்னிளம் பிள்ளை யிவனே

முதிர்வலக் கண்ணிடக் கண்ணுக்கு மேலான
    முழுவிழியில் வந்த வீரன்
இருட்பி மும்பள்ளி யுண்டிடுதி சின்னுளிலவ்
    விருட் கடலமிழ்ந்தி நிற்பா
வெருக்கொள வழுத்திடும் பசியா லிரக்குமருள்
    விண்ணவர்க் கமுதளித்து
மெய்குறைந் திடுதிநீ யிவனருட் கடல்முழுநின்
    வெள்ளம் வற்றுதளிப்பான்
எழுமல மிருட்டுமல வண்டமூலத் திருளு
    மிரிய வோகக்கு மிவன்வே
லருட்டுறையி லுன்னையுமோர் பொருளா யழைத்தன
    னம்புலி யாட வாவே
அலையெறி தரங்கைவரு வீரவே லவனுட
    னம்புலி யாட வாவே. (66)

பாகசா தவனிவ னூழியஞ் செய்யுமொரு
    பையல்செந் தாமரைக் கட்
பங்கையரசனைக் கேழ்வர் பெண்கொடுக்குங் குடிசொல்
    படர்சடைக் காட்டு வானேன்
ஓகை கூர்பக்குவப் பட்ட மாணுக்கன்மா
    லுந்தி வந்தா னிவன்கை
யுறுக்குமோர் குட்டுண்ட வோசை யண்டத்தினின்
    றுறவறத் திறந்த தன்றி
ஏகநாயகனிவன் மேலுமோர் கடவுளர்க
    ளில்லை யென்பது முணர்ந்து
மெய்தாதிருத்தி யோர்மதியிலாய் புகலிட
    மிவனலா தில்லை கண்டா
யாகுவர் கன்னிளங் கோவள்ளி னுதனுட
    னம்புலி யாடவா வே
அலையெறி தரங்கைவரு வீரவே லவனுட
    னம்புலி யாட வாவே. (67)

குருகுகிரி தவிடுபட நேக குலகிரிகள்
சக்ர கிரியும்
குது குதுப்பக் கடல்களேழுங் குடித்துப்
புறக்கடலையுங் குடித்துப்
பெருகுசிவ கங்கைப் பெருக்குச் சுவற்றியப்
பிரதி யண்டபகி ரண்டமும்
பிட்டுவட்டக் கமல வட்டணைக் கடவுளும்
பேரொளிச் சக்கர தரனும்
வெருவக் கொடுஞ்சூரை நிர்த்தூளி கண்டவேல்
வீராதி வீர னிவனே
விருப்புற் றழைத்தான் மறுக்கிலுன் காரிய
மெத்தவும் மோசம் வருமா
லருகுறக் கிட்டவந் தறுமுகக் குழவியோ
டம்புலி யாட வாவே
அலையெறி தரங்கைவரு வீரவே லவனுடன்
அம்புலி யாட வாவே (68)

பூவிரி மடற்செழுந் தாமரைக் கடவுடன்
பொன்முடி குலுங்க வெற்றிப்
புடைத் தவனிதேவன் றிதிநீ கடவுட்
புலோமிசை யுயிர்க்கு நாதன்
பாவிரி கலாபப் பசுந்தோகை யென்னப்
பரித் தன்னமுற் கடவுளும்
படர்சிறைக் குக்குடக் கொடியாயுடுக் கணம்
பரிவிற் கொறித்த தறிவை
தாவிவெண் குண்டலப் பூச்சியென் றுன்னையுந்
தவிப்பக் கொறிக்கி லம்மா
தவிர்ப்பவர்களே கடவுள் பிள்ளைமதி தன்னுற்
றரிக்கா தழைக்கில் வருவாய்

ஆவியென வெவ்வுயிர்க்குஞ் சூழ்ந்துநின் றவனுட
னம்புலி யாடவா வே
அலையெறி தரங்கைவரு வீரவே லவனுட
னம்புலி யாடவா வே. (69)

வாடகச் சிற்றடிச் சேர்ந்திரு மணுளனும்
பங்கயப் போது மேவும்
பழமறைக் கிழவனும் நாற்கோட்டு வாரணப்
பாகனும் நிற்க மற்றை
நீடருட் கண்மலர்ந் தொண்ணிறக் கனிகொலென
நின்றுனை யழைத் தருளிஞு
நீபுரி தவங்கொலோ வுன்கூனி மிர்க்கவோ
நிமலனரு ளுணர்கிலே மால்
வேடகச்சிறு குடிற் பேரமர்க்கட் கரிய
மென்குழற் சிறுபிடியுடன்
வெம்முலைக் களியானை விளையாட மகிழ்கூர்ந்து
விரிகதிர்க் கற்றை சுற்று
மாடகச் செங்குன்று பன்னிரண் டுள்ளவனே
டம்புலி யாட வாவே
அலையெறி தரங்கைவரு வீரவே லவனுட
னம்புலி யாட வாவே. (70)

அம்புலிப் பருவம் முற்றிற்று.

# சிறுபறைப் பருவம்

இந்துரு மண்டலத்தகடு தடவும் பொன்னி
னெரிமணி குயிற்றுமாடத்
தேந்திளங் கொங்கையார் சதுமுறை நடிப்பதற்
கிணை தர முழக்கு முழவும்
நந்தாதநான் மறைமுழக்குந் தழற்கணூர்
நவிலுமுத் தமிழ் முழக்கும்
நராதிபர் நடாத்தும் வெங்கரி முழக்குங்
கலின நற்பரி முழக்குமம்மார்
இந்திராதி வேதன் பசுந்துழாய்க் கொண்டலவ
ரேறுமூர்தியின் முழக்கு
மெழுகட லடக்கிப் பகிரண்ட கோடியி
னிரங்குந் தரங்கை யமரர்
சிந்தாமணிக்கு மரவீர வேலாயுத
சிறுபறை முழக்கி யருளே
திசைக்கரி திடுக்கிட மயிற்பரி நடத்திறைவ
சிறுபறை முழக்கி யருளே. (71)

கல்லுற்ற திண்டோள்கள் பன்னிரண்டுடைநின்
கட்கடை சிவந்த ஞான்றின்
கடுவலிப் பெருவெள்ள மவுணக் கொடுந்தானை
கண்டு கூட்டுண்ண வாவி
கொல்லுற்ற செங்கட் கருங் கூற்றிவர்ந்திடுங்
கொடும்பகட் டெருமை யார்க்குங்
கொழுங் கழுத்திடுமணியினார்ப் பென்று நிருதவர்தங்
கோமகளிர் வயிறலைப்ப
அல்லுற்ற கற்றைக் கருங்குழலின் மகளி
ரயிராணி கேழ்வன் மிகுத்

தபிடேக மின்றென முழக்கு பொன்மூசறையு
மார்பெனக் கைகள் கூப்பச்
செல்வத் தரங்கையாய் ஒருமுறை மலர்க்கையாற்
சிறுபறை முழக்கி யருளே
திசைக் கரிதிடுக்கிட மயிற்பரி நடத்திறைவ
சிறுபறை முழக்கி யருளே. (72)

நெட்டுடற் செந்தாழை முப்புடைச் செங்கனிகள்
நிமிர்தலைக் கமுகு தூக்க
நெடுமடற் குலைசாய்ந்து முடவுச் சினைப்பலா
நெக்குமுட் புறத்தீங் கனிக்
கொட்டைச் செழுந்தேன் பொதிந்த பொற்சுளைபக்க
கோழரை யரமபை சாய்க்குங்
கூருகிர்ப் புலியடிப் பொற்புறத் தேங்கனிகள்
குலகுலென் றுதிர்த்து வீழும்
வட்டச் செழுந்தோட்டு வெண்டாமரைக் காட்டு
வாவிக்குளாடு மடவார்
வதனவெம்பாற் கடற் றெண்டிரை முகட்டெழும்
வளரொளித் திங்கள் காட்டும்
சிட்டர்புகழுப் பெறு தரங்காபுரிகுமர
சிறுபறை முழக்கியருளே
திசைக்கரி திடுக்கிட மயிற் பரிநடத்திறைவ
சிறுபறை முழக்கி யருளே. (73)

இருள்பிட்டு விட்டெரியும் வெங்கதிர் பரிதிரத
மீர்க்கும் பசுங் குரகத
மெரிமசணிச் சிகரியிற செம்பொற் றசும்பினி
லிடறித் தெரித்த மணியும்
அருள்பெற்றிடத் தொழுமிந்திராதி தேவர்மற்
றரியயன் முதற் றேவர்தம்,

அவிரொளிப் பொன்முடியி னந்திகைப் பொற்பிரம்
படிபட்டுதிர்ந்த மணியு
முருமொய்த்த நிதியறை திறக்க நின்றேற்றவர்க்
குதவிடை யுதிர்ந்த மணியு
முருநலார் பொற்கலன் மகிணரை வெறுத்தெறிய
உகுமணியு மின்னி னுதிரத்
தெருமுற்றுநவ ரெத்தின மழைபொழி தரங்கைவேள்
சிறுபறை முழக்கியருளே
திசைக்கரி திடுக்கிட மயிர்ப்பரி நடத்திறைவ
சிறுபறை முழக்கி யருளே. (74)

விரைக் குங்குமச் செழுஞ்......கொங்கையென
விற்பிற் சுமக்கு மடவார்
மெல்லிதழ்க் கொப்பின்மை கண்டுசெம் பவளங்கள்
மெய்புரண்டுகளு மொருபால்
நிரைக்குஞ் செழுந்தூவி யனமகளிர் நடைகண்டு
நெஞ்சம் புழுங்கு மொருபால்
நிலவூரு நகைகண்டு முத்தொளி வெளுத்துடலம்
நெக்குருண் டோடு மொருபா
லிரைக்குங் கழிக்கரைச் செம்மேனி யலவனு
மின்முழங் தாள்கள் நோக்கி
யீரஊப் பனியுட் செல்வதும் வருவதுவு
மினையுரு தெண்ணி யென்னுத்
திரைக்குந் திரைக் கடற் சூழ்ந்த ரங்கையாய்
சிறுபறை முழக்கி யருளே
திசைக் கரிதிடுக்கிட மயிற்பரி நடத்திறைவ
சிறுபறை முழக்கி யருளே (75)

(வேறு)

இயலு மிசைமதுரை தனிலிறைவர் பொரு
ளினிய வழுதெளிதினில் வடித்த புலவர்
இனிதடி யரிடுமல்ரு மெயினர்மகள் பதமலரு
மிதமுற முடித்தலைவர்
மயிலிமய சயிலமகள் வயிறுளைய வெகு
வரிசையொடு பெற்றமணியே
மறைமுடியிலடி நடுவில் முனிவருள முளரிதனில்
மருவிநட மிட்ட சுடரே
கயவர் பிசிதசன ரிடுகடவுளர்கள் கலுழ்கொடிய
கடியசிறை விட்டதுரையே
கடகளிறு மருவுபிடர் அமரரிறை குலவவொளிர்
கதிர்முடி கவித்த அரசே
செய விசய தனதபுரி மருவுகுரு பரமுருக
சிறுபறை முழக்கியருளே
திருகு(த)ன நிருதவிருள் பருகுதினகர குமர
சிறுபற முழக்கி யருளே. (76)

அடலவுணர் வயறதனில் வரகடிரி வுரமதனி
லழலெரி கொளுத்து குழகா
அமரர்க முகமலர் அரமகளிர் வயிறதனி
லமுதசன மிட்ட வழகா!
வடகுவடு குழையவிள நகைகொளுவு மிறைமகிழ
மறைமொழி யுரைத்த குருவே!
வழிபடுனர் மிடியகல வருபிணியி னிடரகல
மலரரு டழைத்த தருவே!
கடகரியின் மிடறுருடிய வெயினலகு கிழியவடர்
கருமுகில் தனக்கு மருகா!
கருதுகுறு முனிபணிய வொருகுடிலை தனைவிரவு
கருணையி லுரைத்த முருகா!

திடரின்விளை வயலின்வளை தவழ தனபுரி யிறைவ
சிறுபறை முழக்கியருளே!
திருகுமன நிருதவிருள் பருகுதின கரகுமர
சிறுபறை முழக்கி யருளே! (77)

முகுளவிர கனியகையும் நிலவுமலர முகைவகையு
முழுகொளி பழுத்தகவினுர்
முதுரைநிறு கதலிவனம வனசமலர் கமுகுவன
முறைமுறை நிரைத்து மணமார்
அகிலுருகு புகைகுமுறு மளகமலர் கொடிநிரைக
ளருமணி குயிற்று கடைவா
யணியணியில் விரவவெழு பனிவரு தனதரி
யமுதருள் கொழித்த கடலே!
மகிதலமெ யதிரவிறலுரக் பதிமுடிநெரியவள
ரொளி விரித்த சிறையால்
மருவுமுடு கணநிரைகண கலகலென வுதிரவெளி
மழைமுகடு பொததவழகார
திகிரிகிரி கிடுகிடென நடனமிடு மயிலழக
சிறுபறை முழக்கியருளே!
திருகுமன நிருதவிருள் பருகுதின கரகுமர
சிறுபறை முழக்கியருளே. (78)

அளிகுமிறு மலரளக் தளவநகை முலைமுகுள
வரிவையர்த மக்கோரமுதே!
அகமுருகு மடியவர்கள ஜெனனவலை கடல்நடுவ
ணருளுதவ வுற்றபிணையே!
வெளியிலரு வெளியில்நட மிடும்வெளியில் நுதலிலொரு
வெளியெள வுதித்தவொளியே!
மிகுசமய மறுவகையும் விரவியவர் வரகருதும்
விழைபொரு ளளித்த பொருளே!

வொளிர்கமல மறுவகையு மொருவி மறையுபணி
பதமுணர் வரிய சித்தினுருவே
யுருவுமல அருவுமல யெனமுனிவர் கருதுமவர்
உளமுடியு முத்திநிதியே!
தெளிவரு புகழ்தனத புரிவருமுருக
சிறுபறை முழக்கியருளே!
திருகுமன நிருதவிருள் பருகுதின கரகுமர
சிறுபறை முழக்கியருளே! (79)

உனதுபுக ழெனதுமொழி புரைபயி றல்லதொரு
ருறுபுக ழுரைக்கவறியா
துனதிரு வுருவறியு மெனதுவிழி யொருவரெழி
லுருவது குறிக்கமலரா
துனது துரையடிபணியு வளையுமல தெனதுசிர
முலகொரு வருக்கும் வளையா
துனதுதிரு மதிளைவலன் வருவதல தெனதுபத
மொருவரின் நடக்க வசையா
துனதுபத மலரிலி டுவதலதெனது காமொரு
வரையிரக்க விரியா துருதி
யிது வெனவலிதி லெனையடிமை யெழுதியரு
ளுதவுத லுனக்கோர் கடனே
தினதினென வளிகுமிறு தனதபுரி வருமுருக
சிறுபறை முழக்கி யருளே!
திருகுமன நிருதரிருள் பருகுதின கரகுமர
சிறுபறை முழக்கியருளே. (80)

## சிறுபறை முற்றும்.

# சிற்றில் பருவம்.

தண்ணென் றெழுந்த இழைமுத்துந் தழைத்த
கமுகமடன் முத்துந்
தருக்குங் காமன் சமராடச் சரிந்த
மூத்து மதிமுத்தும்
விண்ணங் கொழித்த மழைமுத்தும் விரிநீர்த்
தவள வளைமுத்தும்
வெறுத்துன் னடிமே லடியரிடும் வெண்டா
மரையின் முத்தெடுத்துப்
பண்ணுஞ் சுவர்செய் தமைத்துரக பணத்தின்
மணியால் விளக்கேற்றிப்
பரிவாற் புகழ்ந்தே மகிழ்ந்தமரர் பதி
காவலனே பெண்ணிருவர்
கண்ணே கண்ணுட் கருமணியே!
கனியே! சிற்றில் சிதையேலே!
களிவண்டாடும் பொழிற் றரங்கை
கந்தா சிற்றிலழியேலே! (81)

சுருதிபரவு முபனிடதத்து துடர்ந்து
துடர்ந்துன் னடிதேடத்
தோகைக்குறத்தி தனைத்தேடிச் சுரத்திற்
றிரிந்தா யென்றனமோ
பெரிதுமமரர் புருகூதன் பிரமன்
முதலோர் உனைப்பணியப்
பேதையடிக்கீழ் பணிந்தெழுந்த
பெம்மா னிவன்று னென்றேமோ
அரிதுமுனிவர் புரிவேழ்வி
யவிசுமமிழ்ந்து தானிருக்க

அரிவை பவள வாயூறற் காசைப்
பட்டா யென்றனமோ
கருதுமொளியே !. ஒளிமுத்திக்
கனியே சிற்றி லழியேலே !
களிவண்டாடும் பொழிற் றரங்கைக்
கந்தா ! சிற்றி லழியேலே ! (82)

அருணேதயமே குறுமுனிவ
னன்பில் விளைந்த செந்தேனே!
ஆராவமுதே! தொண்டற்பெறு
மருங்கற் பகமே யுபனிடதப்
பொருணுடா ணரிறைஞ்சு.........
பொதான.........தேசிகவுன்
பூஞ்சேவடிகள் செப்பூரப் புழுதி
யாடிற் கிரிராச
தருணேதயப் பூங்கொடி யிருக
ணடைத்தே யுளைத்து மடிவருடுந்
தையலார் கைசர சரப்பாஞ்
சற்றும்விளையாட் டியல்பன்ருல்
கருணகரனே முருகோனே !
கனியே ! சிற்றி லழியலே !
களிவண்டாடும் பொழிற் றரங்கைக்
கந்தா ! சிற்றில ழியலே! (83)

சதுர்மா முகத்துப் பெரியோனுந்
தண்டார் துளபக்கரியோனுந்
தருககார்ப் படைத்துக் காத்தளிக்குந்
தரங்கக் கடற்பாருலகேழு
மதுவா ரிதழித்தொங்கலணி மழுவாட
படையோனின் ருதை

மதிக்குங் கணத்துட் பொடிபடுத்தும்
வலிநிகர்க்கும் வகையிதுவோ
புதுவார் கமலப் பதஞ்சேப்பப்
புனைவேஞ்சிற்றி லழித்திடுதல்
புகழன் றுனக்கன் றறமகளிர்
பொன்னுட் டமரரொடும் புணர்ந்து
கதிர்செய் மணிமாளிகை யிருப்பக்
கண்டாய் சிற்றி லழியேலே
களிவண்டாடும் பொழிற் றரங்கைக்
கந்தா சிற்றி லழியேலே! (84)

துளிக்கும் நறவார் மலர்த்தணராத்
தொண்டருன்றுட் புனையவருந்
தோகைக் குறத்தி குற்றேவற்
றெழும்பு புரிதறன் கேட்டே
யளிக்குங் கடவுண் மால்யானை
யடருங்காமத் துனிதீர்க்கவ்
வனமென் குழபூமயிர் வார்த்திட்
டலாகை புனைதற் கேகிலேயோ
தளிர்க்கும் பசுங்கற் பகமலரிற்
றண்டார்க் குரிசில் பிரமன்முதற்
றலைவ ருனது கொலுக்காணச்
சார்ந்தார்க் கருடற்கே கிலேயோ
களிக்குங் கருணை மாசிலார்
கண்ணே! சிற்றி லழியேலே!
களிவண்டாடும் பொழிற் றரங்கைக்
கந்தா! சிற்றி லழியேலே! (85)

வள்வார் விசிக்குந் துடிவேடர்
மதமா முகத்துச் சலக்கெனவீழ்

மணிவெண் டரள மருப்பொசித்து
வசிக்கு மிதணிற் கோனிரைத்துப்
புள்வார் மயிற்றோகையின் வேய்ந்து
புதுமென் கவரி கற்றையிட்டுப்
புனையுங் குடிலிற் புனங்காக்கும்
பொன்மான் பிணையிற் றனிபிறழும்
வெள்வே னெடுங்கட் குறத்திகிளி
விளிக்குங் குரற் கேட்டியாழிசைக்கு
விரும்பு மிதுன கின்னரம்போல்
விழைசெஞ் செவிகள் கொடுத்து நிற்குங்
கள்வார் செச்சைத் தொடைபுனையுங்
கடம்பா ! சிற்றி லழியேலே !
களிவண்டாடும் பொழிற் றரங்கைக்
கந்தா ! சிற்றி லழியேலே ! (86)

( வேறு. )

வழியிற் குழியிற் சுழி நீரின்
மதகிற் புதவிற் பொன்கொழிக்கு
மடையிற் புடையிற் செஞ்சாலி
வயலிற் புயலிற றழைத்திடுங்கா
வுழியிற் புழையிமாப் பொதும்பி
லோங்கும் வரம்பிற் கெழுமுரம்பி
லுயருந் தடத்திற் றிடலகத்தி
லுரைமுத் தமிழ்பாவ லருரைக்கு
மொழியிற் றெளியும் புனற்றடத்தில்
முழங்குங் குடவெள் வளையினங்கள்
முருவெண்டரளங் கொழித்தூரு
முளரித் தடஞ்சூழ் சோணாடா

கழியிற் றிரிமீன்விழி வள்ளி
கணவா! சிற்றி லழியேலே!
களிவண்டாடும் பொழிற் றரங்கைக்
கந்தா! சிற்றி லழியேலே! (87)

கோலுஞ் சிறுவெண் மணற்சிற்றில்
குஞ்சியலையக் கரும்புருமக்
கொடிவே யரவொழுக யிடைதுவளக்
குளிர்மென் றளிர்க்கை செப்புறயாஞ்
சாலுமொருபா லிழைத்திடநீ
தாளாற் சிதைத்த லொருகோடி
தபனருடலங் கடைந்திழைத்த
தெனனப்பன்ன கேசன்மணி
யாலும்பசும்பொன் மணியாலு
மவுணரிழைத்த மகேந்திரத்தை
யழிப்பப் பயிற்றும் விச்சையது
உயர்த்தா யிலையோ கோற்றேனும்
பாலுந் துவர்ப்பச் சின்மழலை
பகர்வா ரடக்குவடுறழும்
பணைக்குமுலைக் குங்குமச்சேறு
பாயுங் கடனீருவர்ப் பகற்றி
காலும்புனற் காவிரிநாடா!
கனியே! சிற்றி லழியேலே
களிவண்டாடும் பொழிற் றரங்கைக்
கந்தா! சிற்றிலழியேலே! (88)

சுடர்விட் டெரிக்குஞ் செஞ்சோதி
துளும்புமணியைக் கழுவியன்ன
தூமேனியின் மஞ்சனமாட்டித்
தூயமென்றுகிலாற் றுவட்டியொளி

---

மூல எட்டின்படி இப்பாடலில் 2 வரி மிகுந்துள்ளது.

படருங்குடுமி யுலர்ந்து முகம்
பரிவிற்றுடைத்துப் பால்புகட்டிப்
பருத்தி வெம்புஞ் சுழற்றி யுமை
பரிந்து மறுகில்விடுத்த துணை
யிடையிற் குயிற்றும் பேராய்த்த
தேழையமக்கு யிடர் விளைத்திட்
டேகவன்று நிருதர்குறும்
பெறிந்து களைதற்கென்றலவோ
கடக மணிப் பொற்கர தலத்துக்
கடம்பா! சிற்றி லழியேலே!
களிவண்டாடும் பொழிற் றரங்கைக்
கந்தா! சிற்றி லழியேலே! (89)

கோட்டுங் கனக கிரிசிலையைக்
கொள்ளும் பெருமாள் பொதுவினடங்
குனிக்கும் பெருமாள் செவிக்கொரு சொற்
கூறும் பெருமா ளவுணர்குலம்
வாட்டும் பெருமாள் விபுதர்நிதம்
வணங்கும் பெருமாள் பொறிமயில்மேல்
வாழும் பெருமாள் பஞ்சவர்க்கு
மன்னர் பெருமாள் தனக்குமமர்
மூட்டும் பெருமாள் மருகனென
மொழியும் பெருமாள் களிற்றுரியால்
மூடும் பெருமா ளதோவென்ன
முகிண்மென் முலைத்த யிடுப்பிருந்து
காட்டும் பெருமா ளென்னுமருட்
கடலே! சிற்றி லழியேலே!
களிவண்டாடும் பொழிற் றரங்கைக்
கந்தா! சிற்றி லழியேலே! (90)

**சிற்றில் பருவம் முற்றிற்று.**

# சிறுதேர்ப் பருவம்.

(வேறு.)

முத்தொழிற் கடவுட்கும் மேல்வருங் கடவுளூர்
முழுமணித் தேரும்நாண
மொய்யொளி களகக் கிடுங்கலின வாம்புரவியை
முடுக்குங் கருத்துணர்ந்து
மத்திகை நினைப்பவே திந்திற ஞாலத்தேரும்
வல்விசைக் கடுப்புமுட்க
மறிகடற் கண்டது விசும்பினிற் கண்டதிம்
மாநிலத் துற்றதென்று
மித்திசையி லுற்றதன் றத்திசையி லுற்றதென்
றெவருங் கலங்கமனமு
மிளக்கப் பெருஞ்சாரி யண்டகோடிகள் சுற்றி
யதிராடு சூருமுட்கச்
சித்திரப் பெருந்தேர் நடத்துந் தரங்கைவேள்!
சிறுதே ருருட்டியருளே!
திருமருக வமரேசர் பணியவரு குமரேச!
சிறுதே ருருட்டியருளே! (91)

அண்ட பகிரண்டமு மூதண்ட கூடமு
மகிலமுந் தேரமுட்டி
யாயமரர் முப்பத்து மூவர்க்க மும்பிர்தி மை......
யலரிமதி பாண்டிலாகிப்
பண்டருஞ் சுருதியொரு நான்கும் வெம்
புரவியாய்ப் படரொளிக் கிரிகளெட்டும்
பருமணிக் கால்களாய்த் திக்கெட்டும் நல்லொளி
பரப்புங் கொடிஞ்சிலாகி

எண்டருஞ் சக்கிரகிரி யச்சென வுடுக்கணமு
மெரிமணித் தொங்கலாக
வேத்தும் பெருந்தேர் நடாத்தும் பரஞ்சுட
ரின்னருட்குமர! முருகா!
தெண்டிரைத் தென்றரங்கா புரிக்கதிபனே!
சிறுதே ருருட்டியருளே!
திருமருக வமரேசர் பரவவருள் குமரேச!
சிறுதே ருருட்டியருளே! (92)

துப்பரும் பொற்பிலகி வெயில்விட் டெறிக்குமணி
யுமிழ்கதிர்க் கற்றைமாடத்
தொள்ளொளிச் சாளரத் தண்ணித்திலக் கோவை
யொன்றொடொன் றெற்றுமோசை
இப்பெருங் கற்பகப் பொன்னகரு மின்னகர்க்
கிணையுறுதென்ன அண்ணாந்
தெல்லொளிப் பகுவாய் திறந்து கலகலவென்
றிரைத்துச் சிரித்தல் மானுந்
தப்பருஞ் செய்குன்று மணிமா ளிகைக்குலந்
தமனியச் சிகரிபுரிசை
தரணி தலமுங் கடந்தண்ட முகடுச்சியுந்
தடவிப் பொலிந்து சுடருஞ்
செப்பருங் கண்ணொளி பரப்புந் தரங்கையாய்
சிறுதே ருருட்டியருளே!
திருமருக அமரேசர் பரவவளர் குமரேச
சிறுதே ருருட்டியருளே! (93)

**தரங்கை வீரவேலாயுதசாமி பிள்ளைத் தமிழ் முற்றிற்று.**

---

வெற்றிவேல் பவர் பிரிண்டிங் பிரஸ், தஞ்சாவூர்.

# தரங்கை

# வீரவேலாயுதசாமி பிள்ளைத்தமிழ்

## பிழைதிருத்தம்

| பக்கம். | அடி. | பிழை, | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 2 | கரத் | கரங் |
| 4 | 6 | புத்தெளிரேவருங் | புத்தேளிரெவருங் |
| 6 | 11 | கற்பகச | கற்பகக் |
| 8 | 13 | சந்திரோதைய | சந்திரோதய |
| 9 | 5 | தங்கையாய் | தரங்கையாய் |
| 9 | 9 | தொட்டிளங் | தோட்டிளங் |
| 9 | 3 | மொட்டிளங் | மோட்டிளங் |
| 9 | 7 | கொட்டிளங் | கோட்டிளங் |
| 9 | 11 | செட்டிளங் | சேட்டிளங் |
| 9 | 18 | உதைய | உதய |
| 8 | 25 | கண்டுதைய | கண்டுதய |
| 10 | 15 | சனிக்க | சலிக்க |
| 12 | 16 | தணதட | தனதட |
| 13 | 2 | லெங்கேசன் | லங்கேசன் |
| 13 | 18 | சத்தாபங் | சந்தாபங் |
| 21 | 17 | வென்பாறகடல் | வெண்பாற்கடல் |
| 22 | 5 | திருதி | திடுதி |
| 26 | 17 | ஒள்ளொளித் தும்பு | ஒள்ளொளிததும்பு |
| 27 | 25 | சென்னெல் | செங்நெல் |
| 32 | 2 | துவகைகூற | துவகைகூர |
| 32 | 21 | திணைக்கும் | திளைக்கும் |
| 35 | 18 | உதைய | உதய |
| 35 | 19 | சமைய | சமய |

| பக்கம். | அடி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 40 | 17 | பங்கையரசன் | பங்கயரசன் |
| 40 | 15 | பாகசாதவன் | பாகசாதனன் |
| 40 | 17 | கேழ்வர் | கேள்வர் |
| 43 | 2 | குபிற்று | குயிற்று |
| 44 | 12 | யரம்பை | யரம்பை |
| 44 | 19 | புரிகுமர | புரிக்குமர |
| 44 | 25 | மசணி | |
| 47 | 21 | மலரளக் | மலரளக |
| 49 | 9 | பதி காவலனே | பதிகாவலனே |
| 49 | 25 | புரிவேழ்வி | புரிவேள்வி |
| 51 | 5 | கன்றறமகளிர் | கன்றரமகளிர் |
| 51 | 17 | குழபூ | குழற்பூ |
| 53 | 12 | தெனனப் | தென்னப |

உ

முருகன் துணை.

## "திருவாரூர்"

# சத்தியஞான பண்டாரம் பிள்ளைத்தமிழ்.


| பாடல் எண். | முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|
| 51 | அஞ்சப்பொலன் ... | ... 32 |
| 8 | அணிகொண்ட ... | ... 6 |
| 10 | அழியும்புலா ... | ... 7 |
| 55 | அந்தக்கொடுங் ... | ... 34 |
| 14 | அந்திக்கு ... | ... 9 |
| 27 | அணையும் புரிதற் ... | ... 17 |
| 93 | ஆடன் மதனுடலம் ... | ... 56 |
| 53 | இடியிட்ட ... | ... 33 |
| 41 | இழைகொண்ட ... | ... 26 |
| 28 | இறைக்குந் திலக ... | ... 17 |
| 100 | இறையுந்திகிரி ... | ... 59 |
| 97 | ஈர்க்குந்திரள் ... | ... 58 |
| 30 | உருவளர் நறபவ ... | ... 19 |
| 48 | ஊடும் பெடையோ ... | ... 30 |
| 11 | எக்கக் கடைப் ... | ... 8 |
| 82 | எடுக்குந்தகை ... | ... 50 |
| 95 | ஏறிட்டகொடி ... | ... 57 |
| 24 | ஏனக்களிறு ... | ... 15 |
| 89 | ஒருவுங் கிளையு ... | ... 54 |
| 52 | கண்ணிற் சிறக்கு ... | ... 32 |
| 59 | கண்ணிக்கு மளவி ... | ... 36 |
| 12 | கரையேறு ... | ... 8 |
| 3 | கலைமணியை ... | ... 3 |

| பாடல் எண். | முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|
| 17 | கள்ளிக்கடுங் ... | ... 11 |
| 79 | களிபடு பணிமொழி ... | ... 48 |
| 1 | கார்கொண்ட ... | ... 1 |
| 101 | கார்வாழியந்தணர் ... | ... 60 |
| 75 | கானிருக்கும் ... | ... 46 |
| 94 | கானிறை...... .... | ... 56 |
| 80 | கிளிதருமிசை ... | ... 49 |
| 92 | கிளைக்கும் பொலன் ... | ... 55 |
| 5 | குழங்கன்று ... | ... 4 |
| 46 | குழிக்குங் ... | ... 29 |
| 16 | குறிக்குங் ... | ... 11 |
| 83 | கூடற்பதியிற் ... | ... 51 |
| 63 | கூடுந்தமிழ்க் ... | ... 39 |
| 62 | கூறுந்தனுத்தளர் ... | ... 38 |
| 25 | கொங்கத்தரசர் ... | ... 16 |
| 84 | கொடித்தாமரை ... | ... 51 |
| 78 | கொழுதுஞ்சிறை ... | ... 48 |
| 50 | சதுமறையுற்ற ... | ... 31 |
| 36 | சிலைமடுக்கும் ... | ... 22 |
| 58 | சீரிற்கவிதை ... | ... 36 |
| 43 | சூலிற் பொருந்து ... | ... 27 |
| 86 | சேற்றுக் கமல ... | ... 52 |
| 18 | தாவடிது ... | ... 12 |
| 29 | தாழுஞ் சடையு ... | ... 18 |
| 20 | திருவிணை நகர் ... | ... 12 |
| 70 | துளக்குஞ் சுருங்கி .... | ... 42 |
| 2 | துளைபெயிற் ... | ... 2 |
| 74 | தூங்கும் புனற் ... | ... 45 |
| 72 | தூணேறு சிங்கத் ... | ... 44 |
| 64 | தூளும்பாற் ... | ... 39 |

| பாடல் எண். | முதற்குறிப்பு, | பக்கம். |
|---|---|---|
| 42 | தேனைத்தொடுங் ... ... | 26 |
| 6 | நறைவைத்த ... ... | 4 |
| 71 | நாடரிய முத்து ... ... | 44 |
| 57 | நாளக் கமலத் ... ... | 35 |
| 38 | நிலவு விரிமதி ... ... | 24 |
| 9 | நீடுந்தடமலர் ... ... | 6 |
| 33 | பங்கிற் பசுந்தோ ... ... | 21 |
| 69 | படைக்குந் துணர் ... .. | 42 |
| 15 | பாட்டிளம் ... ... | 10 |
| 99 | பாடப் பழமறை .... .... | 59 |
| 26 | பாற்றினினஞ் ... ... | 16 |
| 88 | பிறக்கும் வயிர ... ... | 53 |
| 45 | பிறைமணக்கும் ... ... | 28 |
| 76 | புத்தமுலரி ... ... | 47 |
| 67 | புரத்திற் பரப்பி ... ... | 41 |
| 90 | புரியுஞ் சடையுஞ் ... ... | 54 |
| 34 | பைக்கும் பயங் ... ... | 21 |
| 23 | மகரத்திரை ... ... | 15 |
| 21 | மட்டுருவித ... ... | 14 |
| 65 | மடக்குந்தடங் ... ... | 40 |
| 39 | மடுநிறையிற் ... ... | 24 |
| 13 | மருவிளக்குங் ... ... | 9 |
| 61 | மல்லற்பரம் ... ... | 38 |
| 35 | மழுவும் கொலைச் ... ... | 22 |
| 32 | மண்ணுயிர் தழைக்க ... ... | 20 |
| 7 | மாலைதொடும் ... ... | 5 |
| 87 | மாறுஞ்சமய ... ... | 53 |
| 44 | மின்னற்படுங் ... ... | 27 |
| 68 | முடிக்கப் பணைத்த ... ... | 42 |
| 40 | முடிபடர் சர்ப்ப ... ... | 25 |

| பாடல் எண். | முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|
| 56 | முடிவும் படத்து ... | ... 34 |
| 85 | முதிருங்குலை ... | ... 52 |
| 37 | முருகுவிரிமலர் ... | ... 23 |
| 81 | முறத்தின் முறை ... | ... 50 |
| 77 | மைப்பொழுதுங் ... | ... 47 |
| 22 | வண்டைப்பொரும் ... | ... 14 |
| 73 | வந்திணைப்பற்றி ... | ... 45 |
| 4 | வயலிட்ட ... | ... 3 |
| 66 | வலத்திற்றிரு ... | ... 40 |
| 91 | வாரேறுவன ... | ... 55 |
| 49 | வாளுங்கணையும் ... | ... 30 |
| 54 | விட்டேறு ... | ... 33 |
| 60 | விரிக்குஞ்சுடர் ... | ... 37 |
| 98 | விருந்துவரி ... | ... 59 |
| 96 | வெ...... குமிழும் ... | ... 58 |
| 31 | வெண்டாமரைக் ... | ... 20 |

உ

முருகன் துணை.

# "திருவாரூர்"

# சத்தியஞான பண்டாரம் பிள்ளைத்தமிழ்.

## காப்புப் பருவம்.

### விநாயகர் வணக்கம்.

(கார்கொண்ட) கரடமுழு மனமுவந் தொழுகுங்
கடாம்புகர்ம ருப்பணிபெறக்
கண்ணுதற் பரமன் புயத்திற் படந்துபணி
நீள்தடவ ரையகட்டிற்
சீர்கொண்ட தவளவெண் பிறையுடுத் தொகையொடுஞ்
செம்முகில் கிடந்துநீலத்
திரணறும் [புளகாயமு]வ தென்னவிளை யாடுமொரு
சிந்துரத் தைத்துதிப்பாம்
பார்கொண்ட பல்லுயிர்கள் சிவசமய மல்லாது
பரசமய வாரியிற்போய்ப்
படியாது சரணத் திருத்தோணி காட்டியொரு
பரமுத்தி வீடளிக்கு
மேர்கொண்ட சைவசித் தாந்தகுரு தேசிகனை
யெழுதுபுக ழாரூரானை
யென்னுயிர்க் குயிரான மாசிலா மணியையின்
றேத்துசொற் றமிழ் தழையவே! (1)

## சிவபெருமான்.

துளை ]யெயிற் றரவிதழி விடபொலிச் சுடர்மதிக்
கலைவேணியிற் சேர்ந்தவர்
துளபமைப் புயல்விழி யருச்சனை துகளறப்புரி
யாசையைப் பார்த்தவர்
துளிமதக் கரியத ளுரித்திடு சுரிநிமிர்ந்
தணியாடையிற் போர்த்தவர்
துறைமணத் தமிழ்மதுரை யிற்படா துரிசறுத்துறை
நீதியிற் கூர்த்தவர்
விளையிருட் பெயர்சுரனைப் பொருமிளிர் கவர்த்தலை
வேலெடுத் தீர்த்தவர்
வெருவ முப்புரமடும்......ாவிசையவிற் குயர்மேருவைப்
[போர்த்தவர்
விதிமுடித்தலை விழவழுத்திய விறலுகிர்ப்படை
[வீறு பெற்றூர்த்தவா
விமலரற் புதர் கயிலையின் விரைமலர்ப்பத நாவில்வைத்
[தேத்துது(ம்)
முளைகிளைத்துவெ ளுருவுபச்சென முதிர்வுபற்றிய சாலியிற்
காப்புறு முடவர்ப் பிளி......க்கழை
முழுதும் வைத்தடர் வேலியிற் சூற்பரு
முகைசிவத்திலை நடுவெடித்
திளமுனை புறப்படு வாழையிற் சேப்பவிர்
முருகுசுற்ற............முரிதிரைப் புனலோடையிற்
றொட்டினில் வளைவயிற்
குளிர்தாள முற்பலமலர் முற்றொளிவீசிடப் பரப்பயில்வரி...
டித்துமிழ்வன சமத்தியின்மேவ பொற்பேட்டன
மடல்விரித் தெழுகமுக நெற்றியில் வதியநட்போடு
சேவலைக் கூப்............ப
கமலைநற்பதி மருவசத் தியஞானியைக் காக்கவே. (2)

## கலைமகள் துதி.

*கலைமணியை நெடுநாவில் வைக்குமொரு திசைமுகனின்*
*றருள்மணி யைப்பயந்த*
*கருமணியை வருசகோ தரமெனப் பெறுமினிய*
*கருணைமணி யைத்திருவினோர்*
*தலைமணியை மெனை.......... யிறுவாயத் துதவுமொளிர்*
*தருணமணியைப் பொருநைசூழ்*
*தமிழ்வேலை வளருமர கதமணியை மணிதருந்தா*
*மரைச்சரண நினைசூழ்ந்தேத்துதும்*
*நிலைமணியை யுதறுதொ றும்விலை மணியொடுங்*
*கலந்தலாகத் திருநிலவு*
*நிலவுமணி ம்ருதவேலிசூழ் காவேரி புடையுடுத்*
*தழகுதழை கலையானை*
*மலைமணியை வந்தனைசெய் சைவசிந் தாமணியை*
*மாயையிரு ளைத்துரக்கும்*
*வரமணியை யெளியனிரு கண்மணியை மாயன்மகிழ்*
*ம்மாமணியைப் புரக்கவென்றே!* (3)

## குமாரக் கடவுள்.

*வயலிட்ட மடையுடைத் தெக்கரிடும் வெண்டரள*
*வண்டலிற்கூ டியன்மைஎனி*
*வாயினல கெடுத்தி......த்தறி விளையாடு மாலையம்*
*பொழுதுகாயு*
*மயலிட்ட படுவரம் பிடையேறி மடநாரை*
*யாரல்பார்க் குங்கமலைவாழாக*
*மவரோதையனை ........... பயெம மையனைக்*
*காத்தளிக்கப்*
*புயலிட்ட விண்ணுலகு மிந்திரனு மோடவெம்*
*போரிட்ட சூரர்வெருவப்*
*பொருசிறை ...........த்துமொரு சேவகன்*
*புணரியி லெழாத்தெய்வக்*

கயலிட்ட கொடியொடுங் காமனைப் பணிகொண்டு
கருதிவிலை யெழுதுறும்நுற்
......காமதொலை யழகுதரு கானவர்கள் கொம்பின்
கன்னிட்ட தோளினனே ! (4)

## வயிரக் கடவுள்.

குழக்கன்று மாயச் சிறுதே ருருட்டுமொரு
கொக்க......... றுதுஞ்சவெற்
கூறுகி மெய்யிற் பொடிப்புழுதி தோய்ந்துசெங்
குருதியுங் கொப்பளித்து
விழக்கன்றி மனுநற் றடந்தே குருட்டவுயிர்
மீண்டெழுங் கடலைநகர்
வாழ்ஞான தேசிகனை மாசிலா மணிவிரத
வீரனைக் காக்கமடமா
னழக்கன்றி வெந்தழல் வளர்க்குமுனி வோர்தவ
மிழக்க வவர்மனைவியரெலா
மில்லிழந் தணிகலை யிழந்துபின வரர்நடந்
திடுபலி யிரக்குமெந்தை
வழக்கன்றெ னச்சமண சலதியவ நில்லாது
மடியக் குரைக்குமுண்மை
மறைஞானி நெடுமுது குழுக்கப் பிரிந்தேறி
வரும்வயிரக் கடவுளே ! (5)

## அஞ்செழுத்து.

நறைவைத்த வெள்வளையில் நிலவின் முகைவிரிய
நளினப் பொகுட்டுமேவி
நாவளைத் திசைபாடும் வரிவண்டு புறமோடி
நாகிளம் பெடையோதிற்
சிறைவைத்த பிள்ளைவண் டோடும்புகுந் தினியசெந்
தேன்மடுக் கும்வயல்சூழ்
தென்கமலை மாசிலா மணியெனுஞ் சித்தாந்த
தேசிகனை யினிதுகாக்க

முறைவைத்த முத்திதரு முழுவித்து மும்மலமு
யக்கறுத் தடரு மொருவாள்
மூதுணர்வொ மூக்கமறி யாதவரு ............
முகரெரி யொத்தபுதுநீற்
றறைவைத்த மும்மதக் களியானை முன்னெறிந்
தாழியிற் கற்பிணைத்திட்
டையவிடு நாவினுக் கரசாழி யதுபுரந்
தஞ்சலென்னு மஞ்செழுத்தே! (6)

---

## திருவெண்ணீறு.

மாலைதொடும் வெள்ளருவி வரையெனப் பொன்னிட
மேனியிட் டிழைத்தசித்ர
மாடத்.........ரோடு மாதரார் விழிதுயில
மதியவெண் ணிலவினோடுஞ்
சோலைதொடு சந்தனப் பொதியத் திளங்கால்
சுருங்கையி னுழைந்துவந்
தான்பிருகு சூழ்கமலை மாசிலா மணியெனுஞ்
சோதியைக் காக்கமதுரித்
தாலைதொடு கன்னலம் பாகிற் கனிந்தமொழி
யரிவையபி டேகமதனுல்
பொன்முலை மங்கையர்க் கரசியார் நாடோறு
மகங்களி திளைக்கவட்ட
வேலைதொடு மேதினி புரக்குமொரு தந்திர
மீனவன்கூ றும்வெய்ய
வெப்புந் தவிர்த்தமனை வீறடக்கிக் கொண்டவிண்
பரவுதிரு வெண்ணீறே! (7)

---

## திருமால் வணக்கம்.

அணிகொண்ட விளம......... வாசடையுங் காங்தெய்வனி
யுயிர்ப்பயிர் தழைக்க வழகுந ரர்வடிவாங்
திணிகொண்ட தடம்புயத்து மாசிலா மணியைச் சிவஞான
நற்றடத் திற்றிளைக்குஞ் செம்முகி லைப்புரக்க
மணிகொண்ட கதிரெறிக் கும்பசுந் துளபப் படலைமறு
மார்பத் திருமடந்தை மலரடிகள் மருவிநாளும்
பணிகொண்ட பூந்தளிமம படுத்து நெடுந்தரங்கப் பாற்கடல்
மேற்பள்ளி கொள்ளும் பச்சைநெடும்புயலே! (8)

## சூரியன்.

நீடுங் தட்டமலர் வதனமும் வெண்ணிலா
நித்தில நிறைக்குநெற்றி
நெடுமடற் பூகதமு மாகமண் டலமளவி
நின்றிடுங் குங்குமப்பைங்
காடுஞ் செடியுஞ் சுருட்டியெறி தெண்டிரைக்
காவேரி யாற்றிணைக்
கமலைவள நகர்மருவ மாசிலா மணியெனுங்
கருணைமுனி யைப்புரக்க
ஏடும் பசுந்தேற லூற்றெழுகு பைந்துழா
யெந்தைசெங் கைக்கமலமு
மிறையோன படைப்புதவு தாமரையும் வச்சிரத்
திந்திரன் வச்சிரமு
மாடுஞ் சுரும்பா குடைப்பதுமமூம் பலமணியு
மறைநீரின் மலர்வொளிரு
மாயிரங் கதிர்பரப்பிப் பொருதா ங்கமெ......
......ழியிலு தித்தசுடரே! (9)

## முப்பத்து முக்கோடி தேவர்

அழியும் புலாலுடம் படையவிடு தீவினை
யகற்றியிரு சரணளித்தே
யானந்த சிற்சத்தி யறிவித் தேனைத்தனக்
கடிமைகொண் டாளுமமலன்

பொழியும் புயற்றிவலை பொய்யா திருக்கினும்
பொங்குபுது நீர்சுரக்கும்
பொன்னிவள நாடனருள் மாசி......ஞான
புங்கவனை யினிதுகாக்க

விழியுந் தடங்கரமு மழல்வைத்து நதிமதியம்
வேணிமுடி மீதமைத்த
விமலன் றிருச்சனன ........யப்படு ழிக்கபு
வனங்கண் மேவி

பொழியும் பழம்பனுவல் மறைவழி நடந்துபகர்
மூவிதப் படுமுயிர்களின்
முறைதிறம் பாதுதவி பெருமைபெறு முப்பத்து
முக்கோடி தேவர்குழுவே! (10)

### காப்புப் பருவம் முற்றிற்று.

# செங்கீரைப் பருவம்.

எக்கக் கடைப்புறங் குழியாது நெடுவயி
றெடுக்கக் குறித............
......கியொடித் திடும்வயலும் நாறுநட் டிடும்வயலு
மேரியின் காலுமோடி

விக்கக் கொழுங்கயல் பிடித்துண்டு திடரேறி
வெயிலினில் விழிதுயிற்றி
மீளவும் விழித்திளைய வெள்ளிற வருத்தியிள
மெய்கிளைத் தலகுகோதிப்

பக்கத் திணங்குமொரு படர்நெடுஞ் சிறையிரண்டு
பைபைய வணைத்தொதுக்கும்
பார்ப்புவளர் செந்தீக் கொழுந்தெனப் பதறிடப்
பணைமருத வேலியெல்லாஞ்

செக்கச் சிவப்பேறு செம்பவள வளர்நாட
செங்கீரை யாடியருளே!
தேசுலா வியகருணை மாசிலா மணிமுனிவ
செங்கீரை யாடியருளே! (11)

[கரைபே]யறு காரகிற் கோடுழுது முழுமதியின்
மெய்கிழிந் தொழுகும்
முதுவெயிற் கொழுந்தேற விரிதரு மிருற்படலம்
விண்டொழுகு தண்டேறலும்

வரையேறு வனமுலைக் குறமடந்தையர் கவண்
வழங்குமணி பட்டுநெட்டை
வாழைக் கொழுங்கனி பிதிர்ந்து பொழிசெந்தேனு
மாங்கனியடைந்த மதுவும்

நுரையேறு போலலை யலைத்துப் புரண்டருவி
நுண்டுளி தெறிக்கவோடி
நுவலருங் குடகுமலை வந்திறங்கிப் பெருகி
நூறுமுகம் வைத்துலாவத்
திரையேறு பொன்னிவரு தென்சோழ வளநாட
செங்கீரை யாடியருளே
தேசுலா வியகருணை மாசிலா மணிமுனிவ
செங்கீரை யாடியருளே! (12)

மருவிளைக் குங்குமுதம் வாய்மலர் நிலவுமிழு
மணிசொரி[நற் சிப்பியோடு]
வயிறுளைந்து வால்வளைக் குலமெருங்கப் புனல்மறிந்து
கழிமாருத மதகுதோறும்
வெருவிளைக் குங்குர லெழுப்பவரி வாயிரு
விழிசிவப்ப ......சசி......வி
விண்வெடி தாவுநீர் நாய்வெருட்டக் கொழுந்தெளியில்
மல்லென வராலொளிக்குங்
கருவிளைக் கும்பெருங் கெண்டைநிரை தங்......களிடை
கடவாது சிலவெதிர்ந்து
கமலச் செழுங்காடு சாய்த்து நெட்டடலின்
கருந்தலைமலங் கொடேற்றி
செருவிளைக் குந்தடந் திகழ் சோழ[நாட]ரிட
செங்கீரை யாடியருளே
தேசுலா வியகருணை மாசிலா மணிமுனிவ
செங்கீரை யாடியருளே. (13)

அந்திக்கு மழைமுகிற் கனத்தெழு ......ற்றி
னம்புலிக் கண்ணியானை
யஞ்சொலுமை பங்கனைக் கங்காள நாயகனை
யானந்த வாழ்வைநாளும்

வந்திக்கு முறைபணித் தருளென்று மொழியாத
மலவினைக் கட்டறுத்து
மாயாத முத்திதரு தீக்கைபுரி யென்றுமுழு
மறைமுடிப் பொருளையெல்லாம்

பந்திக்கு மாகமுணர்த் தே......... நீதிப்
படிப்பொழுக் கத்தினோடும்
பலகோடி தொண்டர்மெய் யன்பொடுந் தேனொழுகு
பனிமலரெ டுத்திறைஞ்சித்

சிந்திக்கு மாறுபோற் றுணைச்சே வடிக்குரவ
செங்கீரை யாடியருளே
தேசுலா வியகருணை மாசிலா மணிமுனிவ
செங்கீரை யாடியருளே. (14)

பாட்டிள்ந் தும்பியறு காலுழு துழக்கிப்
பசுந்தேறல் வாய்மடுக்கப்
பகடுவலி யாதபொற் சகடுதொறும் விடுகொடிப்
படர்முல்லை முகையுடைக்கு

மாட்டிளந் தோகைமயில் வீர[மணவ ரிரைவணி]
யழுத்துஞ் சுருங்கைதொறு
மதிரிடி முகிற்குலங் கண்டிறகு விரிதந்
தகங்களித் தேநடிக்கு......ங்

கூட்டிளங் கிள்ளை மடவிய ருரைக்கச்
சொற்கொழுந்தமிழ் வடித்திசைக்குங்
குளிர்நில வெறிப்பக் குழைந்தமு தொழுக்கிக்
குலாவிடு தாவிதோறுஞ்

சேட்டிளந் திங்கள்பயில் மேடைசூழ் கமலையாய்
செங்கீரை யாடியருளே
தேசுலா வியகருணை மாசிலா மணிமுனிவ
செங்கீரை யாடியருளே. (15)

குறிக்குந் தடங்குன்று தொறுமாடி வாசக்
குராமல ரெடுத்தணிந்து
கோலக்க லாபமயில் மேல்கொ......ன மேவுகோழி
தொட்டே யுயர்த்துத்

தறிக்கும் பெரும்படை சிதைக்கும்வேல் பற்றிமுத்
தமிழ்தந்து பாரிசாதத்
தருமட.ப... ......நல வள்ளியுந் தழுவித்
தனித்தாள்வண் டல்குற்றிப்

பறிக்கும் புனற்கடலி னலைவாயு கந்துபொற்பன்
னிருகைமுகி லனிகாத்துப்
பவளமுடன் கனகமுங் கதிர்மணி நிரைநிரை
பகுத்துப் பகுத்துவாரித்

தெறிக்குந் திரைப்பொருனை சூழ்வேலை நகராள
செங்கிரை யாடியருளே
தேசுலா வியகருணை மாசிலா மணிமுனிவ
செங்கிரை யாடியருளே. (16)

கள்ளிக் கடுங்காடு மோமையு முணக்குங்
கனற்றெறுங் காலையுங்
கடிமணக் கொடிவிரியு முல்லைபடர் முல்லையுங்
கைதைநெடு வேலிசுற்றுங்

துள்ளிப்பரம் புந்திரைக் கடலினெய் தலுந்தாழை
யுடனறவு தூற்றுகமுகஞ்
சோலையுந் தேமாவு மாலையுங் கன்னலுஞ்
சுருள்விரி குருத்தாம்பை

யெள்ளிப்ப ணைத்து நிமிர்மஞ்ச ளுங்கஞ்ச
முடன்நாறு விளைசெந்நெலு
மெங்கணுங் காவிரிப் புனல்பரந் தேவளர்
விலையிலா மருதமாகுந்

தெள்ளித்தெ ளிக்குந் தமிழ்ச்சோழ னருளாள
செங்கீரை யாடியருளே
தேசுலா வியகருணை மாசிலா மணிமுனிவ
செங்கீரை யாடியருளே. (17)

தாவடிது டக்கியிருள் குழலளக மளவுஞ்
சமர்விளைத்துக் குழையுலாவத்
தண்ணமுதும் வெங்கொலைக் காளமு முயிர்க்குந்
தடங்கடற் றகைசுருக்கித்

தூவடிய டற்கமைந்த சததகட பாவையொளி
சுடருமணி மாடமனையிற்
றுயருழந் திதயந் தளர்ந்துருகி யன்பொழுகு
சுந்தரன்சு ருதிதமிழாம்

பாவடிப தித்துத் துதிக்கச் சடாடவிப்
பானிலாக்கு ழவிநிலவப்
பாயிருண் மடுப்பத் தனித்தூது சென்றவன்
பழமறைகி டந்தரற்றுஞ்

சேவடித னக்குநிரை ‡மதுகுசூழ கமலையாய்
செங்கீரை யாடியருளே
தேசுலா வியகருணை மாசிலா மணிமுனிவ
செங்கீரை யாடியருளே. (18)

*          *          *

திருவினை நிகர்கா மைவிழி தடவித்
தனிநுத லிற்றடவத்
தவளப் பிறையுந் திகழ்கரு மறுவுந்
தந்துல கத்தினுள்ளே

---

‡ மதகு—பிரதி பேதம்.

* 19-வது பாடல மிகப்பிழை. சிலபகுதி முறிந்துளது.

யிருவினை விட்டக லாதுபி றப்புமி
றப்புமொ ழிந்தறியா
விழிசம யங்கெட வெத்தின மும்புக
ழேமடிநன் முத்திசெழுந்

திருவினை யுதவிய சிவசம யந்தலை
செல்வ மெடுத்ததெனச்
சிரம தெடுத்தடி யவர்மிகு கற்பஞ்
செய்திடு வஞ்சமுறும்

மருவினை தவிரிரு சரணம சைந்திட
வாடுக செங்கீரை
யருள்பொழி சத்திய ஞானவ ரோததி
யாடுக செங்கீரை. (20)

## செங்கீரைப் பருவம் முற்றிற்று.

---

## தாலப் பருவம்.

மட்டுரு விதகரு மழையுருவிக் கதிர்வயி
லுகுவித் திரண்மீன
வளரொளி பொங்க மனங்களி கூர்வதந்
திடுமண் டலமும்
பட்டுரு விப்பனி கொண்டுவ ளைந்துப
ரந்திடு மிருள்பருகிப்
பலதுளி மண்டிட வமுதம் பெருகிய
பான்மதி யப்படலந்
தொட்டுரு விப்பயில் விஞ்சையர் நாடு
துளைத்துரு வித்தருவுஞ்
சுரவியு மணியுங் கமலமு நிறையுஞ்
சொர்க்கத் திருநகரத்
தட்டுரு விக்கிளர் மாடக் கமலையர்
தலைவா தாலேலோ
சத்திய ஞான விசித்திர தேசிக
தாலோ தாலேலோ (21)

வண்டைப் பொரும்விழி மலைமென் கொடிபடர்
வன்மீ கத்துறையும்
வா......ன் பவனியு லாவா லுள்ளம
கிழ்ந்துவ ணங்கவருந்
தொண்டைக் கனியிதழ் நறைமல ரளகத்
துடியிடை மடவியர்தந்
துரிசறு நடைகண் டஞ்சித் திருநடை
சொல்லுக பயில்கவெனப்
பண்டைத் தனதுரு மாறித் தெய்வப்
பங்கய வாவியனம்
பணியணியாளர் பதுமப தத்துணை
மிசைபற்றி யாற்றுதலிற்

றண்டைக் குரல்படர் வீதிக் கமலையர்
தலைவா தாலேலோ
சத்திய ஞானவி சித்திர தேசிக
தாலோ தாலேலோ. (22)

மகரத் திரையெறி வாரிதி தந்தவ டித்திடு
தெள்ளமுது மதுமுக்கனியு
மிறுத்திடு தேறலு மாவிற் பயில்குயிலும்
பகரத்தரு மதிசீதள
மதுரப் பணிமொழி நெடுவேற்கட் பவளத்
துவரித ழிழையிற்
றுவளிடை படியப் புளகமுறுஞ் சிகரத்
துணைமுலை வாழ்பவ ரளகோதிச்
சிறையளி வீழ்ந்தொளிருஞ் செம்பொன் மணித்திரு
மாளிகை யெழுதுஞ்
சித்திர முல்லையெல்லாந் தகத் தளறுமணக்குங்
கமலையர் தருவே தாலேலோ
சத்திய ஞானவி சித்திர தேசிக
தாலோ தாலேலோ. (23)

ஏனக் களிறுவி டங்குதி கொள்ளு
மெயிற்றர வப்படமீ
தேற்றச் சிதறிமின் னெரியை நிகர்க்கு
மிரத்தின ராசிகளுங்
கானக் களிறுவ யப்புலி கொன்ற
களத்திருக் கோடுமிழுங்
கதிர்வெண் டரளமு மறிதிரை யுதறுங்
காவிரி வளநாடா
வானக் களிறுமு ழங்கிய தென்றதிர்
வானைப் பொரவடையும்
வாளைகண் மண்டி மடுத்துழு துண்ண
வழிந்துபெ ருக்கெறியுந்

தானக் களிறுமு ழங்குங் கமலையர்
தருவே தாலேலோ
சத்திய ஞானவி சித்திர தேசிக
தாலோ தாலேலோ. (24)

கொங்கத் தரசர் தெலுங்கப் புரவலர்
கொல்லா புரவேந்தர்
குச்சார் தேச மருட விராடக
மகதத் தடன்மன்னர்

வங்கத் துரைகள் முடித்தலை தாழ்த்து
மறைத்துதி பலபாடி
மருமலர் சிந்தி வணங்க மகிழ்ந்தருள்
வரிசைக் குருராயா

பொங்கத் தொனுகளி ளங்களி வண்டு
புலம்பொ ' தும்பர்தொறும்
பூவைக் குலமும ணம்புணர் பச்சைப்
பூங்கிளி யின்குலமுஞ்

சங்கத் தமிழ்பயி னுலவெனை நகர்க்கொரு
தருவே தாலேலோ
சத்திய ஞானவி சித்திர தேசிக
தாலோ தாலேலோ (25)

(வேறு.)

பாற்றி னினஞ்சூழ் நிணங்கமழும் படைபயி
லுமவர் புடைபாக்க
பறமா மடுப்பக் கடாத்தருவி பாயுங்
கரடக் களியானை

யாற்றி னெழுகுங் குளிர்தருநீ ரருத்த
விடுக்குந் தொறுவிருத்தா
......ங்கி னனையார்பா லாமறை யருளந்
தணர்கள் முதலினோரைக்

கூற்றி னெழுந்து கதமுருத்துக் கொல்லா
தணிநூல் வீதிதொறுங்
குளிரும் பறையி னிலகினமுங் குண்டு
படுதெண் டிரைமுழக்கம்
மாற்றி நடக்குந் தமிழ்க்கமலை வளமா
நகராய் தாலேலோ
வழங்கும் புகழ்சத் தியஞான விசித்திரதேசிக
தாலோ தாலேலோ. (26)

அனையும் புரிதற் கரியநெறி யன்பி
னிரங்கி யடியவருக்
கழியா முத்தி வீடளிக்கு மமலன்
கற்றற் கரியவிரு
[வினையு] மகற்றி யுணர்வரிய வேதா
கமத்தின் பொருளுணர்ந்த
வேதா ரணிய னுயிர்த்துணையே விளங்கு
மதிதோய் பொதியவரைச்
சுனையுங் குழியுந் (திட)ராக்கிச் சுழித்துத்
திடரைச் சுனையாக்கிச்
சூதப் பொழிலும் பலாப்பொழிலுஞ் சுருட்டிச்
சிலைத்துச் சிலைவேடர்
மனையும் பிடுங்கி வரும்பொ(ரு)நை வளநாட்
டமுதே தாலேலோ
வழங்கும் புகழ்சத் தியஞான வாழ்வே
தாலோ தாலேலோ. (27)

இணக்குந் திலகத் திருநுதலா ரேறி
விளையாட் டினிதயரு
மெற்குஞ் சுடர்ப்பொற் பொலன்குடுமி யேமப்
பொருப்பை யிகழ்ந்துயருந்

கணக்குஞ் சுடரு முரைகடந்த கனகத்
திழைத்த செய்குன்றிற்
கலைவெண் மதியுந் தவழ்ந்துரிஞ்சிக் களங்கம
றைத்தே யமுதொழுக்கத்

தணக்கும் புறத்திற் சந்தனமுந் தழைசண்
பகமுந் தடுக்கநறுத்
ததும்பு மலரி னிடைநுழைந்து தருமத்
தவளத் திருமேனி

மணக்கும் படிக்கு வருங்கமலை வளமா
நகராய் தாலேலோ
வழங்கும் புகழ்சத் தியஞான வாழ்வே
தாலே தாலேலோ. (28)

தாழுஞ் சடையு மிளம்பிறையுஞ் சங்கக்
குழையுங் கருமிடறுந்
தயங்கு பெருமா ளாரூரன் சரணம்
பரவிப் பணிந்துபிறப்

பேழுங் கடக்க மறைநான்கு மிசைக்குந்
தமிழ்வே தமும்பாடி
யெறிக்குங் கதிர்வச் சிரக்கடவு ளிமையோர்
கனகத் திருநகரம்

பாழும் பிரமன் பதிவறிதும் படவே
குடிபுக் குளமுருகிப்
பத்தி யறுபத் தொருமூவர் பலராந்
தொண்ட ரொடுநெருங்கி

வாழுந் திருமண் டபம்பொருந்தும் வளமா
நகராய் தாலேலோ
வழங்கும் புகழ்சத் தியஞான வாழ்வே
தாலோதா லேதோ. (29)

## வேறு.

உருவளர் நற்பவ ளாசல மேனியர்
கோடார் தோடார்நீ
ளுமையிடம் வைத்த பராபர நாயகர்
தாலாய் சீலர்வாழ்

மருவளர் மட்டலர் தூவி வழாவகை
பாவா ணுவாலே
மனமகி ழுத்துதி பாடின பேர்பெறு
பேறே வீறுடே

திருவளர் சக்கரன் வேதியர் மாதவ
ராஞேர் வாஞேரே
தூற்றிடும் வீடொழி யாதருள் பாதர்
தாதா (ரும்)

தருவளர் பொற்கம லாலய மாமணி
தாலோ தாலேலோ
தமிழ்தெரி சத்திய ஞான தயாநிதி
தாலோ தாலேலோ. (30)

## தாலப் பருவம் முற்றிற்று.

# சப்பாணிப் பருவம்.

வெண்டா மரைக்கலை மடந்தை புணர்வேதியனும்
வெவ்வரவி னுச்சிகுழிய
விரைமலர்ப் பதமெடுத் தாடிநவ மணிசிந்து
விரிதிரைப் பரவைதுஞ்சுங்
கண்டா மரைப்போது நிகர்தரும் பைந்துழாய்க்
கரியமழை முகில்வண்ணனுங்
காண்பதற் கரிதாய காரணனை யாரணக்
கமலால யக்கடவுளை
வண்டா மரைச்சரண மர்ச்சனைசெய் சமயமெவர்
முத்திதரு சமயமன்றி
மற்றுமொரு சமயமுண் டென்பவர்கள் வஞ்சக
மனத்தறிவை யேநகைத்துத்
தண்டா மரைக்கரங் கொட்டுதலை யொப்பவொரு
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ் தழைக்கவருள் கொண்டசத் தியஞான
சப்பாணி கொட்டியருளே. (31)

மன்னுயிர் தழைக்கவரு மமலனை செவ்வந்தி
மலர்வாச மேனியானை
வன்மீக நாயகனை யல்லியங் கோதைநன்
மணாளனை வழுத்திவனசப்
பொன்னுயிர் தழைக்க மங்கல நாணு மன்னு
மொளிர்பொற் குழைகளு......
பொலியமென் புணர்முலை நறுங்களப மூழ்கவெழு
தஞ்சனம்போர் விழிவிளங்கவ......
யின்னுயிர் தழைக்கவொரு சக்கரமிலங்க
வடல்வெ.........ளமுங்கி
யார்ப்பமே தினிமடுத் துண்டுமீள வுமுமிழ்ந்
தவரிவிற் காவெடுத்தமேகந்

.தன்னுயிர் தழைக்கத் தவம்புரியு மாறே
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ் தழைக்கவருள் கொண்டசத் தியஞானி
சப்பாணி கொட்டியருளே, (32)

பங்கிற் பசுந்தோகை யுந்தோகை வாகனப்
பன்னிரு தடக்கைமுகிலும்
பருமணிக் கிரணவரி யாசனத் திடைவைத்த
பண்ணவனை யெந்தநாளுங்
கொங்கிற் கொழுத்தமலர் கொய்யுநங் தாவனக்
கொடியினிற் குவளைவைத்த
குண்டினிற் பசுமஞ்ச ளிற்புனல் குடைந்தோடு
குளிக்கருஞ் சேற்றுவயலிற்
கங்கிற் குளப்பெருங் கரையிற் கரைத்தலைக்
கமுகா டவிப்பரப்பிற்
கதலிப் படப்பையிற் கன்னலங் காட்டில்வெண்
கதிர்நிலாத் தரளமீனுஞ்
கங்கிற் சிறந்தவளை பயில்கமலை நகராளி
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ் தழைக்கவருள் கொண்டசத் தியஞானி
சப்பாணி கொட்டியருளே. (33)

பைக்கும் பயங்கொடுக் கும்பாவை யல்குற்
பணைத்துணைக் கொம்மைமுலைநற்
பவளம் பழுத்தசெங் கனியனைய நறையிதழ்ப்
பணிமொழிப் படர்தருகுடங்
கைக்குங் கடந்துபொற் குழையுருவி மீளவுங்
கடிமலர்க் குமிழ்மறிந்து
கள்ளமுங் கொலையுங் கலந்துமே சிதறிமென்
கருவிளையின் மலரைவென்று

மைக்குங் கயற்கண்மட மங்கையரை யாடவர்ம
ணங்களித்தே மணக்கும்
வதுவைப் பெருங்கா ணங்கடொறு மணிமுரச
மாருதி ரட்டுமதிமேற்
றைக்குங் கொடிப்புரிசை சூழ்கமலை நகராளி
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ் தழைக்கவருள் கொண்டசத் தியஞானி
சப்பாணி கொட்டியருளே. (34)

மழுவுங் கொலைச்சூல முங்கரத் தேந்துமொரு
வரதனைப் பரதமாடும்
வானவனை வானவர்கள் பரவுகா சிபமுனி
வணங்கும் பிரானைமணிநீ
ளெழுவும் பருப்பதமு மனையபுய நான்கினு
மிளமதிச் சடைமீதினு
மிணர்...நறுந் தொடையு மிண்டையுஞ் சாத்திநின்
றேத்துமுகி லுழவருளுபொற்
கொழுவும் பசுங்குவளை மணநாறும் வயல்களுங்
கோகனக மலர்வாவியுங்
குனிதிரைப் பொருநையும் புடையுடுத் தோங்கவள
கொண்டற் குழாங்களோடித்
தழுவுந் தடஞ்சோலை தழைவேலை நகராளி
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ் தழைக்கவருள் கொண்டசத் தியஞானி
சப்பாணி கொட்டியருளே. (35)

சிலைமடுக் கும்புருவ வேடுவர் மடந்தையர்கள்
செந்தினை துவைத்திடிக்குஞ்
செங்கரத் தேந்துங் கரிக்கோ டிழைத்துத்
திருந்திய வுலக்கைதாக்க

விலைமடுக் குந்தடஞ் சினையின் பலாக்கனி
மிடைந்துபொற் சுளையழிந்தே
யினியபைந் தேனொழுகு குடகப் பொலன்கு
வடிழிந்துதிரு குரம்புமெற்றி

யலைமடுக் குங்கடல் கிழித்துச் சலஞ்சலமு
மவிரொளி வலம்புரிகளு
மடுசுறவு மகரமுந் திரிதிமிங் கிலமுமதிர்
புனல்கலக்கி யெதிரே

தலைமடு கச்செலுங் காவேரி வளநாட
சப்பாணி கொட்டயருளே.
தண்டமிழ் தழைக்கவருள் கொண்டசத் தியஞானி
சப்பாணி கொட்டியருளே. (36)

## ( வேறு. )

முருகுவிரி மலர்சிதறி முழுதுமற் புதமான
முத்திதரு பொற்றளிலே
முடிபடிய வுணர்வுகொடு முறைசெய் யர்ச்சனையோடு
முட்டற வுனைப்பாடுவோர்

பெருகுமத மகலவெழு பிறவிகெட் டிடநீடு
பெத்தமது விட்டோடவே
பிறையணியு மவுலியொரு பெரியநிட் டையையோது
பெட்புறு கொடைத்தாருவே

யருகுபெடை யடையவிடு மளவில்மட் டவிழ்பாளை
யைத்தருமுடத் தாழைமெல்
லலகுகயல் செருமியிற் கசையநெட் டுடல...டுத்
திலகுபொற் பூரவே

குருகுபயில் கமலைவளர் குலவு மூத்தமிழாளி
கொட்டியருள் சப்பாணியே
குலமும்வர குணமுமுயர் குரவசத் தியஞானி
கொட்டியருள் சப்பாணியே. (37)

நிலவுவிரி மதிபுனையு நியலர்தற் பரமேசா
நித்தியர் தமிழ்த்தூதனுர்
நெடியகதை வளைமுதல்வர் நிகரிலச் சுதர்நீல
நெட்டுட லடற்சூலனுர்

சுலவுதிரை விடமிடறு தோளமைத் தவர்நீதி
சொற்றவர் சிலைக்காமனுரை
துகளுறமுன் னுதலின்விழி சுடவெரித் தவர்தாள
துதித்தரு ளிசைத்தாரணு

பலவுமுதிர கனிபிதிர வுபடமிதித் தயனீடு
பச்சிள மடற்பூகநீள
பசியவிலை தருகதலி படர்பழக் குலையூறு
பட்டறமு சுத்தாவியே

குலவுமொரு கமலைவரு குழகநற் றவரே
கொட்டியருள் சப்பாணியே
குலமும்வர குணமுமுயர் குரவசத் தியஞானி
கொட்டியருள் சப்பாணியே. (38)

( வேறு. )

மடுநிறை யிற்படர் தாமரை மீதும
ணக்கும னைச்சேவல்
வளைபயி லப்பெடை யோதிம மாமென
மட்டிவி ருப்போடு

தொடுமள விற்பிறி தீதென நாணது
தொட்டுறு மெய்த்
தேவர் தொழுங்கம லைத்திரு மானகராள
த்துணைக்கொ டிருப்போர்கள்

கருநிகர் மைக்கணி நாரியாரசைக் கருத்து
ளடைத் தீசர்
கழலிணை யிற்பணி யாதளவேயறு கற்ப
மழற்சீறு

கொடுநர கிற்புகு தாதருள் போதக்
கொட்டுக சப்பாணி
கொடைமுகில் சத்திய ஞானவ ரோதய
கொட்டுக சப்பாணி. (39)

முடிபடர் சர்ப்ப சடாதர மோலியர்
முக்கணர் தக்கோர்மெய்
முதுபொரு ளிற்பகர் பாடலின் மாலிகை
மொய்த்த துணைத்தாளர்

தொடிபடர் மற்புய பூதர ரோதரு
துப்புநிறத் தோர்வேல்
சுருதியர் நற்சம யாதிப வாரிதி
சுற்று தடத்தாய

படிபடர் சொற்புக ழாபரணமகிழ்
பத்தரிடத் தேறு
பவம தகற்றிடு தேசிக வான்மழை
பற்றி நிரைத்தாடு

கொடிபடர் பொற்புரி சைக்கம லாலய
கொட்டுக சப்பாணி
கொடைமுகில் சத்திய ஞானவ ரோதய
கொட்டுக சப்பாணி, (40)

சப்பாணிப் பருவம் முற்றிற்று.

---

## முத்தப் பருவம்.

இழைகொண்ட நுண்ணிடை மடந்தையர்கள் விளையாடி
யிலகுபொற்பங் கடிக்கு
மிளநிலாப் படிகமண் டபமீது தங்கமிளி
ரின்னரிமணிச் சிலம்பார்
தழைகொண்ட சீறடியின் மெல்விர லலத்தகந்
தருசுவடு புனல்வாவிமேற்
றண்கமல மலரிற் செழுந்துகிர் கிளைத்தனைய
தன்மையை நிகர்க்கு மழியா
வுழைகொண்ட வெண்மதிய மொளிர்கனக கோபுரத்
துச்சியி னுரிஞ்சியோடு
முயர்நெடும் புரிசைக் கபாடந் திறந்திடி
னுலவுசெங் கதிரோ துங்கு
மழைகொண்ட பொழில்புடை யுடுத்தவர் கமலையாய்
மழலைவாய் முத்தமருளே
மாசிலா மணிதரும் ஞானதேசிக னினிய
மழலைவாய் முத்தமருளே. (41)

தேனைத் தொடுங் குதலையர் மடந்தையர் கலவி
தேவர்கள் திளைப்ப ரொருபால்
சிலைவேடர் தொண்டக முழங்கிடப் புதுவதுவை
செய்துகுழ லூடுபாயு
மீனைத் தொடுங்கரிய விழிமாதர் திதலைவன்
மென்முலை மணப்ப ரொருபால்
விரைகமழ் கருங்கா ரகிற்சுடும் புகையினெடு
மேகபடலம் பொதிதருங்
கானைத் தொடுந் துணர்ப் பொங்கரிற் பெடையனங்
களிமயில் கலக்குமொருபால்

கதிரையொரு கதிர்தழுவு தன்மையிற் கோபுரக்
கனகமணி முடியுயர்ந்த
வானைத் தொடும்புரிசை சூழ்கமலை நகராள
மழலைவாய் முத்தமருளே
மாசிலா மணிதரும் ஞானதேசிக னினிய
மழலைவாய் முத்தமருளே. (42)

சூலிற் பொருந்துமென் படரக டுளைந்துவெண்
சுரிமுகப் பணிலமலருந்
*தொள்ளியிற் புதுநீர் பாகப்பசுந் தேரை
துழனியிட் டேயரற்றுங்
காலிற்கொழுங் குமுத நீணெடுங் கொடிதொடக்
கன்றுபின் னிடவருந்திக்
கருநீல மேயாது பான்முலை சுரந்தொழுகு
கவரிகயவாய் கனைக்குஞ்
சாலிற் புரண்டு வரிவாளை வெடிபோதவெண்
டாமரையனஞ் சிலம்புந்
தடங்கரை குத்துங் குறுங்கெண்டை தவறியிடை
தாவமலர் வண்டலம்புஞ்
சேலிற் செழுங்குருகு செல்மருத நாடா
திருப்பவள முத்தமருளே
திருமாது வளர்கமலை வருமாசி லாமணி
திருப்பவள முத்தமருளே, (43)

மின்னற்படுங் கொண்டல் பொழிதரள மும்பசிய
வேய்வெடித்திடு தரளமும்
விரிதலைய மரகதக் காய்குலவு பைம்பூக
மிடறுகக்கிய தரளமும்

*தொள்ளி—சேறு.

பின்னற்படுந் திரைவெள்ளிப்பி நெடுவாய்
விண்டு பெய்திடு மணித்தரளமும்
பிரசச்செழும்பதும முகைவெடித்தே யொழுகு
பெட்புறு மொளித்தரளமுங்

கன்னற் குறுங்கண் டிறந்துசொரி தரளமுங்
கரிமருப்புதிர் தரளமுங்
கழனியிற் குவளைச் செழுந்தே னடைத்துநற்
கண்டெருவிடத் தழைக்குஞ்

செந்நெற்படுந் தரளமும் விலைசெய நின்பொற்
றிருப்பவள முத்தமருளே
திருமாது வளர்கமலை வருமாசி லாமணி
திருப்பவள முத்தமருளே. (44)

பிறைமணக் கும்பவள வேணியெம் பெருமான்
பெருக்கடலி னஞ்சமுண்டோன்
பிஞ்ஞகன் விடங்கப் பிரான்பரவை மனையிற்
பெயர்த்திரவு தூதுசென்றோன்

நறைமணக் குந்தெரிய லார்மணக் குங்ககன
நாகிளம் பரிதிமார்பன்
நந்தாத புகழ்வளவன் முசுகுந்த னெடும்வந்த
நாதனுயர் நற்கமலையான்

மறைமணக் குமகநலவ வைமணக் குங்குமுதம்
வாய்வடித் தினிதிசைக்கும்
வரமுதவு மாகம மணக்குமுத் திப்பதிக
மதுரமொழு கியமுத்தமிழ்த்

துறைமணக் குங்கனிச் சுவைமணக் குமுனது
துகிரில்விளை முத்தமருளே
தூயசிற் பரயோக நேயசத் தியஞானி
துகிரில்விளை முத்தமருளே. (45)

குழிக்குங் கிடங்கிற் படுஞ்சிலை திரட்டயுயர்
குடகதத் திரந்திழிந்து
கோளரித் தனியேறுபின் வரும்புகர் முகக்
குஞ்சரத் துடல்பிளங்
தழிக்குந் திறங்கருதி மீளா தடற்களிறு
மஞ்சியக லாதுவென்றி
யரசரை யடைந்தவர்கள் வெவ்விறலு மச்சமு
மடர்வென வடங்க வம்பைப்
பழிக்குங் கடுங்கதி பிடித்திழுத் தோடிநீள்
படுகரை யடக்கியப்பாற்
பழனம் பரந்துசெஞ் சாலிப் பசுங்குலை
பறித்துப் பறித்தசைத்துச்
சுழிக்குந் தடந்திரைக் காவேரி வளநாட
துகிரில்விளை முத்தமருளே
தூயசிற் பரயோக நேயசத் தியஞானி
துகிரில்விளை முத்தமருளே. (46)

## வேறு.

பருகும் விடப்பொற் களங்கறுப்பும் படர்செஞ்
சடையும் புயநான்கும்
படையா தொளித்து நார்வடிவம் படைத்துத்
தமிழொப்பி லாமணிக்குப்
பெருகும் புகழ்நன் மருகனெனும் பேருந்
தையல் பாகமுனி
பின்னே யுதிக்க முன்னுதித்த பெருமா
னென்னும் பேருமுள
முருகு முலகந் துதித்தேத்தி யுரைக்க
விசைந்தா யழகுதரு
முருவு மருவுங் கடந்த சுடரொளியே
இசைவண் டுழுதுழக்கு

முருகு விரியு நறையிதழி முதல்வா
முத்தந் தருகவே
முத்தர் தொழுஞ்சத் தியஞானி
முத்தந் தருக முத்தமே. (47)

ஊடும் பெடையோ திமந்திருத்தி யுள்ள
முவப்ப மணந்துநறு
வூற்றுங் கமல மலர்மனையி னுறங்குஞ்
சேவலனஞ் சுரும்பர்
பாடும் பழம்பாட் டிசைகேட்டுப் பரிதி
யுதிக்க விழிவிழிக்கும்
பழனந தோறு மள்ள ருழப்
பகடுதுரத்து மொலிக்களமாக்
கூடுங் குருகு துயில்நீங்குங் குடகா
விரிநீர் வளநாடா
குனிக்குந் திரைமா னிலம்பரம்பிக் கொழுந்து
விடுத்துத் தருவுலகு
மூடும் புகழ்த்தென் கமலைநகர் முதல்வா
முத்தந் தருகவே
முத்தர் தொழுஞ்சத் தியஞானி
முத்தந் தருக முத்தமே. (48)

வாளுங் கணையும் பழித்தவிழி மடமா
னிமய மளித்தருளு
மடந்தை மணக்கு மணவாளன் வரநான்
மறையு மயிற்பரிச்செவ்
வேளும் பரிதிச் சுடர்த்தேவும் விரும்பிப்
பரவும் புள்ளூரன்
வினைதீர்த் தடியார் தமையாள்வோன் விரைச்செங்
துணைச் சரணென் [கமலத்

ஞளுங் கருத்தி லினிதிருத்தி நறைநாண்
மலரா லருச்சித்து
நாவாற் றுதிக்கும் பெருமானே நந்தாத்
திருமா தவம்புரிய
மூளுங் கமலைத் தமிழ்நகர முதல்வா
முத்தந் தருகவே
முத்தர் தொழுஞ்சத் தியஞானி
முத்தந் தருக முத்தமே. (49)

## ( வேறு. )

சதுமறை யுற்றபு ராதன நீற்றினர்
சடசம யத்தினுமே
தடையற நிற்பவர் வீரபராக் கிரமர்
தக்கன் மகத்திகலார்
பொதுவி னிடத்தினி னுடிய கூத்தினர்
பொற்கிரி விற்படையார்
புகலி முனிக்கொரு தோணி நடாத்திய
புத்தமுதிற் பொலிவார்
விதுமுடி வைத்தவர் வாணுத னேத்திரர்
மெய்த்தவர் கைப்பொருளார்
விசய னடித்திடவே சிரமேற் றவர்
மிக்கம லர்ப்பதமே
முதுதமி ழிற்புகழ் நீதசீ ராக்கிய
முத்த மளித்தருளே
முகினிகர் சத்திய ஞானகு லோத்தம
முத்தம ளித்தருளே. (50)

**முத்தப் பருவம் முற்றிற்று.**

## வாரானைப் பருவம்.

அஞ்சப்பொ லன்குருகு செங்கால் மடக்குருக
லங்குஞ் சிறைக்குருகு
நீளாரல் பார்க்குங் குரண்டங்கம்புள் வெண்ணுரை
யணிவகுத் தேயிருக்குங்
கஞ்சத் தடங்குமுத வாவிமணம் வீசுசெங்
கழுநீர்க் கிடங்குசாலிக்
கழனிதிகழ் பணைமருத வேலிசூழ் பைம்பொழிற்
கமலைப்பதிக்கு முதல்வர்
செஞ்சொற் றமிழ்க்கூட வரவரிய நான்மறைச்
சிரமீது வீற்றிருக்குஞ்
செம்பொருள் வடித்துத் திரட்டுமா கமவாச
சிந்திக்கு மடியவரிலென்
வஞ்சக் கொடும்பாவ மனமீதி லடிவைத்த
மதுரவா சகன்வருகவே
வளவர்வள நாடவர் சிவசமய பரிபால
மாசிலா மணிவருகவே. (51)

கண்ணிற் சிறக்குமா கமமுணர்ந் தினியதச
காரியந் தமிழினிற்செய்
களந்தைவரு ஞானப்பிர காசனுலகத் தவர்கள்
கருதரு சிவப்பிரகாசம்
பண்ணிற் சிறக்குமுரை யெழுதுமன் பூரவனி
பரவுஞானப் பிரகாசன்
பகரரிய விருவருந் தலைவணங்கக் கருணை
பாலிக்கு மொருகுரவனே
எண்ணிற் சிறக்குமுயர் முத்தலத்தினு முதன்மை
யிதெனவெடுத்திசைக்க
வெவ்வுயிர்க ளெவ்வுரு வெடுக்கினுஞ் சாரூப
மெய்துவிக்கும் புதுமைசேர்

மண்ணிற் சிறக்கும் புகழ்க்கமலை நகர்மேவு
மானபூடணன் வருகவே
வளவர்வள நாடவர் சிவசமய பரிபால
மாசிலா மணிவருகவே. (52)

இடியிட்ட துவசக்கொழுங் கற்பகத் தரசிறைஞ்சு
மொருபூசை யின்னீ
ளிண்ரிதழி மாலையுஞ் செஞ்சடையு மாடவொளி
யிலகியமணித் தண்டுதொட்
டடியிட்ட பேரசைந் தாடாது மெய்யசைந்
தாடும்பிரான் றனக்கே
அபிடேக மளவறு நிவேதன .........தத......கொா
முனிபரவு பாதர்
கொடியிட்ட கோபுரமு மதிதடவு புரிசையுங்
குடுமிகிளர் திகிரிவரையுங்
கோநகர் கடக்குநெடு மேருவுநிகர்க்கு மிசை
குலவுதிரு வாரூரனே
வடியிட்ட மறைஞான வமுதமுண் டொழியா
மகாசுகோ தையன்வருகவே
வளவர் வளநாடவர் சிவசமய பரிபால
மாசிலா மணிவருகவே. (53)

விட்டேறு சுடரிலை முகங்கறுக்குங் கரியவிழி
மடந்தையர்கள் பயிலுமெடையிற்
செவ்வழிமுறுக்கு மாடகநல்யாழ் மெல்விரல்
குழைத் திசைக்கப்
பட்டேறு கிளரொலிக் கசுணச் சிறைப்பறவை
படியுமவர் முகமதியெனப்
பார்த்துச் சகோரங்கள் பையயவருந்துவர்ப்
பவளவிதழ் விண்டுநறவங்

தொட்டேறு பணிமொழி மிழற்றக் கருங்குயிற்
றொழுதியிடு மியல்விரும்பித்
தோகைக் குழாங்கள் கூடும்பிடியி னடையிடுந்தொறு
மெகினங்கள்சூழ
மட்டேறு பொழில்புடை யுடுத்துவளர் கமலைவாழ்
மதிமனோ கரன்வருகவே
வளவர் வடநாடவர் சிவசமய பரிபால
மாசிலா மணிவருகவே. (54)

அந்தக்கொடுங் கதிர்தடுக்குந தடங்குடுமி யடருந்
தமிழ்ப் பொதியமீ
தடையுங் கமஞ்சூற் கரும்புயல் பிடித்தழித்
தருகிற் றதும்புதிவலை
சிந்தப்பிழிந் துதரு சீதளமளைந் துவெண்
டிரைதிரைக்கும் பொருநைநீர்
சிதற்றத்துலங்குங் குறுந்த வளிமுகந் தினிய
செந்தே னொழுக்கிவிரியுஞ்
சந்தப் புதுப்போது தடவிப்புகுந்து பைந்
தனைநறுந் தாதெடுத்துத்
தண்டாதுவேனிற் கடுங்கால வெப்பத்
தழற்கொடை மாற்றிமெள்ள
மந்தக்கொழுந்தென்றல் வருகமலை நகர்மருவு
வனசமார் முகன்வருகவே
வளவர் வளநாடவர் சிவசமய பரிபால
மாசிலா மணிவருகவே. (55)

( வேறு )

முடவும் படத்துப் பணியேந்து மூரியுந்திரைவா
ரிதியுலகமுழுதும்
புரக்கத் தருவேந்தன் மூரித்திருநாட்
டப்புறத்து

நடவுந் திருவஞ்செழுத்து முறைநடக்க நடைகற்றிடு
மூகிலேநாளும்
பணிவோர் வினையகல நகைவெண்டிருநீ
றளிப்பவனே
கடவும் பரியும் பரியிறுக்கிக் கட்டுங்கொடிஞ்சித்
தடந் தேருங்
கடக்க வழிபார்த் தாயிரஞ்செங் கதிரோன்
மறுக்கக் கலைமதியந்
தடவும்பொதியத் தமிழுணருஞ் சைவப்பெருமாள்
வருகவே
சகலாகம சத்தியஞானந் தழைக்குந்
தருவே வருகவே. (56)

நாளகமலத் திருவுந்தி நறைப்பூந் துளபப் பசும்படலை
நாமத் திகிரிப்
பொருவுநிகர் நறுந்தாதகிப் பைந்தொடை
மார்பன்
வாளக்கிரிக்கு நடுநிமிரு வரைக்குமளந்து வளர்கீர்த்தி
வளவன்
திருமண்டலந் தனக்கோர் வாய்த்த மவுலியெனும்
பருவக்
காளக்கனந் தோய்பொழிற்காழிக் கருணைச்சிறுவ
னகங்களித்துக்
கருதிச்சுருதி வடித்தினிய கனிவாய்திறந்து
பகர்ந்தருளுந்
தாளப்பதிகத் தமிழ்க்களிக்குந் தருமப்புயலே
வருகவே
சகலாகம சத்தியஞானந் தழைக்குந்
தருவே வருகவே. (57)

*சீரிற்கவிதை பொழிமேகஞ் சிந்தா மணியை
யனைய வன்பொன்
செழிக்கும் விசயை வளநகரான் றிருமாமடந்தைக்
கொருகோயில்

வாரிற்பணைத்த முலைவாணி மாறுதிருக்கு
மலர்ப்பீடம்
வையமுழுது மளித்தாலு மறந்துநரனைத்
துதியாதான்

பாரிற்...............வழுத்து சிதம்பரநாத னின்பங்கயத்தாள்
பரவுந்தொழும்ப னுனக்கமுதம் பழுத்த தமிழ்
மாலிகை நறும்பூந்

தாரிற்புனைய வந்தனன் மெய்த் தவருக்
கரசே வருகவே
சகலாகம சத்திய ஞானந் தழைக்குந்
தருவே வருகவே. (58)

கணிக்குமளவி னெடுங்காலங் கற்பங்கடந்த
கண்ணுதலின்
கருதவரிய தொருநிட்டை காட்டிமகிழ்ந்து
நீபணிக்கும்

பணிக்கு முதன்மைத் திறம்பூண் டுன்பாதம்
பரவுந்திருத் தொண்டர்பரம
கதிவீடடைவ ரெனப்பகர்வ துணரி
னதிசயமோ

பிணிக்குவறுமைக் கொடுந்தீக்கும் பெரிதுவருந்தி
யிழிதகைமை
பெற்றோரெனு நின்னுமம் பேசிலவர்கள்
பிறப்புறுநோய்

தணிக்குமருந்தே யெனவுலகஞ் சாற்றும்பெருமான்
வ்ருகவே
சகலாகம சத்திய ஞானந் தழைக்குந்
தருவே வருகவே. (58)

விரிக்குஞ் சுடர்ச்செந் தழற்பொலிந்து விளங்கா
தொழிக்குந் திருநுதற்கண்
வெளிவந் ததிற்செம் மணிச்சுடிகை மிலையவருக
வளர்தடந் தோட்
கிரிக்குங் காந்த வுரகவணி கிளரத்தெரிவ
தெனச்சிவந்த
கிரணமென வப்புயங்கபடங் கெழுமப்புனைய
வருகவொளி
பரிக்குங்களத்தின் மறைந்தவிடம் பரந்ததென
விந்திரநீலம்
பதித்துத்திருத்து கண்டசரம் பரிந்துவனைய
வருகவரந்
தரிக்குந்திருவஞ் செழுத்துணருந் தமிழாபரண
வருகவே
சகலாகம சத்திய ஞானந் தழைக்குந்
தருவே வருகவே. (60)

**வாரானைப் பருவம் முற்றிற்று.**

---

# அம்புலிப் பருவம்.

மல்லற் பரம்புலக விருளறுத் தருள்வைநீ மன்னு
மிவனுமுலகமே
மாறுது தொன்றுதொட் டுறையுமா ணவமெனு
மாயை யிருளைத்துரப்பன்
சொல்லற் கருந்துளி துளித்தொழு கின்றதொரு
சுவையமுத முண்டுனக்குத்
துங்கவர விதமுதவு மிவனுக்கு மெஞ்ஞான
தூயவமுதுண்டு கண்டாய்
அல்லற்படுத் துதகையுரி புதுநறுமழை யிறைத்திடு
மலர்ச்சோலைசூ
ழினியமுத் தமிழ்வேளை வளநகர் வழுத்துமுகி
லெழிலிய னிருவினையகற்றி
யல்லற்கொடும் பிறவிதீர்க்குமிரு சரணனுட
னம்புலி யாடவாவே
யருள்வைத்த தாருநிகர் தருசத்திய ஞானியுட
னம்புலி யாடவாவே. (61)

கூறுங் தனுத்தளர்ங் திரவடையை நீயிவன்
குவலயத் திரவுதீர்ப்பன்
குறைபடுங் கலைகள்பதி னுறுண்டுனக் குரிமை
குறையாது நாளுநாளு
மேறுங் திறற் கலைகளறுபத்து நான்குண்
டிவன்றனக் கிவையுமல்லா
தெண்ணரிய பலகுவளை மாலையுண் டுன்பா
லிருப்பதிரு குவளைகண்டாய்
நீறுங் திறற் கண்டிகைத் தொடையு மிலையுமொருநிமல
னிவனுக்கு நீயே
நிகரில்லை வங்கக் கதிர்த்திகிரித் தடங்தோள்நெடும்
பசும்புரவி தகைசென்

ூறும் பொழிற் கமலைவளநகர் முதல்வனுட
னம்புலி யாடவாவே
யருள்வைத்த தாருநிகர் தருசத்திய ஞானியுட
னம்புலி யாடவாவே. (62)

கூடுந் தமிழ்க்கூடல் வளநகரி னொருவழுதி
கூனிமிர்த்திடு நீறுரின்
கூனிமிர்த்திடவும் புகழ் பெருகு மயிலையிற்
கொடிய விடநாகமுண்ட
வாடுங் கொடித் தளிரிடைப் பேதையுயிர்
மீட்டமந்திரப் பதிகமுன்னை
வாளரவ முண்ணு நாள் வாழ்விக்கவு
மிந்தவரமுனி வனுக்குண்டுகா
ணூடும் பெடைச் சுரும்பினிதொடு மருந்தமுன்
னூட்டி வண்டிசை முரன்றே
யுழுதுழு துளக்கிக் கொழுந்தேறல் வாய்மடுத்
துலவிடுமலர்ப் பொழில்கள்சூ
ழாடுங் கொடிப் புரிசைவேளை நகரளானுட
னம்புலி யாடவாவே
யருள்வைத்த தாருநிகர் தருசத்திய ஞானியுட
னம்புலி யாடவாவே. (63)

தூளும்பாற் பொடியு மடையப் புரட்டிவெண்
டுளிதுளித் தமுதமொழுகித்
தோயத்தரைத் தலத்திடை யிட்டு நின்னைத்
துவைத்திழுத் துத்தேய்த்தபொற்
றூளுஞ்சடா மவுலி யெம்மானு மிவனுளந்
தன்னிற் பொலிந்திருக்குந்
தன்மைநீ யறியாத தன்று முன்போலத்
தடிந்திடா தண்டமுட்டி

நீளுந் தடம் பொழிலுடுத்த வயல்வேலிசூழ்
நீர்நாடன் வேதவேள்வி
நீங்காத கமலைவள நகராளன் மனமுருகி
நேசிக்குமடியர் துயர்தீர்த்
தாளும் பெருக்கு நிறையருணம் மகோததியுட
னம்புலி யாடவாவே
யருள்வைத்த தாருநிகர் தருசத்திய ஞானியுட
னம்புலி யாடவாவே. (64)

மடக்குந் தடந்திரைப் பாலாழி நெடுமுகடு
வாய்த்தநின் னொடுபிறந்த
மலர்மணிப் பொற்கோயில் மடமங்கை மங்கல
வலம்புரிவளைக் கழுத்திற்
கிடக்கும் பசும்பொன் னிழைத்திடுந் திருநாண்
கிளைத்தொளி பரம்பவைத்த
கேடிலாக் கமலைமா நகரிது வேவாக்குங்
கிடைப்பதரி தரிதுவெம்போர்
துடக்குஞ் சிலைக்குறவ ரிதணடுத் தடுகரித்
துடியடிக் கன்றுருட்டிச்
சுழியிற் கொடும்புலி சுருட்டிக் கருங்கலைகள்
சுற்றவிட் டாழியுவர்நீர்
அடங்குந்திரைப் பொன்னி வளநாட னிவனுட
னம்புலி யாடவாவே
யருள்வைத்த தாருநிகர் தருசத்திய ஞானியுட
னம்புலி யாடவாவே. (65)

வலத்திற் றிருத்தகு மனக்கொடி யுயர்த்தகொடை
மாசிலாமணி யெனப்பேர்
மலர்தலைய வுலகத் தினெவர்களு முரைத்தினிது
வாழ்த்துவர்கள் வாழ்வுதரும்விட்

புலத்திற் படர்ந்துமுனை யிழிதகைய மாசுபெறுபுன்மை
யிரவின னென்பர்காண்
பொன்னொடு பரவவரு பொன்னிவள நாடிது
புகழ்ப்புலவ ரிங்குமுண்டுன்
குலத்திற் பிறந்த தமிழ்வரகுணனு மிவண்வந்து
குறைதவிர்ந் தனனிவன்பாற்
கூடில்நின் குற்றமு மகன்றிடா தன்றுமூங்
குளிர்புனற் கழனிதொறும்வா
ளலத்திற் கொழுங்கமலம் விரிகமலை நகரனுட
னம்புலி யாடவாவே
யருள்வைத்த தாருநிகர் தருசத்திய ஞானியுட
னம்புலி யாடவாவே. (66)

புரத்திற் பரப்பிநெடு வையக மமைத்ததொரு
பொற்றே ருருட்டியழலும்
பொங்கெரி மடுத்துப் புகைப்படல மூடவொரு
புன்னகை புரிந்தபெருமான்
கரத்திற் றிருந்து மிளமானு மழுவும்வைத்த
கந்தபுரி மருவுமமலன்
கைவந்த தெய்வ மிவனுளநினைந் தாலுனது
சயரோகமுங் குட்டமும்
வரத்திற் பணிந்துடல் வருந்தாது தீருநினை
வருகவெனவே யழைத்தால்
வருவதே கடனிழல் சுழித்துத் துழாவுமழை
மதகரி மருப்பறுக்கு
மரத்திற் கறங் கொலிமுழங்கு மாரூரனுட
னம்புலி யாடவாவே
யருள்வைத்த தாருநிகர் தருசத்திய ஞானியுட
னம்புலி யாடவாவே (67)

முடிக்கப் பணைத்தமுலை வயன்மாதர் செங்குவளை
முகையெடுப் பக்கலைந்து
முழுகுந்தடத் தெருமை கரையேற மடிமுறுகு
மலைகுழக் கன்றுகவ்விக்

குடிக்கப் பெருக்கெடுத் தசையுநெடு வாய்க்கடை
குனித்தொழுகு மினியவெண்பால்
கோலமடவன்னங் குதட்டுமிள வெயில்கண்டு
கோகன மென்போதுவாய்

பொடிக்கத் துளித்துவழி செந்தேன் கருங்கயல்
விருப்பொடும் பருகுநீரில்
வெட்டித் தெறிக்குமிள வெள்ளிறவு புள்ளுணும்
வெகுண்டுவரி வாளைவாலா

லடிக்கச் சினைச்சங்க மதிர்பொருநை நாடனுட
னம்புலி யாடவாவே.
யருள்வைத்த தாருநிகர் தருசத்திய ஞானியுட
னம்புலி யாடவாவே, (68)

படைக்குந் துணர்க் கமல பீடிகைச் சதுமுகன்
பங்கயக்கர மடைந்தோர்
பலவிதப் படுசனன மீளவு மடைந்திடுவர்
பழவினைத் துயரனைத்துந்

துடைக்குந் திறற்குரவ னிவன்மலர்ச் சேவடித்
துணையடைந் தோர்பிறப்பிற்
றேய்ந்திடா ரெனவுலக முழுவதும் புகழிற்
றுதித்திடுந் தன்மையன்காண்

புடைக்குங் குரும்பைப் பசுங்களப வளநாடு
புணர்முலைக் கடைசியர்வளைப்
பொற்கர மடுத்துவெண் டரளமணி வாரிவண்
புனல்சுழித் தோடுமடைவாய்

அடைக்குங் கரும்பழன வேலிநீர் நாடனுட
னம்புலி யாடவாவே
யருள்வைத்த தாருநிகர் தருசத்திய ஞானியுட
னம்புலி யாடவாவே. (69)

துளக்குஞ் சுருங்கிடைய னுங்கக் குறத்தியர்
தொடிக்கரம்வளைத் தேனல்வீழ்
சோலைப் பசுங்கிளி விலக்கியெறி வயிரமுஞ்
சுழல்விழிச் சிங்கமேற்றிப்

பிளக்குங் காடாக்கரியின் மத்தகத் திருகொடு
பெய்திடுசுடர்த் தாளமும்
பின்னப் படுத்திப் பாரகமேழ் மூடும்
பிழம்பிருட் படலம்விரிய

விளக்குந் தழற்கதிர்க ளோராயிரங் கொண்ட
விண்ணெழுந் தபனனிரத
வெம்புரவி நீளும் பொலன்குடுமிய சசிபடர்
விரிவைக் குளம்படியெடுத்

தளக்குஞ் செழுந்தமிழ்ப் பொதியப் பொருப்பனுட
னம்புலி யாடவாவே.
யருள்வைத்த தாருநிகர் தருசத்திய ஞானியுட
னம்புலி யாடவாவே. (70)

## அம்புலிப் பருவம் முற்றிற்று.

## சிறுபறைப் பருவம்.

நாடரிய முத்திவெளி படர்மழை குழைக்குழல்
நாரியர் தனந்திளைக்கு
நற்போக மெனவுரை யெய்துறப் போதமுறு கொடுமை
நவில்சமய வாணமிடியப்

பாடரிய பெருமைதரு கடவுளில்லா தினிதுபண்ணிய
திறற்கருமமே பரமுத்தி
தருமெனுஞ் சமயப் பெரும்புரிசை பலதுக
ளெழச் சிதறிடக்

கூடரிய நெறியெனத் தலைமயிர் பறித்துமுக் குடைநிழற்கீ
ழிருந்தோன் குரைகழற்
கழல்வருத்துஞ் சமணர் சமயவெங் கோட்டை
பொடியத் துவைத்துத்

தேடரிய நாதப் பெரும்பறை முழக்குமுகில்
சிறுபறை முழக்கியருளே.
சித்தசி த்துணர்போதம் வித்துசத் தியஞானி
சிறுபறை முழக்கியருளே. (71)

தூணேறு சிங்கத் தொழுங்கரட மதகரித்
தோலுடை யுடுத்தகோனைச்
சுடரேறு முத்தலைப் படையானை நறவச்
சுரும்பேறு மிதழியானைப்

பூணேறு களபமணி புளகப் படாமுலைப்
பூவையொரு பங்காளனைப்
பொன்னேறு செஞ்சடைப் புனிதனைப் புனிதமுறு
புகழேறு புள்ளூரனை

நாணேறு பொற்கழைச் சிலைவேளை வென்றவனை
நாடிப் பராவுபுயலே
நகையேறு தாளங் குடக்கழுத் தீனுமிள
நாகேறுகமுக மெல்லாஞ்
சேணேறு திங்கட் கொழுந்தேறு வளநாட
சிறுபறை முழக்கியருளே
சித்தசித் துணர்போதம் வித்துசத் தியஞானி
சிறுபறை முழக்கியருளே. (72)

வந்தினைப் பற்றிநிரை மணியொளிரு செஞ்சூட்டு
வரியரவம் வாய்நுகரும்வீழ்
வாடைக் குறுந்துளிமழைத்தாரை சாதகமுமக்கு
மவன்சார [மாதாதம்]
பந்தினைத் தொட்டுக் கழங்கெடுத்தம் மனைபறித்து
வெண்மணனம் மனையுலாயப்
படருந் திரைப்பொன்னி நீர்புழைக்கை மொண்டு
பாய்மதக் களிறு தேக்குஞ்
சந்தினைச் சுட்டுவளர் கவடுபடுகாரகி றடிந்துவெங்
கரிமருப்பாற் றரைகிளைத்
துழுதுழுது புழுதிசெய் தடல்வேடர் சாரலின்
விதைக்க வளருஞ்
செந்தினைக் கதிர்கிளியு ணுங்குடக வெற்பனே
சிறுபறை முழக்கியருளே.
சித்தசித் துணர்போதம் வித்துசத் தியஞானி
சிறுபறை முழக்கியருளே. (73)

தூங்கும் புனற்கரிய முகில்படியு மலயஞ்
சுழித்துலா வருகுசூழுஞ்
சுடுபுனத் தழலைவெண் டிவலைவிட் டாற்றியதிர்
தாரியம்பட முழங்கி

வீங்குந் தடம்புயத் தெயினரடு கொலைபுரியும்
வேட்டம் பலிக்கவைக்கும்
வெம்புலிப் பார்வையு மறிப்பார்வை யுந்தள்ளி
விண்ணந்தொடும் பொழிலசைத்

தோங்குந் தவத்துவர முனிவரெண்ணில கோடி
யுனடியிடந் தடவியவர்களோ
மப் பெருங்குண ...........மளாயக்
குசையொடுஞ் சுருக்கோடவிட்டுத்

தேங்குந் திரைப்பொருநை சூழ்வேளை நகராள
சிறுபறை முழக்கியருளே
சித்தசித் துணர்போதம் வித்துசத் தியஞானி
சிறுபறை முழக்கியருளே, (74)

கானிருக்கும் பசுங்காவ கந்தோறு முனிவர்
கழறுமறை யாகமங்கள்
கணிகையர் நடனமிடு சோலைதொறு மன்னவர்கள்
கற்றிசைக்கும் பாதநூ

லூனிருக்குங் கதிர்ப்படை யயில் கடந்துகுழை
யூடுருவியோடி மீண்டே
யொழுகுங் கொடிக்கு மறிந்திளைஞ ராருயி
ரொடுக்கிக் கவர்ந்தருந்து

மானிருக்குங் கலகவரி விழிமடந்தையர்க
ளமவுணரொடு கூடுமின்ப
மதன்கலையவர்க ளுறைமாளிகை தோறுங்
கற்றுமாறாது கிளிகளுளுந்

தேனிருக்குஞ் சொன் மிழற்றும் வளநாட
சிறுபறை முழக்கியருளே
சித்தசித் துணர்போதம் வித்துசத் தியஞானி
சிறுபறை முழக்கியருளே. (75)

( வேறு. )

புத்தழலரி பொங்குசினத்திரி சூலப்பொருபடை
தோள்வைத்துப் புவனப்
பாவைகண் முழுது மெரிந்து பொடிந்தெழ
வேமூடுங்
கொத்தழனின் றிருகைச் சதியொத்தெழு கொட்டோடு
வட்டமிடுங் கூளி
கணத்தோடு மாடல் விளைத்திடு குன்றம்
வளைத்தவர்செங்
கைத்தழல் கொண்டமுடிச் சடையர் கழற்கினி
தன்புசெய்யார்
கடுமறலிக் கிரை யாகுவ ரென்றெழு
காசினி யோருணர்
முத்தழல் வேள்வி வளந்தரு நாடன்
முழக்குக சிறுபறையே
முத்தியை யருள்புரிசத் தியஞானி முழக்குக
சிறுபறையே. (76)

மைப்பொழுதுந் தெரியாது பனித்தியன் மாதமோர்
மும்முறையு மாருதோடி
வழங்கவு நாடோறு மனுநெறி பெருகிடவு
மெப்பொழுதுங் கவி நாவலர் செஞ்சொ
லிசைத்தமி ழோதிடவு
மிளமயி லடிபுரை பாசடை நொச்சியி
னிணர்விரி பூவுதிரு
மப்பொழுதுஞ் சிவனன்ப ரடைந்திடிலன் னம்வழங்கிடவு
மதிகவ ரம்பெறு
கமலையுறைந் தவவந்தணர் சந்திதின
முப்பொழுதும் பயிலுந்திருநாட முழக்குக சிறுபறையே
முத்தியை யருள்புரி சத்திய ஞானி
முழக்குக சிறுபறையே. (77)

கொழுதுஞ் சிறையறி நறவுகு மட்டிக்
குடியா நிற்குமலர்க்
கொன்றைத் தொடையினர் துளபக் கருமுகில்
கூறும் வராகமதா

யுழுதுந் தெரிதற்கரிய பதத்தின ருண்மைத்
தனியோக முலகினடத்திய
சற்குரு தேசிக வுற்பல மைப்புயலே

வெழுதுந் திருவாகமும் பயில்வுற் றெழுதா
நான்மறையு மிணையிலராகிய
சைவ தவத்தின ரெண்ணரும் வேதியர்கள்

முழுதும் பகர்கமலைத் தமிழ் நாடன்
முழக்குக சிறுபறையே.
முத்தியை யருள்புரி சத்திய ஞானி
முழக்குக சிறுபறையே. (78)

கனிபடு பணிமொழி மடவியர் சுகமிகு
கலவிதிளைத் தயருங்
கபடனை வினைபுரி புலன்வழி யொழுகு
கருத்தனை வெனைவானப்

பனிபடு மதிபுனை முடியின ரடியவர்
பண்பினமைத் தாழ்வோன்
பகலினு மிரவினு மனநிதி வறிஞர்கள்
பரவவழிப் பவனமேய்த்

துனிபடு பெடைதொடர லவனதடியிடு
சுவடுறுதுறை தொறுஞ்சுரிவளை
கமட மொடடி படம சறிகள்சுற
வொடுபுறம் வீழக்

குனிபடு திரைவளை குவலய குருபர
கொட்டுக சிறுபறையே
குணபதி சததிய ஞான கலாநிதி
கொட்டுக சிறுபறையே. (79)

கிளிதரு மிசையென் வனிதையர் பேசுவர்
கிளர்வன முலைமடவார்
கிஞ்சுகவாய் மொழியென்ன வளர்த்திடு
கிள்ளைமிழற் றிடும்வெள்

ளொளிதரு தூவலன நடையென்ன வொதுங்குவ
ரன்னவர்க
ளோலிடுந் தண்டைச் சரணடையென மட
வோதிம நடைபயிலுங்

களிதரு பெடைமயில் நடமிட வழகிய
கலாபத்தோகை மயில்கண்டு
கருத்திலுவப்புறு சோலைக் கமலைத் திருநாடா

தெளிதரு சத்திய ஞான குணநிதி
சிறுபறை கொட்டுகவே
சிவபுர நகர்வரு தவமுனி வரர்பதி
சிறுபறை கொட்டுகவே. (80)

**சிறுபறைப் பருவம் முற்றிற்று.**

---

# சிற்றில் பருவம்.

முறத்தின் முறையிட் டிலகுநிலா முத்தங்கொழித்துத்
தாம்பிறித்து
முதிரின்விளைந்த செஞ்சாலி முடியத் தடிந்த
கொற்றினைக்கு
மறத்தினெடுங்கட் கடைசியர்கள் வாரியளப்ப
மடியேற்று மள்ளர்களிக்கு வளநாடா
மறையின் சிரத்தில் வதிவதுபோ
னிறத்தினெழுந்த திதலைமுலை நிலமாமடந்தை மவுலியென
நீங்காதுறையு நெடும்புற்றி
னியலன்குடிபுக் கிருக்குநெறி
யறத்தின் வடிவாங் கமலைநக ரமுதே
சிற்றி லழியேலே
யழியாப்புகழ்ச் சத்தியஞானி யளியேன்
சிற்றி லழியேலே. (81)

எடுக்குந்தகை யதத்துவங்க ளீராறிருபத் தொருநான்கு
மியற்றி யமைத்த நின்னடியார்க்
கெய்து மனையுன் கிரணம்பணி
படுக்குங்கழற் பொற்பதந் தொட்டாற்
படைக்கப்படுவ தன்றெனவாம
ரிந்தோர் பூத்ததிளைத் தொருவர்படரா திணங்கச்
சுவரெழுப்பித்
தடுக்குந் தரத்ததிதுதுடைக்கிற் சமைக்கவருமோ
யாமறியேந்
தாமக்கவிகை நெடுமுடிசெந் தபனனொளி
மண்டலந்தடவி
யடுக்குந்தடந் தேர்திகழ்கமலை யமல
சிற்றி லழியேலே
யழியாப்புகழ் சத்தியஞானி யளியேன்
சிற்றி லழியேலே. (82)

கூடற்பதியிற் கழுவேறெண் குறைத்தவமணர்
குலமனையோ
கூறுஞ்சவுத் திராந்திகன் பொய்க்கொடி யமனையோ
நாடோறு
நீடற்கரிய மாத்தமிக னீங்காமனையோ வறிவறியா
நிகண்டவாதி பயில்மனையோ
நீடுஞ்சிவாத்து விதிமனையோ
வீடற்பமுமுற் றுணராது விளம்பும் பிரபாகரன்
மனையோ
விதமாய்ப்பெறவும் பரசமய மேவும்பதகா
வியன்மனையோ
வாடற்பரமன் சமயதவத் தரசே
சிற்றி லழியேலே
யழியாப்புகழ் சத்தியஞானி யளியேன்
சிற்றிலழியேலே. (83)

கொடித்தா மரையோன் வகுத்தெழுதுங் கொடியபிறப்பி
லெழுத்தழியக்
கும்பிட்டிறைஞ்சு மடியவர்கள் கோலக்கரிய
நறுங்குஞ்சி
முடித்தா தரைக்கை வைத்தாளு முறைபொற்பவள
முளையொடித்து
மூட்டுந்தழ லிட்டமளவிற் குமுதிராக் கரும்புபிளந்
தடுக்கிக்
கடித்தாமரையுங் கழுநீருங் கறியேதிருத்திச்
சிறுதூதைக்
கலத்திற்றரள வமுதெற்றிக் காட்டுமணல்வெண்
மனைத்தலையி
லடித்தா மரைவைத் தெங்களைவந் தாள்வாய்
சிற்றி லழியேலே
யழியாப்புகழ்ச் சத்தியஞானி யளியேன்
சிற்றி லழியேலே. (84)

முதிருங் குலைநெட்டிலைத் தாழைமுற்றும்பசிய
முப்புடைக்காய்
முசுக்கை தடவிப் பறித்தெறிய மூரித்தகட்டி
னடைவாழை
யுதிருங் கனிகள் கடையர்சிறு ரோடிப்பரந்
தெரிந்தெடுத்தே
யுண்டுகளிக்குந் திருநாடா வொழுகும்புதுநீர்
குடைந்தாடும்
பிதிருஞ் சுணங்கி னிளமுலையார் மின்னற்குழல்விட்
டவிழ்த் துதறப்
பிரசச் சிறுசண் பகமலரும் பிச்சித்துணரு
மிடை மறைக்கு
மதிருந் திரைக்கா விரியாற்றுக் கதிபா
சிற்றி லழியேலே
யழியாப்புகழ்ச் சத்திய ஞானி யளியேன்
சிற்றி லழியேலே (85)

சேற்றுக்கமல முகைவெடிப்பச் செவ்வாய்க்குமுத
முகங்கூம்பச்
சிவந்த கதிர்வந் துதயமெழத் தேவர்கடன்க
ளினிதாற்றி
வீற்றுக் களிப்பி னுடனிருக்கும் வேதத்தலைவர்
மலர்க் கரத்தின்
வேந்தர்பல தானமுங் கொடுத்து விடுக்குங்குளிர்
நீரொழுகிப்பே
ராற்றுப்பெருக்கி னழுருடி யானைவழுக்கப் பரிகடவா
வணிமா மறுகி னாரூரா
வாடற்பவுரி புரிந்தாற்றி யீடறுப்பப்
படைவண்டுழுந் தொடையா யெளியேன்
சிற்றி லழியேலே
யெந்தை புகழ்ச் சத்தியஞானி யெளியேன்
சிற்றி லழியேலே. (86)

மாறுஞ்சமய விருளகல மாருச் சிவசா
தனம் விளங்க
மண்ணிற் பிறந்தவர்கதிரே வந்தித்தடியார்
நினைப் பரவுந்

தோறுங்கருணை சுரந்தவர்க்குத் துகள்வந்தடையா
தளப்பவனே
துணிந்து விளையாட்டிது விளைத்தாற் றெண்டுபுரிந்
துன்பதம் பணியுஞ்

சீறுங்கரடக் களியானைச் செவ்வேலரசர் சிரம்புனையுஞ்
செம்பொன்மவுலிச்
சிகாமணியிற் றீரத் துறந்தோர் சடைமுடியி

லேறுந்துகள் காண்மணல் வளைக்குமெளியேன்
சிற்றி லழியேலே
யெந்தைபுகழ்ச் சத்தியஞானி யெளியேன்
சிற்றி லழியேலே. (87)

பிறங்கும்வயிர மிளநீலம் பிளந்துசமைத்த மாளிகையிற்
பிள்ளை யெகின மடப்பூவை
பேசுங்கிளிகள் பாலருத்தி

யுறங்குமளவும் பார்த்தெழுது மோலமனையா
ராமவுண ராடுமுறையுங் கமலைத் திருநாடா
வொளிவெண்டரள நிரை சிதறிக்

கறங்கு திரைநீர்க்கடல் குடித்த கடவுண்முனிவ
ளுச்சிரமங்கலந்து
களிக்க வானவர்கள் ககனத்திருநாட்டினு மிருந்தே

யிறங்கு மருவித் தமிழ்ப்பொருப்ப னெளியேன்
சிற்றி லழியேலே
யெந்தைபுகழ்ச் சத்திய ஞானி யெளியேன்
சிற்றி லழியேலே. (88)

ஒருவுங்கிளையு மனைவாழ்வு முறுதியலவென்
றறிவரிய வுணர்த்திக்
தருமம் புரிவித் தேயுலகத் துயிர்க
ளனைத்தினுக்குங்
குருவுஞ்சிவமு நீயாகிக் கொடிய சனன
வினை யகற்றிக்
கூடற்கரிய முத்தியினிற் கூடப்படர்த்துங்
கொழுகொம்பே
தருவுந் தரும்பொன் னிருநிதியுந் தயங்குமணியுஞ்
சுரவியும் பூந்
தண்டா மரைவெண் டவிசிருக்குந் தவளத்
திருவுந் தமனியச் செந்
திருவும் பொருந்தும் சோணாடா சிறியேன்
சிற்றில் சிதையேலே
திருந்துந் தமிழ்ச்சத் தியஞானி சிறியேன்
சிற்றில் சிதையேலே (89)

புரியுஞ்சடையுஞ் சடைமுடிமேற் பொங்கும்புனலும்
புனலுரையைப்
போலும்பிறை யசைந்தாடப் பொன்னம் பொதுவி
னடம் பயில்வோன்
கரியும்புலியு முரித்துடுத்த கயிலைப்பெருமான் சமயநெறிக்
கடலைக் கரைகண் டளந்தவனே
முகிழ் விடுக்கு மடற்பாளை
யரியும் பசுந்தேனூன் கழிந்த வகல்வாய்ச்
சுரிசங்கெடுத் தேந்தி
யுருந்திக் கடையர் மனமகிழு மள்ளற்
பழனத்திருநாடா
தெரியுந் தமிழும் வடநூலுந் தெரிந்தாய்
சிற்றில் சிதையேலே (90)

**சிற்றில் பருவம் முற்றிற்று.**

# சிறுதேர்ப்பருவம்.

வாரேறு வனமுலை மடந்தையரு மாடவரும்
மருற்றிட வமர்செய் மாலைதோறு
மாலைவெண் கவிகையிள நிலவுபொழிமதியம்
வெளிமீது படர

நீரேறு கடன்முரச மதிரவுயர் மாவில்வளர்
நீனிறக் குயில் சிலம்ப
நெட்டைக் கரும்பனையி லன்றில்வாய் விட்டலற
நித்திலமுதிர்க்கு மொற்றைப்

போரேறு கன்னற் கொடுஞ்சிலை மணங்குலவு
பூவாளி செங்கையேந்திப்
பொருவிலா வேனில்வேள் வெள்ளருவி தூங்குபொற்
பொதியத்தின் மந்தாநிலத்

தேரேறு வீதிவள மேவுபுகழாரூர
சிறுதே ருருட்டியருளே
திருவுமுத் தமிழ்மாது மருவுசத் தியஞானி
சிறுதே ருருட்டியருளே. (91)

கிளைக்கும் பொலன்றளிர்க் கற்பக நறுந்தருக்
கிழிருந் தரமாதரார் கிளரொளிமணிக்
கழங்கழகு துகிர்மெல் விரற்கேழ்மல
ரகங் கைபற்றி

முளைக்குந் தனிக்கொள்க .....மும் வந்துபின்
முறைமுறையி னெவ்வொன்றுபொய்
முன்னர்த் தவத்தொருவ ரடையாது பார்த்துநனி
முற்றித்திரும் புவமென்

வளைக்குங் கலைத்திங்கள் வதனமண் ணுந்துவரி
வளையாட வாடநீளு

மங்குல்கண் படுகுடுமி பொதுளிச் சிலம்பிடை
மறியுங்குறுந் துளிபடத்
திளைக்குந் திரைப்பொருநை சூழ்பொதிய வெற்பனே
சிறுதே ருருட்டியருளே
திருவுமுத் தமிழ்மாது மருவுசத் தியஞானி
சிறுதே ருருட்டியருளே. (92)

ஆடன்மதனுடலம் பொடித்துமுப் புரநீ றழற்படுத்துஞ்
சமர்செயு மந்தகா சுரனுயிர்
வதைத்தும் பெருங்கீர்த்தி யண்ட முழுதுஞ்
செறித்தோன்
வேடன்மலர் வாவியிற் பொருந்தவைத் தினிதூட்டும்
வெண்ணிணத் தசையருந்தும்
விண்ணவன் மனுநெறியளக்கவவன் மெய்ப்புதல்வன்
விடுதேரின் முன்னமேவும்
பாடன்மணி மறுகிலொரு கன்றுவிட் டுன்னுடைய
பத்தி......சோதிக்கவெளிதோ
பலகலைதெறித் திட......குநிகாலனென்று
பாதலத்துட் புகு(ந்)துமோர்
சேடன்முடி யுச்சிதிகழ் திகிரியுந்தய.........
சிறுதே ருருட்டியருளே
திருவுமுத் தமிழ்மாது மருவுசத் தியஞானி
சிறுதே ருருட்டியருளே (93)

கானிறை.........கடல்கிடந் தனைய தில்லைபடு
வெண்டிரைத் தெய்வதீர்த்த
மிளிர்புனல் குடைந்தாடு மேதினிவரைப்பி லுறை
மெல்லோதி மடமாதரும்
வானிறை மடந்தையரு மறியவவர் மையிலகு
வரிவிழித் துணைகள் காட்டு

மஞ்சுலா நெடும்புரிசை வருகமலை வளநாடன்
மணநாறு பொழில்கடோறுஞ்
சூனிறை பெரும்பிடி நிறுத்துக்கொழுங் *குழகு
சுருளிலைக் கதலியிட்டுத்
துடியடிக் கன்றருத்தக் களிறு மெள்ளத்
துளைக்கர மெடுத்துநீட்டித்
தேனிறை யிருலெடுக் குங்குடக வெற்பனே
சிறுதே ருருட்டியருளே
திருவமுத் தமிழ்மாது மருவுசத்தியஞானி
சிறுதே ருருட்டியருளே (94)

ஏறிட்ட கொடியுயர்......உகைத்திடு பரம
னண்ணரிய வஞ்செழுத்து
மிளநிலவு கொப்பிளிக்கும் பொடியும்முத்தி
தருமென்பது நினைந்திடாது
மாறிட்ட பரசமய வாதியர்கள் கபடமுறு
மார்பம் பிளப்பதென்ன
மண்பிளக்கக் கலிமுறிந்தோட வோடாத வாழ்வு
தொழுமடியர் பெறவே
கூறிட்ட திங்கணுதல வயன்மாதர் வனமுலை
குலுங்கக் கரங்கிடங்குங்
கோற்றொடி புலம்பப் பசுஞ்சாலி நடவுழுங்
கொழுவகி ர்ந்தளைந்து
சேறிட்[ட] பழனவள நீர்வேலி நாடனே
சிறுதே ருருட்டியருளே
திருவமுத் தமிழ்மாது மருவுசத் தியஞானி
சிறுதே ருருட்டியருளே. (95)

---

*குழகு—அழகு

வெ......... குமிழும் பொருமூக்கி னிளமாவடு
பொருவினவகி லாதிரங்தே
யிகலுநெடுங்கட் குறத்தியர்க ளிலவந்துவர்
வாயித ழினிது

விள்ளுங் குரற்குக் கிளிக்குலங்கள் விரும்பு
மினமென் றகலாது
விளையுந்தினையை யழிக்குமென வீக்குங் குமுறி
முழக்கொலியின்

துள்ளுந் திவலை தெரித்ததிர்ந்து சோதித் தருவோடி
யகழ்ந்து தூக்கி யெடுத்துவிசைத்
தடித்துச்சுருட்டிக் கிரணமணி வானறித்

தெள்ளுந் திரைநீர்ப் பொருநைதவழ் சிலம்பன்
சிறுதே ருருட்டுகவே
தெளிக்குந் தமிழ்ச்சத்தியஞானச் செல்வன்
சிறுதே ருருட்டுகவே (96)

ஈர்க்குந் திரள்வெண் பனிகுழைத்த விமயக்
குலக்கோ மளம்பிரியா
வெம்மானிருந்து நடம்புரியு மிறைவ னெளியர்
தமக்கெளியோன்

காக்குங் கரியகறை மிடற்றோன்.........ளஞ்சுகன
கங்கொடுக்கக் கொடியுயர்த்தோன்
களிக்குங் கமலாலய நகரார்

பார்க்குந் திருங்.........வயிரமறுத் திணைக்கிப்
பவளத்துருக்கள் பலவமைத்துப்
பச்சை மணியால் மேல்கூட்டு

சேர்க்குந் தாளச.............சிறுதே ருருட்டுகவே
தெளிக்குந் தமிழ்ச்சத்தியஞானச் செல்வன்
சிறுதே ருருட்டுகவே (97)

விருத்துவரி...........நறவருந்தும் விரைப்பைந்
தெரிய லிதழியொடு
வில்வத் தொடையும் பச்சறுகுங்
குருத்துமதியு மிலை...........விழைக்கக்
கூறுந்தொழும்பா
தமைவயலாய்க் கொடிய்கரம்முதலாகப்
பெருத்துவளரு மறுவ............திழிந்து பிரியமலத்
தாணவமாய்
பந்தத்திடரைப் பிளந் தொதுக்கித்
திருத்துந் துணர்ப்பூஞ்சா .........
சிறுதே ருருட்டுகவே
தெளிக்குந் தமிழ்ச்சத் தியஞானச் செல்வன்
சிறுதே ருருட்டுகவே (98)

## ( வேறு. )

பாடப்பழமறை.........ப்பைந்துளபப்
புவஞ்செங் கதிரொளி
மணிபழகிய மறுமார்பும்
பீடப்பதும்ம மெறிதரு...........மடக்கொடி கற்றவர்
புகலொரு பேராகியகனக
மாடக் கமலையர்தொழுபவ குயிலொடுமதிய........
சிலைவேளு மருண்டு வெருண்டுவிழுந்
த டப் பவனநெடுந்தே ரோடவுருட்டுக சிறுதேரே
யுத்த(தமவித்தக சத்தியஞானியு)
உருட்டுக சிறுதேரே (99)

இறையுந்திகிரி முகுந்தனு மறியவீசன் குருமயமா
யிருநில முய்ந்திட நார..............ஞன
நிறையுங் கருணையி னியதி முடித்து நிமலனை வந்தித்தும்
நிகரரி தாகிய விரத மிழைத்தும்

நித்தி.........கங்கைபடிந்து மன்னம் வழங்கியுமே
அருளிய வருமைத் திருமக னனுதின
மன்பருளத்தி னுள்ளே

யுயை.........(யு)ரிட்டுக சிறுதேரே
யுத்தம வித்தக சத்தியஞானி
யுருட்டுக சிறுதேரே (100)

கார்வாழி யந்தணர்கள்..............தழைத்து வாழி
கமலைவள நகரமொடு மேனைவள நகரமுங்
கமலமயி லோங்கி வாழி

சீர்வாழி............செந்தமிழ் கிளைத்து வாழுந்
தென் சோழவளநாடு வாழி குடகங்கிளர்
திருப் பொதிய வெற்புவாழி

யேர்வாழி...........வெண்டிறுநீறு மியல்வுபெறு
மஞ்செழுத்து
மெப்போதும் வாழி நாவலர்கள் வாழி )
முருகினிறை வுயிர்க்குமி.........

.........கேசர் வாழி நற்சைவம் பெருத்துவாழி
சந்ததமு மெய்ப்புகழ் தொண்டர்குழு வாழி
சத்தியஞானி (யுருட்டுக சிறுதேரே). (101)

**(சத்தியஞான பண்டாரத்தின்பேரிற் பிள்ளைத்தமிழ்
முற்றிற்று.)**

தஞ்சை வெற்றிவேல் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது. 7)